Registered as a Newspaper in Srilanka

முஸ்லிம் குரல்

Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல்

10 ஒக்டோபர் 2003 - வெள்ளிக்கிழமை ☆ 13 ஷஃபான் - 1424 ☆ கவடு - 21 ☆ தருகை - 20 ரூபா

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் உங்கள் கரங்களில்... வார இதழாக மக்கள் கருத்துக்களுடன்!

ரணிலுக்கு முஸ்லிம்களின் வோட்டும் வேண்டும்! இப்போது அமெரிக்காவின் நோட்டும் வேண்டும்!!

அடிப்படை மனித உரிமைகளையும், ஜனநாயகத்தையும், நாடுகளின் தனித்துவத்தையும் இறைமையையும் பாதுகாப்பதற்கான மனித குலத்தின் ஒட்டுமொத்த அபிலாஷைகளுக்கு எதிரான போக்கை பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய நாடுகள் சபை உரையின்போது வெளிப்படுத்தியமை மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். இலங்கை மக்களை உலகப் பொதுச்சபையான ஐக்கிய நாடுகள் சபையில் பிரதிநிதித்துவப்படுத்தி உரையாற்றிய பிரதம மந்திரி, இலங்கை மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரான கருத்தினை வெளிப்படுத்தியிருப்பதானது நாட்டு மக்களின் நன்மதிப்பை சர்வதேச ரீதியாக கொச்சைப்படுத்திய மிகப் பாரதூரமான தவறினை ஏற்படுத்தி உள்ளது.

சமாதானத்தையும், ஆக்கிரமிப்புக்கெதிரான மன உணர்வுகளையும் சமகாலத்தில் வெளிப்படுத்திவரும் இலங்கை மக்கள் மத்தியில்; ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை ஐக்கிய நாடுகள் சபையில் நியாயப்படுத்தி அமெரிக்காவின் கொடூரமிகு ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு நற்சான்றிதழ் வழங்கி இருப்பது ரணில் விக்ரமசிங்க அரசாங்கத்தின் போர், சமாதானம் தொடர்பான இரட்டை நிலைப்பாட்டை மிகத் தெட்டத் தெளிவாக அம்பலப்படுத்தி உள்ளது. இலங்கையில் சமாதானம் வேண்டுமென போக்குக் காட்டும் ரணில் விக்ரமசிங்க, ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தி உள்ளதும் அமெரிக்காவின் தீராத ஆக்கிரமிப்புப் பசியை ஊதி வளர்த்திருப்பதும் இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் தங்களது எதிர்காலம் தொடர்பான ஆழ்ந்த ஐயங்களை தோற்றுவித்துள்ளது.

தனது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் அமெரிக்கா மீதான விசுவாசத்தைக் காட்டுவதற்கு, ஐக்கிய நாடுகள் சபையில் தனது உரையினை பயன்படுத்தியமை உலக அரங்கில் ஆக்கிரமிப்புக்கும், அடாவடித்தனத்திற்கும் இலங்கை மக்கள் துணை போவர் என்கின்ற அவமானம் தரும் அவப்பெயரை விதைத்து விட்டது. ரணில் விக்ரமசிங்கவின் இந்த பொய்மையையும் அடிமை விசுவாசத்தையும் கண்டிக்க வேண்டிய பொறுப்பு அனைத்து அரசியல், சமூக நிறுவனங்களுக்கும் உள்ளன.

ஈராக் மீதான ஆக்கிரமிப்பு யுத்தத்தை உலக நாடுகளில் கணிசமான நாடுகள் கண்டித்து, அமெரிக்காவை தனிமைப்படுத்தியுள்ள இந்த வேளையில்; அமெரிக்க மக்களில் கணிசமானோர் ஈராக் மீதான ஆக்கிரமிப்பை வெறுக்கும் நிலையில், அமெரிக்க டொலர்களுக்காக மனித குலமே வெட்கித் தலை குனியுமளவிற்கு தனது பிரதிநிதித்துவத்தை தவறாகப் பாவித்த இலங்கைப் பிரதம மந்திரியை கண்டிப்பதும், தங்களது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதும் இலங்கை மக்களுக்குரிய உடனடிக் கடமையாகி விட்டது.

யுத்தத்தையும், ஆக்கிரமிப்பையும் வெறுக்கும் மக்களாகிய நாம் இதற்கெதிராக அனைத்து வெகுசனப் போராட்டங்களையும் மேற்கொள்ள வேண்டியுள்ளோம்!

பொறுப்பற்றதும் நம்பிக்கைத் துரோகம் மிக்கதுமான ரணில் விக்ரமசிங்கவின் அரசாங்கத்தை ஆதரித்து, பதவிச் சுகம் அனுபவிக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகள் ரணில் விக்ரமசிங்கவின் பேச்சுக்குறித்து மௌனம் சாதிப்பது முஸ்லிம் அரசியல் தலைமைகளின் கையாலாகாத்தனத்தைக் காட்டுகிறது. (அமைச்சர் அஸ்வர் ரணிலுக்கு வக்காலத்து வேறு) அல்லாஹ்வின் பெயராலும் குர்ஆனின் பெயராலும் கட்சி நடாத்துவதாகச் சொல்லிய முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் தலைமை, தனது பொய் முகத்தை கிழித்தெறிந்துவிட்டு இதுவரை இந்த விடயத்தைப்பற்றிப் பேசாது மௌனம் சாதிப்பது ஏன்?

இலங்கை முஸ்லிம் மக்கள் அடக்கப்படும்போதும், சர்வதேச ரீதியாக உலக முஸ்லிம்களுக்கு எதிரான அடக்கு முறைகள் மேற்கொள்ளப்படும்போதும், தங்களது பதவிகளைக் காப்பாற்றிக்கொண்டு அமெரிக்காவுக்கும் ரணில் விக்ரமசிங்காவுக்கும், அடிமைச் சேவகம் புரியும் முஸ்லிம் அரசியல் தலைமைகளை மக்களாகிய நாம் அடையாளம் காணும் பெரும் சந்தர்ப்பங்களில் இதுவும் ஒன்றாகும்.

பொறுப்பு வாய்ந்த பத்திரிகை என்ற வகையில் அடக்கப்படும், ஆக்கிரமிக்கப்படும் மக்களின் சார்பில் அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை மிக வன்மையாக எதிர்த்து நிற்பதுடன், ரணில் விக்ரமசிங்காவின், நாட்டு மக்களின் அபிலாஷைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபை உரையையும் கண்டிக்கிறோம். இலங்கை மக்களாகிய நாம் மனித நாகரிகத்தின் பிரதிநிதிகளே தவிர, ஆக்கிரமிப்பு அமெரிக்காவின் கைப்பொம்மைகளல்ல என சர்வதேசத்திற்கு தெரியப்படுத்துவோம்! இது நமது அனைவரினதும் கடமையாகும்!

ரணிலின் ஐ.நா. உரைக்கு முஸ்லிம்களின் கண்டனம்!



கடந்த 3 ஆம் திகதி கொழும்பு தெவட்டகஹா பள்ளி வாசல் முன்றலில் ஜும்ஆத் தொழுகையின் பின் ஸ்ரீலங்கா முஸ்லிம் சம்மேளனமும், ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டணியும் இணைந்து நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது பிடிக்கப்பட்ட படம். (படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்.)

பௌசி எம்.பி எந்தப் பக்கம்?

மக்களிடம் நன்மதிப்பைப் பெற்றவர், கடந்த இரண்டு பாராளுமன்றத் தேர்தலின் போதும் கொழும்பு மாவட்டத்தில் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றவர். கடந்த ஒருவருடகாலமாக சந்திரிகாவின் போக்கில் அதிருப்திகொண்டு தனது கருத்தினை மிக வெளியீடையாக தெரிவித்து வந்தார். இதனால் ஆத்திரமுற்ற சந்திரிகா பௌஸி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முற்பட்டபோது நீதிமன்றம் சென்று தடையுத்தரவினைப் பெற்றார். பொதுமுன்னணியில் இருந்துகொண்டே சந்திரிகாவை துணிச்சலுடன் எதிர்த்தவர் பௌஸியைத் தவிர வேறு யாருமில்லை.



இந்நிலைமையைப் பயன்படுத்தி பௌஸியை தன்பக்கம் இழுத்துக்கொள்ள ரணில்விக்கிரமசிங்க பல்வேறு பேச்சுவார்த்தைகளை பௌஸியுடன் நடாத்திவந்தார். மிகப் பகிரங்கமாகவும் பிரதம மந்திரியுடன் பௌஸி உறவுகளை வெளிப்படுத்தி வந்தார். பௌஸி அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளப்போவதாக பல தகவல்கள் வெளிவந்துமுள்ளன. ஆனால் இக்கூற்றை பௌஸி மறுத்து வந்துள்ளார்.

ஜே.வி.பி யுடனான சந்திரிகாவின் கூட்டை பகிரங்கமாக எதிர்த்தவரும் இவர்தான். ஜே.வி.பி. சந்திரிகா கூட்டு முறிவடைந்ததும் ஆட்சியை மாற்றுவதற்கான பேச்சுவார்த்தையில் ஜே.வி.பி. யுடன் சந்திரிகா ஓரளவு விலகிவிட்ட நிலையில், விரைவில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறலாம் என்ற ஐயப்பாடு தோன்றிவிட்ட அரசியல் சூழலில், பௌஸி ஓர் உறுதியான முடிவினை எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார். பௌஸியின் நிலைப்பாடு விரைவில் தெரியவரும் என்கிறது பௌஸியின் நெருங்கிய வட்டாரம்.

என்னதான் அமெரிக்காவுடன் கொஞ்சி குலாவினாலும் கடைசி நாளில்

என்ன செய்யலாம்? நிலைமை இப்படித்தான் உள்ளது. பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்று சொல்வார்கள். பொலிஸ் மா அதிபரின் கதையும் இப்படித்தான் இருந்துவிடுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். ஆச்சரியப்படும் வகையிலான இச்செய்தி வந்தவுடன்உடனடியாக உள்துறை அமைச்சர், பொலிஸ்மா அதிபர் ஆகியோர் தங் களின் மறுப்பினை தெரிவித்துள்ளனர்.

பொலிஸ் மா அதிபர் தனது கூற்றில், இந்த நபர் ஒரு போதைப் பொருள் கடத்தல்காரர் என்பது தனக்குத் தெரியாது என்றும், தன்து 30 வருடகால நண்பரொருவரின் அறிமுகத்துடன்தான் இக்கடத்தல்காரரின் மகளின் பிறந்ததின வைபவத்தில் தான் கலந்து கொண்டதாகவும் சொல்லி இருக்கிறார். தன்னை நிர்பாராதியாகக் காட்டுவதற்கு பொலிஸ்மா அதிபர் சொல்லிய வாக்குமூலத்தின்படி ஒருவேளை பொலிஸ் மா அதிபர் உண்மையிலேயே நிரபராதியாகக்கூட இருக்கலாம்.

ஆனால் பொலிஸ் விசாரணை நடவடிக்கையின்படி குற்றம் சாட்டப்பட்டவர் பொலிஸ் மா அதிபராக இல்லாது சாதாரண ஒரு பொது மகனாக இருந்தால்; இந்த வாக்குமூலத்தை பொலிஸார் ஏற்றுக் கொள்வார்களா என்பதே கேள்வியாகும். பொலிஸ் மா அதிபரின் வாக்கு மூலத்தை ஒரு முன்மாதிரியாகக் கொண்டு பொதுமக்கள் விடயத்தில் பொலிஸ் துறை இனி தனது அதிகாரத்தை தவறாகக் காட்டாதிருக்குமா?

ஈரான்மீது அணுஆயுதக் குற்றச்சாட்டு சிரியா மீது இஸ்ரேல் தாக்குதல்!

ஈரான் இரகசியமாக அணுஆயுதத்தை உற்பத்தி செய்கின்றது என்ற அச்சத்தைத் தவிர்ப்பதற்காக அதன் உற்பத்தித் தளங்களை உடனடியாகவும் முழுமையாகவும் பரிசீலனை செய்ய அனுமதிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அணு ஆயுத மேற்பார்வைத் தலைவர் வேண்டியுள்ளார். இவ்வழுத்தம் ஈரானுக்குத் தலையிடியை ஏற்படுத்தும் என்பது வெளிப்படை. ஈரானைமீது அமெரிக்கா இராணுவ ரீதியிலான நடவடிக்கை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படாவிடினும், 1981ஆம் ஆண்டில் ஈரானின் ஒஸிராக் அணு ஆயுதத் தளம்மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தியதை அமெரிக்கா வெளிப்படையாகப் போற்றியமை நினைவு கூரத்தக்கது.

இது தொடர்பாகச் சாதகமான முறையில் ஒத்துழையாவிடின் ஈரானுடனான பொருளாதாரத் தொடர்புகளை மறுபரிசீலனை செய்ய வேண்டிய நிலை ஏற்படும். சர்வதேச சமூகத்தினரிடையில் பரஸ்பர நம்பிக்கை ஏற்பட இதுவே வழியும் என்கிறது ஐ.நா. இஸ்ரேலும், அமெரிக்காவும் ஈரானுக்கெதிராகப் பல ஆண்டுகளாக மேற்கொண்டுவந்த குற்றச் சாட்டுகளின் விளைவே இக் கோரிக்கை என அபிப்பிராயம் கூறப்படுகிறது. இஸ்ரேலும் அமெரிக்காவும் இப்போது கூட்டுச்சேர்ந்து சிரியாவை நோக்கி தங்களது ஆக்கிரமிப்பு அச்சுறுத்தலை வெளிப்படுத்தத் தொடங்கி உள்ளது. இத்தாக்குதல் மத்தியகிழக்கில் பெரும் கொந்தளிப்பான சூழலை தோற்றுவித்துள்ளது.

நவம்பர் வரவு செலவுத் திட்டத்தை தோற்கடித்து ஆட்சியைக் கவிழ்க்க சந்திரிகா திட்டம்!

எதிர்வரும் நவம்பர் மாதம் ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டம் நாட்டு மக்கள்மீது பலத்த சுமைகளை ஏற்றவுள்ளதை நாட்டின் பொருளாதார நிலைமையை உணர்ந்தவர்கள் முன்கூட்டியே எதிர்வுகூறக் கூடியதுதான். கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் வரவு செலவுத்திட்டங்களில் நாட்டு மக்கள் எதிர்பார்த்த நன்மைகள் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அளிக்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகளும் அரசாங்கத்தினால் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

சமாதானத்தைக்காட்டி ரணில்விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் எதிர்பார்த்த பொருளாதார உதவிகள் அரசாங்கத்திற்கு இதுவரை கிடைக்கவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தை இடைநிறுத்தப்பட்டது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் பொருளாதார எதிர்பார்க்கையை பெருமளவு சிதறடித்துவிட்டது. அதிகரித்த வாழ்க்கைச் செலவு, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முடியாமை, தொழிற்சங்கங்களின் வேலை நிறுத்தங்கள், மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீது பரந்தளவு அதிருப்தியை உருவாக்கி வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையில் நாட்டு மக்களுக்கு "நன்மை செய்யப்போகிறோம்" என்ற தோரணையில் சந்திரிகா, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு முன்னெப்போதுமில்லாத வகையில் தீவிரமான செயற்பாட்டில் இறங்கி உள்ளதை கொழும்பு அரசியல் நிலைமைகள் உறுதிப்படுத்துகின்றன.

காத்தான்குடிக்கான தொலைத் தொடர்பு துண்டிப்பு! திட்டமிட்ட நடவடிக்கை!

04.10.2003 தொடக்கம் காத்தான்குடிக்கான 2500 தொலைபேசிகளின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்களின் பத்திரிகையொன்று ஓயாது பொய்யுரைக்கும் வீரகேசரி, தினக்குரல், தினகரன் போன்ற பத்திரிகைகள் எல்லாம் நாசவேலை காரணமாக தொலைபேசிகள் செயலிழந்திருப்பதாக நடந்த உண்மையை மறைத்து செய்தி வெளியிட்டுள்ளன. புலிகள் செய்த நாசவேலை காரணமாக முஸ்லிம் பிரதேசமான காத்தான்குடியின் 2500 தொலைபேசிகள் செயலிழந்திருப்பதாக எழுதுவதற்கு இந்த புலிச்சார்பு பத்திரிகைகள் முன்வரவில்லை. என்ன நடந்து என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும்.

சில காலத்துக்கு முன்னரும், புலிகளின் இந்த நாசவேலை காரணமாக காத்தான்குடிக்கான தொலைபேசிகள் செயலிழந்தன. இதுபற்றி விசாரித்ததில், மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகக்கூடிய தொலைபேசிகள் பாவனையில் உள்ள இடம் காத்தான்குடியாகும். இதன் மூலம் கோடிக்கணக்கான ரூபாய்களை டெலிகொம் நிறுவனம் வருமானமாக பெற்றுக்கொண்டிருக்கின்றது. இவ்வாறு வருமானம் கிடைக்கும் ஒரு பகுதியின் தொலைபேசிகளை துண்டிப்பதன் மூலம் மட்டும் டெலிகொம்மில் இருந்து புலிகள் பெறும் கப்பம்

☞ 14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனச்சாட்சியும், மனத்தைரியமுமுள்ள ஒருவரால் ஊமையாக இருக்க முடியாது

...ிஞர் சித்திலெவ்வை அவர்களது ...லத்தில் ஒரு 'முஸ்லிம் நேச'னின் ...ருகையின் முக்கியத்துவம் போல். ...ன்று ஒரு 'முஸ்லிம் குர'லின் ...ருகை மிக முக்கியமானது ...ன்பதை உணர்ந்து செயல்படும் ...ங்கள் சேவைக்காக உங்களை ...ப்படி பாராட்டுவதென்று ...ரியாமலிருக்கின்றேன்.

...ங்கள் மீது எனக்கு பிறந்த. பலத்த ...ம்பிக்கைக்கு அளவே இல்லை. ...லத்தின் மாற்றத்தையும் ...தவையையும் உணர்ந்த ...தீர்க்சியின் வெளிப்பாடு அது.

...னச்சாட்சியும். மனத்தைரியமுமுள்ள ...ருவரால் ஊமையாக இருக்க ...யாது. நியாயமான மக்கள் ...தியத்துக்காக கொதிக்காமலும் ...ருக்க முடியாது. உங்களது ...வொரு துடிப்பும் சமூக ...ழிப்புக்காக. விடுதலைக்காக விருட்சமாகி தலைவிரித்து நிழல் தரும் என்று நம்புகின்றேன். அதற்காக கைகொடுத்து துணைபுரிகின்றேன். பணி தொடர்க.

முஸ்லிம் குரலை உயர் அதிகாரிகள், அரச உத்தியோகத்தர்கள், புத்திஜீவிகள், பாமரர்கள் அனைவருக்கும் அறிமுகப்படுத்துகின்றேன். வாழும் வரை சமூகத்துக்காக வாழ்வோம்

கவிஞர் அன்புடன்
அட்டாளைச்சேனை.

பதிலோடு வா!.... வா....!!

முஸ்லிம் குரலே!
ஒவ்வொரு
வெள்ளிக் கிழமையும்
நீ
எனக்கு
மூச்சாக
வருகிறாய்
நீ
ஓய்வெடுத்தால்
நான்
பாய் விரிக்கிறேன்
நீ.... நீ தான்
வராதபோது
எனக்குப் பல
ஏமாற்றம்
இதற்கு உனது
எஜமான்
ஆசிரியரின்
பதிலோடு
பறந்து வா!

- மூதூர் நிஸ்வின்

கடமையுணர்ந்த பத்திரிகை

...ஸ்லிம்களின் உரிமைகளை ...வளிக்கொணர முஸ்லிம்களுக்கு ...ரு ஊடகம் இல்லையே என ...லாய்த்துக் கொண்டிருந்த ...ஸ்லிம்களுக்கு முத்தாய்ப்பாய் ...மைந்தது "முஸ்லிம் குரல்". ...வே முஸ்லிம் குரல் ...ஸ்லிம்களின் பிரச்சினைகள். ...புகள் முன்னெடுக்கப்படும் போது ...தற்குரிய களமாக அமைக்கப்ப ...தும். கட்டிக்காட்ட வேண்டிய ...யங்களை நிதர்சன நோக்குடன் ...டுவதும் எமது குரலுக்குரிய ...ர்த்துவமாகும். எனவே இதுவரை ...ளிவந்த "முஸ்லிம் குரல்" ...வப்போது தன் கடமையை ...ணர்ந்து செய்துள்ளது. இனிவரும் ...லங்களிலும் ஆக்கபூர்வமான ...த்துக்களையும் ஆலோசனைக ...யும் வழங்க வேண்டும். ...திரிகை ஒன்று வெளியிடப்படு ...றது என்றால் அங்கு அதன் ...ன்னணியில் ஒரு அரசியல் ...தியோ. அரசியல் கட்சியோ இருப் ...த எமது கடந்த கால வரலாற் ...ல் கண்டு கொண்ட உண்மைகள். ...னால் இவற்றுக்கெல்லாம் ...றிலும் வேறுபட்ட வகையில் ...களின் உணர்வுகளை ...ய்திகளை உண்மையாகவே ...ளியிடுவது முஸ்லிம் குரலின் ...ர்த்துவப்பாதை. இது ...டர்ந்தும் வெளிவர முஸ்லிம்கள் ...னைவரும் ஒத்துழைப்பு நல்க ...ண்டும் என வேண்டுகிறேன்.

-எம். ஐ. எம். றியாஸ்,
ஓட்டமாவடி

எங்கள் குரல் ஓங்கி ஒலிக்கட்டும்

நீண்டகாலமாக நமக்கென்று தொடர்பூடகம் இன்றி, ஊதுவது எல்லாம் குழல் என்ற நம்பிக்கையில் மாற்று இன ஊடகங்களின் மீது. அவர்களின் மாற்றாந்தாய் மனப்பான்மைக்கும் அடிமைப்பட்டுக்கிடந்த முஸ்லிம்களை தட்டியெழுப்ப வெளிவந்து கொண்டிருக்கும் முஸ்லிம் குரலின் பணி மகத்தானது. எம் சமூகத்தின் தலைவிதி தொடர்பு சாதனங்கள் இன்றேல் உரிய முறையில் தீர்மானிக்கப்படமாட்டாது என்று புத்திஜீவிகள் காலங்காலமாகக் கூறி வந்த கருத்தையும். எம் முனகல் சத்தம் எதுவரை கேட்கிறது. "எங்கள் குரல்வளைகள் நசுக்கப்படும் ஒலிகள் உலகிற்கு மட்டுமல்ல உள் நாட்டிற்கே கேட்பதில்லை" என்ற காலங்காலமான முஸ்லிம் சமூகத்தின். அப்பாவிப் பொது மக்களின் ஏக்கத்தையும் அரவணைத்து. எம் சமூகத்தின் கருத்தை அரசியல்வாதிகட்கும். அடுத்த இனச் சகோதரர்கட்கும் எடுத்துரைக்கும் உறுதி பாராட்டத்தக்கது. உங்கள் பணிகள் சிறக்க முஸ்லிம் சமூக சேவை நிறுவனங்களும், நலன்புரி அமைப்புக்களும் ஆதரவளித்து முன்னெடுக்க உதவ வேண்டும் எனவும் வேண்டி முஸ்லிம் குரல் எங்கள் குரல், என்றும் ஓயாது உரைக்க ஒற்றுமைப்படுவோம்.

முபிஸால் அபூபக்கர்,
இக்பால் சனசமூக நிலையம்,
கல்முனை.

உன் பயணம் தொடர வேண்டும்!

...தேசத்தில் நமது குரலுக்கு நடக்கும் அநியாய ...ளையும். அட்டூழியங்களையும் அப்படியே சித்தரி ...க் காட்டி. நம் தேசத்தின் விடுதலைக்காய் ...ானமானுள்ள இஸ்லாமிய சகோதரனைப் போல் ...ல் படும் எங்கள் தேசத்தின் மைந்தன் நீ. ...குறுகிய இலங்கைக்குள் எம் இஸ்லாமிய ...ஞ்சங்களுக்கும் இவ்வுண்மைகளை எத்திவை ...ப் பரப்பட வேண்டும் நீ.

உன் பயணம் தொடர வேண்டும்
நீ காலமெல்லாம் எமக்கு
வீரக் கதை சொல்ல வேண்டும்
...றைதுணையுடனும் வாழ்க.... வளமுடனும்.

ஏ. அ. முஸ்தீன் அசனார்
நேரிய குளம் - வவுனியா

உயிர் காக்கும் ஆயுதம்

இலங்கை வாழ் முஸ்லிம்களின் இருப்பியலும். வாழ்வியலும் ஒரு கேள்விக் குறியாய்ப் போயிருக்கும் ஒரு சூழ் நிலையில் முஸ்லிம்களின் நிலையை உண்மையாக விளக்கும் ஒரு ஊடகம் இல்லாதது எம்மை மேலும் பலவீனர்களாக்கியுள்ளது.

அக்குறையை நிவர்த்தி செய்வதுபோல் 'முஸ்லிம் குரல்' பத்திரிகை மானம்காக்கும் ஆடையாகவும். உயிர்காக்கும் கதாயுதமாகவும் புறப்பட்டிருக்கிறது.

-ஜே. றாஸி முஹம்மத்.
அக்கரைப்பற்று.

தமிழர் புனர்வாழ்வு கழகம் நிவாரணம் தருமா?

...கரைப்பற்று உடையார் வீதியில் வசித்து தற் ...து அட்டாளைச்சேனை தைக்கா நகர் கிரா ...ல் வசித்து வரும் முஹம்மதிஸ்மாயில் அப்துல் ...ர் ஆகிய எனக்கு வயது 65 நான்கு பெண் ...ளைகள் உள்ளனர்.

...ாது ஒரேயொரு ஆண் பிள்ளையான ஜெரீன் ...அழைக்கப்பட்டு வந்த மபாயிஸ் என்பவர் 1985ம் ...ண்டு தமிழ் இயக்கங்களின் ஆயுதக் கிளர்ச்சிப் ...சார மாயையில் வழி தவறியதால் 1985.05.31ம் ...தி வீவேட அதிரடிப் படையினால் துரத்திச் ...ல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டார்.

...ர்பர்களோடு தேநீர் அருந்திக் கொண்டிருக் ...யில் அரச படையினால் சுற்றிவளைக்கப்பட்டே ...ர்பர்களும். உறவினர்களும் பார்த்திருக்க ...டபெற்றது.

...ஸ்லாமிய முறைப்படியாக நல்லடக்கத்திற்கு ...ாஸா கையளிக்கப்படவில்லை. அரச விரோத ...வடிக்கையில் ஈடுபட்ட குற்றத்திற்காக புனர்வா ...நஷ்டஈடு கூட பெறமுடியவில்லை.

...ோடி கோடியாக வெளிநாட்டு உதவி பெற்று ...ாளிக் குடும்பத்துக்கு உதவி வழங்கி வரும் ...கழகம் எனது மகனது இழப்புக்குரிய நஷ்ட ...ட பெற ஆவன செய்யுமா?

எம்.ஏ. கபூர். அட்டாளைச்சேனை

குழாய் நீருக்காக ஏங்கி நிற்கும் கிண்ணியா குக்கிராம மக்கள்

கிண்ணியாவில் ஆரம்பகால குழாய்நீர் விநியோகம் கிண்ணியா நகருக்குள் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில். காணப்பட்டபோது. உண்மையில் நகர்ப் பகுதியைவிட கிண்ணியாவை உள்ளடக்கிய கச்சக் கொடித்தீவு. நடுத்தீவு. முனைச்சேனை. பைஸல் நகர். சலாமத் நகர். மகாமாறு. உப்பாறு. ஆலங்கேணி போன்ற குக்கிராமப் பகுதிகளில் தூய்மையற்ற சவர் நீரே காணப்படுவதால் மக்கள் குடிநீரின்றி அல்லலுறும் அசௌகரிய பரிதாப நிலை தொடராகவே இருந்து கொண்டிருக்கின்றன.

விசேடமாக நடுத்தீவு. கச்சக்கொடித்தீவு. மகாமாறு போன்ற பகுதி பாடசாலைப் பிள்ளைகள் நீரின்றி படும் துன்பம் சொல்லிலடங்கா தவை. இதனூடாக நீர் தேடிப் பக்கத்து வீடுகளுக்கு மாணவர்கள் அங்கும் இங்கும் அலைய வேண்டி இருப்பதால் பாடசாலையில் ஒழுக்கக் கட்டுப்பாடுகள் சீரழிந்து செல்வதற்கு இவ்விடயம் களம் அமைக்கின்றன.

தூய்மையற்ற சர்வ நீரை இப்பகுதி மக்கள் பழக்கப்படுத்தி வந்தாலும் மத்திய கோடை காலம் இப்பகுதி கிணறுகள் முற்று முழுதாக வற்றிவிடுவதும் இதன் பின் காணப்படும் நீருக்கான பிதாப நிலை பெருகி செல்லும் நீர் பெறவேண்டியதொரு அவசியமாகி விடுகின்றது. போக்கும் பொருட்டு இப்பகுதி மக்களுக்கே குழாய் நீர் மிக அத்தியவசியமென கண்டறியப் பட்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நஜீப் அப் துல் மஜீத் அவர்களினால் 2001ஆம் ஆண்டு காலப்பகு தியில் 16 1/2 கி.மீற்றர் தூரப்பரப்பளவில் மேற்கூறிய குக்கிராமப் பகுதியை உள்ளடக்கி குழாய் பொருத்தப்பட்டுள்ளன. குழாய்களைக் கண்ட பொது மக்கள் மன ஆறுதலடைந்து எப்போது நீர் வரும். எப்போது நீர் வரும் என எதிர்பார்த்து தண்டக் குடல் வற்றும் அளவுக்கு காலம் கடந்து மனம் நொந்த நிலையில் காணப்படுகிறார்கள். கிராம மக்கள் குளிப்பதற்கோ. கார் கழுவுவதற்கோ. நீர்த்தடாகம் நிறைப்பதற்கோ நீர் கேட்கவில்லை. குடிப்பதற்கு மாத்திரம் ஆகக் குறைந்தது 2 மணித்தியாலமாவது நீர் விநியோ கம் செய்து இப்பகுதி மக்களின் பிதாப நிலையை துயர் துடைக்க பகுதி உயர் அதிகாரிகளோ. பாராளுமன்ற உறுப்பினர்களோ முன்வரல் அவசியமானது.



அபூத்தாலிப் முகம்மது பாஸுக். கிண்ணியா 5

மணல் வீதிகள்

சாய்ந்தமருது உள்ளூர் வீதிகள் பல மணலாக காட்சியளிக்கின்றன. இதனால் சைக்கிளில் செல்லும் பலர் இறங்கிச் செல்ல வேண்டியுள்ளது. இதே வேளை பல வீதிகள் நீர் இணைப்புக்காக வெட்டப்பட்டு மணலாக காட்சி தருகின்றன. எனவே இதனை உரியவர்கள் கவனத்திற் கொண்டு மணலை அகற்றி உடன் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன்.

கே. எல். ஹில்மி
சாய்ந்தமருது - 13

மன்னார் சம்பவம் தொடர்பாக தமிழ் ஊடகங்கள் தவறான தகவல்கள்



மன்னாரில் கிறிஸ்தவர்களுக்குச் சொந்தமான தேவாலயம் ஒன்று உடைக்கப்பட்டதாக கடந்த முதலாம் திகதி பத்திரிகைகளில் வெளிவந்த முன்பக்கச் செய்திகள். மிகவும் பக்கச்சார்புடன் எழுதப்பட்டிருந்தன. அவைபற்றிய சரியான தகவல்களை தருவதற்கே இதுப ற்றி எழுதுகிறேன்.

மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம்கள் கணிசமான தொகையில் வாழ்ந்து வந்தனர். புலிகள் முஸ்லிம்களை மன்னாரில் இருந்து வெளியேற்றுவதற்கு முன்பு இன்று இச்சம்பவம் நடைபெற்றுள்ள எருக்கலம்பிட்டித் துறையிலுள்ள இந்த ஊசிமுக்கான் துறை எருக்கலம்பிட்டியின் ஒரு கரையோரமாகும். மன்னார் மாவட்டத்தில் எருக்கலம்பிட்டிக் கிராமம் 100வீதம் முஸ்லிம்களைக் கொண்ட பிரதேசமாகும். 1990இல் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களில் ஒரு பத்து சத வீத முஸ்லிம்களே எருக்கலம் பிட்டியில் மீளக் குடியேறி உள்ளனர்.

இந்த ஊசிமுக்கான் துறையில் மன்னாரில் உள்ள பள்ளிமுனைக் கிராமத்தில் இருந்து (சிறிஸ்தவக் கிராமம்) மீன் பிடிக்க வருபவர்கள் இவ்விடத்தில் இழைப்பாறிச் செல்வது வழக்கம். இவ்விடத்தில் தங்கிச்செல்லும் மீனவர்கள் இவ்விடத்தில் சிலுவைகளை நாட்டிச் செல்வதும் அதனை ஊரவர்கள் அப்புறப்படுத்துவதும் முன்பு பலமுறை நடந்த நிகழ்வுகள்தான்.

எருக்கலம்பிட்டியிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதன் பின் இந்த இடத்தில் சிலுவை நட்டப்பட்டு கொட்டில் ஒன்றும் கட்டப்பட்டுள்ளதாக வெளியேறி வாழ்ந்த முஸ்லிம்களுக்கு தெரிய வந்தது. எப்போது தமது ஊருக்குத் திரும்பிப் போவோம் என்ற ஏக்கத்திலிருந்த மக்களுக்கு அன்று இவ்விடயம் ஒரு முக்கிய செய்தியாக இருக்கவில்லை. ஆனால் ஊருக்கு திரும்பிய போது அவ்விடத்தில் கற்களால் ஒரு சிறிய தேவாலயம் உருவாகி இருப்பதைக் கண்டு மக்கள் அசந்து விட்டனர்.

பலமுறை இது பற்றி பேசிய போதும் உரியவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. - இதனால் ஆத்திரமடைந்த சிலர் இத்தேவாலயத்தை உடைப்பதற்கு முயற்சி எடுத்துள்ளனர். - இத்தேவாலயம் உடைப்பு மிகவும் தவறான செயல் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை. ஆனால் இவ்விடத்தில் தேவாலயம் கட்டியது சரியென வாதிடவும் முடியாது! ஏனெனில் இவ்விடத்தில் கிறிஸ்தவர்கள் வாழவும் இல்லை. அவர்களுக்கான குடியிருப்புக்களும் இல்லை. (இப்பிரதேசம் அரச காணியாகும்)

எருக்கலம்பிட்டிக் கிராமம் நூறு வீதம் முஸ்லிம்களைக் கொண்டது போல் பள்ளி முனைக் கிராமமும் நூறு வீதம் கிறிஸ்தவர்களைக் கொண்டதாகும். இவ்விரு ஊர் மக்களுக்குமிடையில் ஆண்டாண்டு கால சீரான உறவுகள் நிலவி வந்தது. பள்ளிமுனைக் கிராமத்திற்கும் எருக்கலம்பிட்டிக்குமிடையே நிலத் தொடர்பு கிடையாது இடையில் ஒரு ஏரி உள்ளது.

உண்மை இப்படி இருக்க ஊடகங்கள் பள்ளிமுனைக் கிராமத்திலுள்ள ஊசிமுக்கான் துறையில் கிறிஸ்தவர்களின் தேவாலயம் முஸ்லிம்களால் உடைக்கப்பட்டது என எழுதுவது மிகவும் திட்டமிட்ட உள்நோக்கம் கொண்டதாகும் - எருக்கலம்பிட்டியிலேயே இந்த ஊசி முக்கான்துறை உள்ளது. தங்களது கருத்தை நியாயப்படுத்தவும் முஸ்லிம்களைத் தவறாகச் சித்தரிக்கவும் கடல் ஏரிக்குள்ளால் ஊர்களை தூக்கி வந்து கற்பனையில் வைக்க இந்த தமிழ் ஊடகங்கள் முற்படுகின்றன. உண்மை தெரிந்தவர்களுக்குத் தெரியும்.

இப்பிரதேசம் அரச காணியாகும் என்பதால் ஒரு வேளை தேவாலயத்தைக் கட்டுவதற்கு மன்னார் அரசாங்க அதிபர் முயற்சிக்கலாம். மக்கள் வாழாத ஓர் இடத்தில் தேவாலயம் அமைக்க முற்படுவது முஸ்லிம்களை அதிகம் அச்சப்படுத்துகிறது.

தகவல் - றாசிக் எம். குவைதீர்கான்.

இன்னாலில்லாஹி வயின்னா இலைஹி ராஜிஊன்

அனுசரணையாளர்களாக ஆகி நிற்கிறார்கள் மர்ஹூம் தலைவா!
வினை மதிக்க முடியாத உன் பேரிழப்புக்கு
ஜம்பது இலட்சம் ரூபா அரச சன்மானத்தால்
பெறுமதி ஒப்புக் கொண்ட உன் பொண்டாட்டியும்
இன்னுஞ்சிலரும்
மௌனமாக இருப்பது உனக்குத் தெரியுமா?

அல்லாஹு அக்பர், பிஸ்மி, அல்குர்ஆன் ஆதியன
பூத்துக் குலுங்கியவுன் தனித்துவ மரக் கொப்புகளிலே
சண்டியர்களும் துரோகிகளும்
பகிரங்கமாக உட்கார்ந்து
சுயநலப் பழங்களை சுப்பிக் குப்பி சுவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
உன் மரண விசாரணை மடுவுக்குள் சிக்கையில்
உனது மக்களின் நெஞ்செதிரி
எதிரிகளின் துப்பாக்கிகள் எக்கச்சக்கமாக நீண்டிருக்கையில்
உன் படம் போட்டு பிச்சைக்காரப் பெறுமதியில்
முத்திரை அச்சடித்து
நூறு பட்டர் ஒட்டர் போட்டு போல
சுத்தம் ஓதி சுந்தரி பகிர்ந்து எல்லாம்
உன் வசீகர முகத்தில் காறித்துப்பியதற்கு சமனென்று
நான் சத்தியம் பண்ணிச் சொல்வேன்.

லஹீராதானாய் தலைவனே!
உன் வீரமிக்க அரசியலில், உன் பர நிழலால் தயவு பெற்ற
அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் எம்பிக்கள்
உனதிலட்சியத்தை உனது கட்சியை
ஜனாஸாவாக்கி வைத்திருக்கிறார்கள்
நல்லடக்கம் செய்வதற்கு நாள் பார்த்து.
இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

- எம். எல். எம். அன்ஸார் -

உலக இளைஞர் பேரவையின் முஸ்லிம் விவகார ஆலோசகராக காலித் பாறூக் அவர்கள் நியமனம்.

சர்வதேச முஸ்லிம் சமூகத்தின் அபிவிருத்தி. பிரச்சினை நிகழ்வுகள் ஏனைய பல பொது விடயங்கள் போன்றவற்றைக் கையாள்வதற்காக இலங்கையைச் சேர்ந்த ஜனாப். காலித் பாறூக் அவர்கள் உலக இளைஞர் பேரவையின் முஸ்லிம் விவகார ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மலேசியாவில் தலைமைக் காரியாலயத்தைக் கொண்டியங்கும் உலக இளைஞர் பேரவையின் தலைவராக மலாக்காவின் முதலமைச்சர் மதிப்பிற்குரிய டாட்டு ஸ்ரீ முஹம்மட் அலி முஹம்மட் றுஸ்தாம் அவர்கள் பதவி வகிப்பதுடன் அதன் பொதுச் செயலாளராக சிம்பாப்பேயைச் சேர்ந்த டொனால்ட் சம்பிரா அவர்கள் கடமையாற்றுகின்றார்.

வை.எம்.எம்.ஏ. பேரவையின் தேசியத் தலைவராக 1998 முதல் 2001 வரை கடமையாற்றிய காலித் பாறூக் அவர்கள் தற்போது நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும் சர்வதேச விவகாரங்கள். விஷேட செயற்திட்டக் குழு என்பனவற்றின் தலைவராகவும் கடமையாற்றுகின்றார். இவர் தற்பொழுது முஸ்லிம் சமூக ஆய்வு நிலையத்தின் நிர்வாக இயக்குனராகவும் பணியாற்றுகின்றார்.

மருதமுனை நற்பிட்டிமுனை சமூர்த்தி வலய. சமூர்த்தி உதவி பெறும் குடும்ப உறுப்பினர்களுக்கான கடன் வழங்கும் வைபவம் மருதமுனை மக்கள் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலய வங்கிச் சங்க முகாமையாளரும். மருதமுனை. நற்பிட்டிமுனை வலய முகாமையாளருமான எஸ்.எஸ். பரீஹா சஹீட் தலைமைதாங்கி உரை நிகழ்த்துவதையும் கல்முனை சமூர்த்தி மகா சங்கத் தலைவர் ஏ. சி எம். கமாதீன் சமூர்த்தி உதவி பெறும் ஒருவருக்கு கடன் வழங்குவதையும். உதவி முகாமையாளர் ரவூப் அருகில் நிற்பதையும் காணலாம்.

படமும், தகவலும் :
மருதமுனை செய்தியாளர்.

நீர் வெட்டு தவிர்க்கப்படுமா?

கொழும்பு-10. மாளிகாவத்தை. ஜும்ஆ மஸ்ஜித் வீதியில் அமைந்துள்ள தொடர்மாடிப் பகுதியிலும், இவ்வீதியைச் சூழ்ந்துள்ள தோட்டங்களிலும் பெரும்பாலான முஸ்லிம்கள் குடியிருப்பது தெரிந்ததே. முஸ்லிம்களுக்கு முக்கிய தினமான பிரதி வெள்ளிக்கிழமை. நோன்பு பெருநாள் தினம். ஹஜ்ஜூப் பெருநாள் தினம் போன்ற நாட்களில் குழாய் நீர் விநியோகம் முற்றாகத் தடைப்படுவதும். குறைக்கப்படுவதும் ஒரு தொடர் கதைபோல் நடந்து வருகின்றது. இதனால் குறிப்பாக இங்கு வாழும் முஸ்லிம்கள் பெரும் அவல நிலைகளை எதிர் கொள்கின்றனர்.

நீண்ட காலமாக இருந்து வரும் இப்பிரச்சினையை உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு பல முறை உத்தியோகபூர்வமாகக் கொண்டுவந்தும் இதுவரை எவ்வித்தமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாது இருக்கின்றது. இதனால் இதுவொரு திட்டமிட்ட செயலே என்ற ஐயம் இங்குள்ள மக்களிடம் காணப்படுகின்றன. இனியும் காலதாமதமின்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இப்பகுதி மக்கள் வேண்டுகின்றனர்.

எம்.எப்.எம். இர்ஷாத்
மாளிகாவத்தை, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11 வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த / கொடுமையின் துயரை யார் எடுத்துரைப்பர்?

இன்றைய நிலையில் முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட. இழைக்கப்பட்டு வரும் கொடுமைகளை எடுத்துரைப்பதற்கு யாருளர் என்பதே நமது மக்களின் கேள்வியாகும். - இத்துயரம் தரும் பலவீனங்களுக்கு மத்தியில் நமக்குள்ளேயே வறிய; கல்வி வாய்க்கப்பெறாத மக்களின் துயரங்களை அவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரத்தை நாம் அழுத்திச் சொல்வதில் பெரிய தயக்கங்களும். பெரும் தவறுகளும் நடந்தே வருகின்றன. இதற்கு தக்க சான்றுதான் 1992 ஒக்டோபர் 15ல் நடந்தேறிய அழிஞ்சிப் பொத்தானை முஸ்லிம் கிராமம் மீதான படுகொலையாகும்.

இப்படுகொலை நடந்தேறிய 11 வருடங்கள் இவ்வாரத்துடன் வாரத்துடன் நிறைவு பெற்று விட்டன. ஆனாலும் நாம் இந்த அழிஞ்சிப் பொத்தானை ஏழை விவசாய தொழிலாளர் முஸ்லிம்களின் படுகொலை தொடர்பான அதிக அழுத்தத்தை நமது சமூக அரங்கில் இருவரை காட்டவே இல்லை. இதற்கு பல்வேறு பட்ட காரணங்கள் இருந்தாலும் இம் மக்கள் வறிய, கல்வி வாய்க்கப்பெறாத மக்களாக இருப்பதே பிரதான காரணம் என நாங்கள் கருதுகிறோம்.

கடந்த ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி ஷுஹதாக்கள் தினத்தை காத்தான்குடியில் பிரமாண்டமாக நமது சக்திகள் ஞாபகம் கொண்டன. அதற்கு அடுத்த ஒரு வாரத்தினுள் ஏறாவூர் படுகொலை தினத்தை ஏறாவூர் மக்கள் ஞாபகப்படுத்தினர். உதாரணத்திற்கு இவ்விரு ஞாபக தினங்களை எடுத்துக் கொண்டாலும் - காத்தான்குடிப் படுகொலை ஞாபகத்தைப் பார்க்கிலும் ஏறாவூர் படுகொலை ஞாபகார்த்த தினம் அதிகளவு அழுத்தத்துடன் வெளிப்படுத்தப்படவில்லை. இவற்றைக்

அழிஞ்சிப்பொத்தானை ஒக்டோபர் 15

கூர்மையாக அவதானித்தோர் விளங்கிக் கொள்வர்.

அந்த வரிசையில் புலிகளால் 1992 ஒக்டோபரில் நமது அழிஞ்சிப்பொத்தானை முஸ்லிம்கள் மீது ஒக்டோபர் 15ல் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளை நினைவு கூர்வதற்காக

Asia Watch expressed outrage today at the reported massacre on October 15 of over 150 people, including at least 115 Muslim civilians, by the Liberation Tigers of Tamil Eelam (LTTE) in northcentral Sri Lanka, and urged the Sri Lanka security forces and Muslim groups not to respond in kind. "We utterly condemn these brutal attacks. They are a blatant violation of humanitarian law, which the LTTE leadership has pledged to uphold", said Sidney Jones Executive Director of Asia Watch. Asia Watch appealed to all combatants to protect the rights of civilians in the ongoing civil war and to cease indiscriminate attacks.

எந்தவிதமான தடயங்களையும் நமது சமூக அரங்கில் நாம் காணவில்லை. அக்கொடூர படுகொலையை ஞாபகம் கொள்வதும்; அதன் அரசியலை மேற்கொண்டுவருவதும் நமது சமூகக் கடமையாகும்.

அழிஞ்சிப்பொத்தானை விவசாயக் கிராமத்தில் உறங்கிக் கொண்டிருந்த 150க்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்ப உறுப்பினர்களை வெட்டியும், சுட்டும் புலிகள் கொன்றனர்-இம் மக்கள் கொல்லப்படுவதற்கு எந்தவிதக் காரணமும் இருக்கவில்லை- 1990களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நிலைகொண்டிருந்த முஸ்லிம்கள் மீதான இன அழிப்பைத் தொடர்ந்து. மட்டக்களப்பிற்கு எல்லைக் கிராமமான அழிஞ்சிப்பொத்தானை முஸ்லிம்கள் புலிகளின் கொடூர இரத்த வெறியாட்டத்திற்கு இரையாகினர்- பெண்கள், சிறுவர், முதியோர் என எந்த வித்தியாசமும் புலிகளுக்கு இருக்கவில்லை. இன்றும் கூட அழிஞ்சிப்பொத்தானை கிராமம் இப்படுகொலை அதிர்ச்சியில் இருந்து மீள வில்லை எனபதை இம்மக்களின் வாழ்வு நிலையில் இருந்து காணக் கூடியதாக உள்ளது.

முஸ்லிம் மக்கள் போராட்டத்தை ஆதரித்துப் பலப்படுத்துவோம்

இனப்பிரச்சினைத் தீர்வில் வடக்கு கிழக்கு முஸ்லிம் மக்கள் மீது காட்டப்படும் பாரபட்சங்களை இலங்கை அரசாங்கத்தின் நிறைவேற்று அதிகாரமுடைய தலைவி என்ற வகையில் ஜனாதிபதிக்கும் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கும் தெரியப்படுத்தி நீதி பெற்றுக் கொள்வதற்காக 'முஸ்லிம் மக்கள் தேசாபிமான அமைப்பு' முஸ்லிம் மக்களின் ஆணையைக் கோரும் செயற்றிட்டமொன்றை இம்மாதம் 14ம் திகதியில் இருந்து ஆரம்பிக்கிறது. முஸ்லிம் கிராமங்கள் தோறும் கையொப்பம் கோரும் நிகழ்வும், எதிர்வரும் 17ம் திகதி வெள்ளிக்கிழமை கிழக்கின் ஒவ்வொரு முஸ்லிம் கிராமங்களின் ஜும்ஆ பள்ளிகளில் இருந்தும் ஜும்ஆ தொழுகையின் பின் ஆர்ப்பாட்டப் பேரணியும், 19ம் திகதி அம்பாறை மாவட்டத்தின் மத்தியில் மாபெரும் ஆதரவு தேடும் பொதுக்கூட்டமும் இடம்பெறும். இந்த நிகழ்வுகளில் கலந்துகொள்வது நமது மக்களின் கடமையாகும்.

கையெழுத்துப் பெறுவதற்காக உங்கள் கிராமங்களுக்கு வரும் நமது மக்கள் பிரதிநிதிகளிடம், வேண்டுகோள் பத்திரத்தில் கையெழுத்திட்டு முஸ்லிம் மக்களின் தீர்வுக்கும் பாதுகாப்பிற்கும் மக்கள் ஆணையை வழங்க முன்வர வேண்டுமென்று முஸ்லிம் மக்கள் தேசாபிமான அமைப்பு அழைப்பு விடுக்கின்றது.

மக்கள் கோரிக்கைகள் பின்வருமாறு

அதி மேதகு ஜனாபதியிடம் கிழக்கு முஸ்லிம்களாகிய நாம் கையொப்பமிட்டு பின்வரும் கோரிக்கைகளை சமர்ப்பிக்கிறோம்.

முஸ்லிம் மக்கள் தேசாபிமான அமைப்பு
கோரிக்கைப் பத்திரம் - 2003 ஒக்டோபர்

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து கடந்து 2 வருட காலத்திற்குள் கிழக்கு முஸ்லிம்களாகிய நாம் அரசியல் சமூக பாதுகாப்பு, கலாசாரம், பொருளாதாரத் தளங்களில் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளோம்! எமக்கு எந்தவிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லை. சமாதானப் பேச்சுவார்த்தை என்ற பெயரில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களை புலிகளின் ஏகபோகத்தின் கீழ் கையளிப்பதற்கான அனைத்து முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.

இம்மோசமான அரசியல் சூழலில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் பேசா மடந்தைகளாக உள்ளனர். மூதூர், வாழைச்சேனை என எமது மக்கள் அழிக்கப்படுகின்றனர். கடத்தல், இனக்கொலை, அச்சுறுத்தல், பொருளாதாரத்தடை, கப்பம் என வடக்கு கிழக்கு முஸ்லிமகளின் வாழ்வு முற்றுகையிடப்பட்டுள்ளது.

இலங்கை நாட்டின் தலைவி என்ற வகையில் தாங்கள் எமது மக்களை பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கையை எடுக்குமாறு பொதுமக்களாகிய நாம் உங்களை வேண்டுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள
கிழக்கு வாழ் முஸ்லிம் மக்கள்.

* தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பேரில் நடைபெறும் இன்றைய "அரச- புலிகள்" பேச்சு வார்த்தையில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் சமூக உரிமைகளை பேணுவதற்கும். வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்பைஉத்தரவாதப்படுத்துவதற்கும் தங்களின் அரசியல் அமைப்பு அதிகாரத்தை பாவிக்குமாறு வேண்டுகிறோம்!

* இடைக்கால சபை என்ற பெயரில் வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அடிப்படை அரசியல் சமூக உரிமைகளை புலிகளுக்கு தாரைவார்த்துக் கொடுக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் ஒரு தலைப்பட்சமான அரசியல் முடிவை தடுத்து நிறுத்துமாறு வேண்டுகிறோம்!

* தேசிய இனப்பிரச்சினைக்கான நீதியான அரசில் தீர்வில்— வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு ஏற்புடைய தனித்துவமான அரசியல் தீர்வுக்கு முஸ்லிம்களின் அபிலாசைகளை பிரதிபலிக்கும் வகையில் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாசைகளை கவனத்திற்கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு வேண்டுகிறோம்.

* 1990ம் ஆண்டு வடக்கு மாகாணத்தில் இருந்து இனச்சுத்திகரிப்புச் செய்யப்பட்ட முஸ்லிம்களுக்கு நீதி வழங்குவதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவை அமைத்து செயற்படுத்துமாறு வேண்டுகிறோம்.

* புலிகளின் மிக மோசமான இனப்படு கொலைகளினால் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு நியாயம் வழங்க வேண்டி ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அமைத்து நீதி விசாரணைக்கு உத்தரவிடுமாறு வேண்டுகிறோம்.

* பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்களுக்கு நியாயமாக உரித்தான "சமத்துவத்தரப்பு" அரசியல் நிலைப்பாட்டிற்கு உங்கள் பூரண ஆதரவை தாருங்கள்.

* மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களின் மரணத்திற்கான விசாரணை அறிக்கையை உடன் வெளியிட ஆவன செய்யு மாறு வேண்டுகிறோம்.

* ஈராக் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை ஐ.நா.வில் நியாயப்படுத்திய ரணில் விக்கிரம சிங்கவின் ஆக்கிரமிப்பு யுத்தத்திற்கு ஆதரவான போக்கை அம்பலப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கை யில்லாப் பிரேரணையை கொண்டுவரு மாறு வேண்டுகிறோம்.

முஸ்லிம் அரசியல் வாதிகளின் சவாலா? அவ்வளவுதான்!

முஸ்லிம் அரசியல் வாதிகள் சவால் விட்டால், இப் போது நமது மக்கள் அலட்டிக் கொள்வதே இல்லை. சவால்களுக்கு பெயர்போன ஒரு கட்சியின் தலைவரின் ஆசிர்வாதம் பெற்ற அவருடைய தம்பிகள் "தலைவருக்கு நாங்கள் என்றும் குறைந்தவர்களில்லை" எனும் போக்கில் கடந்த காலத்தில் பல்வேறு சவால்களை விட்டனர்-அவை பற்றிய பட்டியல் இங்கு அவசியமில்லைதான்.

ஆனாலும் அண்மையில் இளம் தலைவர் ஒருவரின் சவால் பற்றி ஞாபகப்படுத்தாமலிருக்க முடியவில்லை- முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு பற்றிய சவால் அது. முஸ்லிம்கள் இருவர் படுகொலை செய்யப்பட்டவுடன் கிழக்கு முஸ்லிம்கள் மீதான பாதுகாப்பு நிலைமை யையிட்டு பெரும் அரசியல் சர்ச்சை ஏற்பட்டது.

முஸ்லிம்களின் பாதுகாப்பதற்கு பொலிஸ்படைக்கு முஸ்லிம்களை சேர்க்கவேண்டுமென ஒரு கோரிக்கை முன் வைக்கப்பட்டது. அப்படி முஸ்லிம்களை சேர்க்கக்கூடாது என தமிழ் தரப்பினரால் அக்கோரிக்கை நிராகரிக்கும் வகையில் குரல்கள் எழுந்தன- அரசாங்கம் முஸ்லிம்களில் 550பேரை பொலிசுக்கு சேர்ப்பதற்கான ஆட்சேர்ப்பு பரீட்சையை நடாத்தியது. தமிழ் கூட்டமைப்பு அதனைத்தடுத்து நிறுத்தியே தீருவோம் என கங்கணம் கட்டி தனது அரசியல் பலத்தை பிரேயோகித்தது.

இந்த நிலையில் சம்மாந்துறையைப் பிரதிநிதித் துவப்படுத்தும் அன்வர் இஸ்மாயில் எம்.பி. முஸ்லிம்களை பொலிஸ்படைக்கு சேர்க்காவிட்டால் (ஒரு கிழமை காலக்கெடு) எதிரணியில் போய் அமர்ந்து விடுவேன் என பத்திரிகைக்கு ஒரு வழக்கமான சவால்.

ஆட்சேர்ப்பு பரீட்சை நடந்தது வைத்தியச் சான்றிதழும் எடுக்கப்பட்டு விட்டது. பல வாரங்கள் கடந்தும் விட்டது ஆனால் பொலிஸ் பயிற்சிக்கு எந்த முஸ்லிமும்

இன்னும் பொலிஸ் பயிற்சிக்கு அழைக்கப்பட வில்லை அரசாங்கம் மௌனம். தமிழ்த் தரப்பு பெருமிதம். ஆனால் சவால் விட்ட இளம் தலைவர் அதுபற்றி இன்னும் ஒன்றையும் சொல்லக்காணோம்! ஒரு வேளை மீண்டும் ஒரு சம்பவம் நடைபெற்றால், இன்னமும் ஒரு சவாலை விடுவார் இளம் அரசியல் தலைவர். (மன்னிக்கவும் அவர் மட்டுமல்ல:பல எம்.பீக்களின் சவாலை நமது மக்கள் பட்டியல் போட்டு வைத்திருக்கின்றனர்- இந்த சவால் அரசியலை தொடர்ந்தும் செய்யமுடியாது என்பதை மக்களின் ஞாபக சக்திகள் மெய்ப்பிக்கின்றன.

இப்போது நமது அரசியல் வாதிகளுக்கு சவாலை சமாளிப்பதே பெரும் சவாலாகி விட்டது.

கருங்கொடியான்

அஷ்ரஃபின் முத்திரை வெளியீடும் பொலிசாரின் அடாவடித்தனமும்

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் அவர்களின் மரண விசாரணையை மூடிமறைத்து முஸ்லிம் மக்களை திருப்திப்படுத்தும் வகையில் வெறும் பெயரளவில் அஷ்ரஃப் நினைவு முத்திரை வெளியிடும் வைபவம் 18.09.2003 அன்று கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் நடைபெற்றது. இவ்வைபவம் நடைபெற்ற ஹோட்டலுக்கு முன்பு அஷ்ரஃபின் மரணத்தைக் கண்டறியக்கோரி ஆர்ப்பாட்டம் செய்த ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு பிரதிநிதிகள் மீது பொலிசார் அடாவடித்தனமாக தாக்குதல் நடத்தினர். இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆறுபேரை பொலிசார் கைதுசெய்து தடுத்துவைத்தனர். இத்தாக்குதலில் ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பின்

பொதுச் செயலாளர் நிசார் மௌலானா காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். நியாயம் கேட்டு போராடிய ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு பிரதிநிதிகளுக்கு மறைந்த தலைவரின் வழிவந்த பதவியை அனுபவிக்கும் அரசியல் தலைவர்கள் கொடுத்த சன்மானம்தான் பொலிசாரின் இந்த அடாவடித்தனமாகும்.

ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு செப்டம்பர் 13ஆம் திகதியை வடக்கு கிழக்கில் தேசிய துக்கதினமாக பிரகடனப்படுத்திய நிகழ்வுக்கு ஆதரவு வழங்கி மக்களுக்கு ஐக்கிய முஸ்லிம் மக்கள் கூட்டமைப்பு நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்ஹூம் எச்.எஸ். இஸ்மாயில் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டுக்கதை

இலங்கையின் முதல் பாராளுமன்ற தேர்தலில் புத்தளம் தொகுதியில் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டவரும் முதல் முஸ்லிம் சபாநாயகரும் புத்தளம் தொகுதியில் முதல் சட்டத்தரணியுமான மர்ஹூம் அல்ஹாஜ் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களின் 100வது ஞாபகார்த்த நினைவு முத்திரை வெளியிடுமாறு புத்தளத்தில் முதலில் வேண்டுகோள் விடுத்து செயலில் இறங்கியது புத்தளம் நலன்புரி இயக்கமாகும். இந்தவகையில் 2001.03.10.ஆம் திகதி மேன்மை தங்கிய ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தோம். எங்களின் வேண்டுகோளை ஜனாதிபதி ஏற்று அதற்கான பதிலை 2001 ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி அனுப்பினார். அரசும் மாறியது. முத்திரை வெளியீடு நடைபெறவில்லை.

அடுத்து புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி அமைப்பாளரும், புத்தளம் மாவட்ட மீன்பிடித்தொழில் தலைவரும், புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான நியோமல் பெரேரா அவர்கள் கௌரவ அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்களுக்கு அம்முத்திரையை வெளியிடுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார்.

2002.08.22ஆம் திகதி மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்கள் புத்தளம் வருகைதந்திருந்தபோது, புத்தளத்தின் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஹூம் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களுக்கு முத்திரை வெளியிடும்படி புத்தளம் மக்கள் சார்பாக, புத்தளம் நலன்புரி இயக்கம் வேண்டுகோள் விடுத்ததும், அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் அவர்கள் அன்புடன் ஏற்று உடனே அதற்கான நடவடிக்கையை எடுக்கும்படி தனது செயலாளருக்கு கட்டளை இட்டார். 2002.09.03ஆம் திகதி கௌரவ அமைச்சரின் பதில் எனக்கு வந்திருந்தது. தபால்மா அதிபருக்கு அனுப்பிய கடிதத்தின் பிரதி ஒன்றும் எனக்கு அனுப்பப்பட்டது. தபால்மா அதிபரின் முத்திரை பணியகத்திலிருந்து 2002.09.16ஆம் திகதி எனக்கு கடிதம் வந்தது. மர்ஹூம் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களின் பல புகைப்படங்களும் அவர்களை பற்றிய 200 சொற்கள் அடங்கிய குறிப்பையும் அனுப்பும்படி அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது.

இந்த ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு விடயத்தை எச்.எஸ். இஸ்மாயில் குடும்பத்திற்கு முதலில் கூறினேன். அனைவரும் மகிழ்ச்சியடைந்தார்கள்.

முத்திரை வெளியீடு சம்பந்தமாக நான், மஹ்முத் ஆலிம் அவர்களுடன் மர்ஹூம் அல்ஹாஜ் எச்.எஸ் இஸ்மாயில் அவர்களுக்கு மட்டுமல்ல, முன்னாள் நிதித்திட்டமிடல் அமைச்சர் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.எச்.எம். நெய்னா மரைக்கார் அவர்களுக்கும், காஸிமியா அதிபர் மர்ஹூம் அல்ஹாஜ் மஹ்முத் ஆலிம் ஹஸ்ரத் அவர்களுக்கும் ஞாபகார்த்த முத்திரை வெளியிட வேண்டுமென எண்ணி அதற்கான முயற்சிகளையும் செய்து வந்தேன்.

மர்ஹூம் அல்ஹாஜ் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களின் ஞாபகார்த்த முத்திரை வெளியீட்டு வைபவம் கட்சிபேதம் இன்றி புத்தளம் மக்களால் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற முடிவுடன் ஒரு செயல் 'கொமிட்டியை' உருவாக்கினோம். அல்ஹாஜ் அஷ்ஷேஃ. அப்துல்லா மஹ்மூது ஆலிம் அவர்களின் தலைமையில், கலாநிதி எம்.எஸ். அனஸ், செட்.ஏ. ஸன்ஹிர் மாஸ்டர், எஸ்.ஆர்.எம். ஸலிம் மாஸ்டர், செட்.ஏ. றஸ்மி, எஸ்.ஆர்.எம். மூஸின், எஸ்.ஆர்.எம். இர்ஷாத், காமில் மாஸ்டர், எஸ்.எம். முபாரக் மாஸ்டர், வி.பி.எஸ் பாரூக், எச்.எம். மின்ஹாஜ் மௌலவி ஆகியோர் இக்கொமிட்டியில் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

எங்கள் கொமிட்டியால் முத்திரை பணியகத்திற்கு கொடுக்கப்பட்ட மொடல் முத்திரை துருக்கித் தொப்பியுடன் இருப்பது, முதல் நாள் உரையில் சபாநாயகர் படத்துடன், பேராதனை பல்கலைக்கழகப்பள்ளி புத்தளம் ரெயில்வே ஸ்டேஷன், புத்தளம் தண்ணீர் தாங்கி, புத்தளம் உப்பளம் ஆகியன இவரால் உருவாக்கப்பட்டதென்பது இளைய தலைமுறையினருக்கு தெரிய வேண்டும் என்பதற்காக முதல் நாள் உரையில் இவற்றை உள்ளடக்கினோம்.

எம்.சி. இபுனு மசூத்
செயலாளர் புத்தளம்
சமூக நலன்புரி இயக்கம்

புத்தளத்தொகுதி பெருமைக்குரிய மக்களே! புத்தளத்தின் பெருமகன் மர்ஹூம் அல்ஹாஜ் எச்.எஸ். இஸ்மாயில் அவர்களுக்கு புத்தளத்தொகுதி மக்களால் விழா எடுக்க உரிமையில்லையா? கௌரவப்படுத்த உரிமை கிடையாதா? எவ்வளவோ அழகான பெரியார் இஸ்மாயில் ஐயா அவர்களின் வாழ்க்கை வரலாற்றுக்களை விளக்கி, அனைத்து பாடசாலைகளிலும் விழா எடுக்க முடிவு செய்தோமே.

அனைத்தையும் நாசமாக்கிவிட்டார் அஸ்வர் ஹாஜியார். யாரோ செய்தவற்றை தான் செய்ததாக பத்திரிகைகளில் விளம்பரம் கொடுப்பதே இவர் வேலை. தானே இம்முத்திரைவெளியிட உழைத்ததாகவும், தனக்கு இம் முத்திரை வெளியிட புத்தளத்தில் அனுமதிக்கவில்லையானால், கொழும்பில் நடாத்துவதாகவும் சவால் விட்டுள்ளார்.

அன்புக்குரிய புத்தளம் தொகுதி மக்களே!

கூடிய கெதியில் புத்தளம் வாழ் மக்களுக்கு பல உண்மைகளை தெரியப்படுத்த இருக்கிறோம். இன்று இருக்கும் அரசியல் வாதிகள் மக்களை எப்படி ஏமாற்றுகின்றார்கள். இவர்களால் புத்தளம் வாழ் மக்களுக்கு என்ன நன்மைகள் உண்டு? தேர்தல் விஞ்ஞாபனத்தைப் பார்த்தால் புத்தளம் நகரில் பாலும், தேனும் ஓடும் போல் இருக்கும். தேர்தலில் வெற்றிபெற்றதும் புத்தளம் தொகுதியே நாற்றம். நான் முந்தி நீ முந்தி என்று கொந்தராத்துக்கள், பணம் கரையுமுன் கட்டிடம் இடிந்து கீழே விழும். இதுதான் இன்றைய அரசியல்வாதிகளின் சேவைகள். (புத்தளம் டவுன் ஹோல் பக்கத்து கட்டிடத்தை பார்க்கவும்.)

புத்தளம் தொகுதியின் பெருமக்களே! வாலிப உள்ளங்களே! - இளைஞர் சமுதாயமே! விழித்தெழுங்கள். நல்லதைசெய்வோம். நன்மையைச்செய்வோம். நமக்கு அடாவடித்தனம் தேவையில்லை. அன்பு, கருணை, உண்மை, நேர்மையைக் கொண்டு ஆட்சி செய்ய முயற்சிப்போம். மக்களோடு மக்களாக சேர்ந்து சேவை செய்யக்கூடிய ஒருவரை தேர்ந்து எடுப்போம். அடுத்தவன் சொத்துகளை ஆசைப்படாதவன். அனைத்து மக்களுக்கும் நன்மை செய்யக்கூடிய உள்ளத்தையும், உண்மையையும் செய்யக்கூடிய நல்லவரை தேர்ந்தெடுக்க நாம் முயற்சிப்போம். உள்ளதையும் உண்மையையும் கூறுவோம். நாம் நல்லவர்களுடன் அரசியல் செய்வோம். இதனால் இன்றைய அரசியல்வாதிகளின் தில்லுமுல்லுகளை முறியடிக்க முடியும். ஒற்றுமையுடன் செயல்படுவோம். குடும்ப ஆதிக்கங்களை முறியடிப்போம். ஒன்று சேர்வோம். புத்தளம் நகருக்கு, புத்தளம் தொகுதிக்கு நல்லது செய்ய நாம் இளைய தலைமுறையினர் ஒன்றுசேர்வோம். பள்ளி மஹல்லாவுடன் ஒன்றுபடுவோம். பள்ளிகளுடன் தொடர்பு கொள்வோம். நல்லோர்களுடன் நல்வழியில் செல்வோம். நம் ஊருக்கு எது தேவையோ அதை செயல்படுத்துவோம். அனைத்து இளைஞர்களும் பொதுசேவைக்கு ஈடுபடுவோம். நாம் வாக்களித்த நகர சபை, மாகாண சபை உறுப்பினர்களையோ அல்லது பாராளுமன்ற உறுப்பினர்களையோ ஊருக்குத் தேவையானவற்றை செய்யத்தூண்ட வேண்டும். இல்லையெனில் அவர்களுக்கு எதிராக மேல்மட்டத்தில் முறையிடுவதற்கு துணிவுடன் செயல்பட வேண்டும். செயல்படுவோம். பல உண்மைகளை வெளிக்கொண்டு வருவோம்.

கப்பல்!

கட்டிய வீட்டையும்
ஈட்டிய பொருளையும்,
தட்டிப் பறித்து - எங்களை
குட்டிச் சுவராக மாற்ற - நீ
தீட்டிய திட்டத்தின்
மறு பெயர் கப்பல்!

நசுக்கிய உயிர்களை தீயில்
பொசுக்கியது மட்டுமன்றி
சுரக்கி பிழிந்து எங்கள் உணர்வுகளை
விஷக் காயங்களாக நீ மாற்ற எடுத்த
முயற்சியின் மறுபெயர் கப்பல்!

சமாதான சாயம் பூசி
விறகுத் துண்டுக்கும் - ஏன் கோழி
இறகுக்கும் கூட வரி கேட்டு எங்களின்
சிறகறுக்கும் அத்துமீறலின்
மறு பெயர் கப்பல்!

மாட்டுக்கு வரி கேட்கிறாய்!
தட்டிக்கேட்டால் - நீ சொல்லும்
சாட்டு இதுதான் - தாயக
காட்டிலுள்ள மரங்களும் - ஏன்



ரோட்டில் முளைத்திட்ட புற்களும்
எங்கள் சொந்தம்!
இது யார் சொன்னது?
அல்லாஹ்வின் ஆட்சிப் பிரதேசம் !
காற்றின் சுதி கூட அவனை துதி
செய்கிறது !
நீ மட்டும் எங்களுக்கு
சதி செய்ய - இருதய ஏடுகளில்
எழுதி வைத்த அக்கிரம வரிகளின்
மறு பெயர்தான் கப்பல் !

பஸீர் அலி
கிண்ணியா

Muslim Kural News Paper
முஸ்லிம் குரல் பத்திரிகை
181/1, Ananda Mawatha, Colombo -10
Advertisement Rates
விளம்பரக் கட்டண விபரம்

Page Size பக்க அளவு	Colour or Black & White கலர் அல்லது கறுப்பு வெள்ளை	Rate கட்டணம்
Full Page முழுப் பக்கம்	4 Colour (4 கலர்)	Rs. 60,000/-
	2 Colour (2 கலர்)	Rs. 40,000/-
	Black & White (கறுப்பு வெள்ளை)	Rs. 30,000/-
Half Page அரைப் பக்கம்	4 Colour	Rs. 30,000/-
	2 Colour	Rs. 20,000/-
	Black & White	Rs. 15,000/-
Quarter Page காற் பக்கம்	4 Colour	Rs. 15,000/-
	2 Colour	Rs. 10,000/-
	Black & White	Rs. 7,500/-
Half - Quarter Page அரைக்காற் பக்கம்	4 Colour	Rs. 7,500/-
	2 Colour	Rs. 5,000/-
	Black & White	Rs. 4,000/-
1 Column x cm 1 கலம் x செ.மீ. 1 கலம் = 3 செ.மீ. 1 Column = 3 cm	4 Colour	Rs. 150/-
	2 Colour	Rs. 100/-
	Black & White	Rs. 75/-

Front Page - Extra 30% Premium Page - Extra 20%
முன் பக்கம் - மேலதிகம் 30% விருப்பத்திற்குரிய பக்கம் - மேலதிகம் 20%
சிறு விளம்பரங்கள் - Classified Advertisements
முதல் 20 சொற்களுக்கு Rs. 200/- மேலதிக சொல் ஒன்றுக்கு Rs. 10/-
First 20 words Rs. 200/- Per Additional word Rs. 10/-
விளம்பர முகாமையாளர். முஸ்லிம் குரல் பப்ளிகேஷன்
Advertisement Manager, Muslim Kural Publication

முஸ்லிம் குரலில் விளம்பரம் செய்து நமது பத்திரிகை வளர்ச்சிக்கு உதவுங்கள்
தொடர்புக்கு
விளம்பர முகாமையாளர் - முஸ்லிம் குரல்
181/1 Maligakanda Road
(White Park) - Colombo 10 - Phone : 0777 389127

பள்ளிமுனைக் கிராமத்தின் கதை

12 குறுநாவல்

-என்.ஏ.தீரன்-

அத்தியாயம் 6

'...ம..ம்..மைம்னா...'
'ஒங்கள உட்டுட்டுப் போறன்.. ம.. மச்சான்'
"என்ட கிளியாரே போவியா?"
'என்ட நெனப்பு இரிக்கிமா மச்சான்..?'
'கடசிமட்டும் மறக்கமாட்டன் மைம்னா.. அல்லாறிய!'
'போன உடன கடிதம் காசி செக்கெல்லாம் ஒங்களுக்குத்தான் அனுப்புவன் மச்சான். ம்மாக் கெழவிக்கு அனுப்பமாட்டன்'
'போற எடத்துல கவனமா இரி மைம்னா.. காட்டவ்லியா வாப்பாவ நெனச்சிக்க..'
'நான் திரும்பி வந்தா என்ன நீங்க ஏத்துக்குவீங்களா...?'
'நான் இப்பவே ஏத்துக்க 'ரெடி' கிளி! கொளறாத! கொளறாத'

குளியலறைக் கதவு படீரெனத் திறக்கவே, இருவரும் திடுக்குற்று விலகினர்.
'டியே. மைம்னா ஓடன குளிச்சிட்டு 'ரெடி'யாகு! 'யாப்போட்'டுக்குப் போகனும். டே ஆசீனோவ்.. எழும்புடோ.. முத்தும்மது இன்னம் பொறப்படல்லியா.. டேய் யாசின் எழும்புடா சில்லித்தலயா!

யாஸீன் திடுக்கிட்டு எழுந்து விட்டான். உடன் உடைமாற்றிப் புறப்பட்டான். மைமுனா மாற்றுச் சீலைகளுடன் குளியலறைக்குள் செல்ல முத்துமுகம்மது பக்கத்து அறைக்குள் வந்து குளித்தான். உடைமாற்றும்போது மைமுனாவின் அறையில் சப்புச்சுல்தானின் பதட்டமான குரல் கேட்டது. உரத்துச் சொல்லிக் கொண்டிருந்தான்.

'ப்....ஸ்.. ஏலாண்டு செல்லிட்டான். என்னய்ற இப்ப? எம்பிர சைன் இருந்தா உடனே எல்லாஞ் செரியாகும்'
முத்துமுகம்மது அவசரமாய் அறைக்குள் புகுந்தான்.
'ஙா! முத்தும்மது நீதான் ஒரு சின்ன 'எல்ப்' பண்ணனும்'
'எல்பா? என்னது?'
'ஒரு சின்ன உதவி! செல்லங்கா மாமி!'
'ஒண்டாப்பா முத்தும்மது! நீதான் செஞ்சி தரனும்'
'என்ன மாமி என்ன செய்யனும்'
'கடசி நேரத்துல மைம்னாட பாஸிப்போட்டுல ஒரு சின்ன சிக்கல்' எலங்கய உட்டுவெளிய போற வெஷயந்தானே.. அதுல... ஆனா.. அதுக்கு ஏஜென்ஸில எம்பிர கடிதம் ஒண்டு அவிசரமாக் கேக்கான். ஸ்லாட்டி மைம்னா ண்டைக்கிப்போக ஏலா! முத்துமுகம்மது! நீதான் எம்பிட்ட ஒரு சைன் வாங்கித் தெரனும்..'

'நானா..? எம்பிட்டயா? யாரு..?'
'ஒங்குட தலைவரு! அவருதான் இசாக்கு எம்பிட்ட ஒரு சைன்!'
'தலைவருட்டயா? நானெப்பிடிப்போற?'
'நான் கூட்டிப்போறன். இதக்குடுத்து ஒரு சைன் [illegible] ஒரு [illegible] எப்பிடிதான் ஒனக்கு [illegible] உடன செய்வாரு! லா!'
'.....'
'போடாப்பா முத்தும்மது. போகிளி 'டக்குன.. நீ தலவார ஆளு வா'
'.....'
'வா! முத்தும்மது! நேரமில்ல. வஸ்ஸில போக நேரமில்ல. ஒரு ஆட்டா புடிப்பம்! வன் அவால போய் வெரலாம்!'
'போ வாப்பா முத்துமுகம்மது 'டக்' கெண்டு.' 'நானும் கூடப்போய் வாறங்கா ம்மோவ்!'
'சும்மார்ரா சில்லித் தலயா?'
'ல்ல மாமி! யாஸினும் வெரட்டும். சும்மா போற ஆட்டாதானே!'
'வாடா!'
'போடா!'

சப்புச் சுல்தானும், யாஸினும், அரைமனதுடன் முத்துமுகம்மதும் யூக்கே லொட்ஜிலிருந்து புறப்பட்டு மருதானை 'எல்பிஸ்டன்' சந்திக்கு நடையில் வந்தனர். சப்புச்சுல்தான் விரல் சொடுக்கியதும் ஒரு முச்சக்கரம் சீறி வந்து நின்றது. மூவரும் ஏறினர்.
'கொஹெத மஹத்தயா?'
'களுபோவில யண்ட.'
'சீயக்.. ருப்பியல் சீயக்...'
'கண்டக்கோ இக்மண்ட்ட'

சீறிப்புறப்பட்டது. வாகன அணியில் சேர்ந்தது. நுழைந்தது. புகுந்தது.. ஊர்ந்தது.. மேம்பாலங்கள்.. சுற்றுவட்டப்பாதைகள்.. சமிக்ஞை விளக்குகள்.. நியூ ஒலிம்பியா.. குதிரையில் பொலிஸ்காரன்.. யானைச் சிலை... உயரக் கட்டிடங்கள். வழி நெடுகவும் சப்புச்சுல்தான் முச்சக்கரச் சாரதியிடம் ஏதோ ஒரு விலாசத்தை காட்டி சிங்களத்தில் சளசளத்தபடி வந்தான்.
'சூ' வுக்கு எப்ப மாமா கூட்டிப்போற?'
'தமுள் கதயாதடா பேயா! சிங்களவன் கொடல உருவுவான்'
ஏதோ கேட்க நினைத்த முத்துமுகம்மதும் வாயை மூடிக் கொண்டான்
'நவத்தண்ட நவத்தண்ட!'

முச்சக்கரம் சீறி நின்றதும் சப்புச்சுல்தான் முத்து முகம்மதைப் பார்த்தான். பரபரப்பாக ஏதோ தேடினான். பதட்டமானான். 'எங்க.. எங்க.. என்றான்.
'அட! முத்தும்மதோவ்! என்ட மடத்தனத்தப் பாத்தியா?'
'என்னது?'
'எம்பிட்ட சைன் வாங்கிற கடிதத்த லொட்ஜில உட்டுட்டு வந்துட்டன்டோ.. முத்தும்மதோவ்!'
'டேய்! சப்பா! என்னடாது?'
'சத்தியமாடா முத்துமுகம்மது! கடிதத்த உட்டுட்டன்'
'நீ பச்ச மடயன்டு எனக்குத் தெரியும். திருப்பச் செல்லு ஆட்டோவ.. போய் எடுத்துட்டு வருவம்.'

'ல்ல்ல.. ஆட்டா ஏலாங்கான்! ன்னொருக்கா மருதான போய்வெர ஏலா! பொறு.. யோஸிப்பம்.. நா செரி ஒரு வேல செய்வம்!'
'என்னது? சப்பா! என்னயும் கணக்கு உட்டியண்டால்..?'
'போடா கொறுக்கா! பொறு! ஒரு கோள் எடுத்து லொட்டி மொதலாளிட்ட பேசிட்டு வாறன். இரி!' 'ல்ல.. ல்ல.. பொறு டேய்!'

பொறுக்கவில்லை சப்புச்சுல்தான். மிக வேகமாக முச்சக்கரச் சாரதியிடம் சிங்களத்தில் பேசினான். அவன் தலையாட்டினான் திடீரென ஒரு தாவலில் சப்புச்சுல்தான் வீதியை அவசரமாக ஓடிக்கடந்தான். எதிரே வந்த மினி பஸ்ஸில் அபாயமாகப் பாய்ந்து ஏறி விட்டான். முத்துமுகம்மதுக்கு கைகளைக் காட்டினான். ஏதோ சைகை செய்தான். பஸ் பறந்து விட்டது.

முத்துமுகம்மது செயலற்றுப்போய், விறைத்துவிட்டான். சப்பு எங்கே போகிறான். ஒன்றும் விளங்காமல் யாஸீனுடன் ஆட்டோவினுள் இருந்தான். சப்புச்சுல்தான் ஏமாற்றிவிட்டான் என்பது பயங்கரமாகப் புரிந்தது முத்துமுகம்மதுக்கு.
'அபி யமுத மஹத்தயோ?'
.....
யன்டத மஹத்தயா? கியண்ட!'
.....
பதில் வராதிருக்கவே சாரதி திரும்பிப் பார்த்தான். 'மொகத்த கல்பனாவ? களுபோவில யணவாத? நெத்தங் ஆப்பஹூ..?'
'எ.. வந்து ... எனக்கி சிங்களம் தெரியா மாத்தையா?'
'மொகத்தபாங்.. சுதாகறண்ணே.. முகுத் தேருணநே..'
'ஒண்டும் வெளங்குதில்ல... யூக்கேட லொச்சிக்கிப் போ!'
'மொக்கோ? அநே! ஹரிஹரி.. ஏ மஹத்தயா கியப்பு விதியக் மங் கரண்ணங்'
.....
திடீரென முச்சக்கரம் உறுமிச் சீறி சுற்று வட்டம் எடுத்து ஓடியது.
'எங்க... எங்க.. யூக்கேட லொச்சிக்கா போறம்?'
'ஒவ்! ஒவ்!'
.....
'மாமா எங்க போறாரு? முத்தும்சான்! நாம எங்க போறம்?'
'யூக்கேட லொச்சி வழியா இது மாத்தயா?'
'ஒவ்! ஒவ்!'
(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநேரத்திற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இந்திய சாஸ்திரிகளை அணுகினார்கள்

டில்வின் சில்வா
ஜே.வி.பி. பொதுச் செயலாளர்

கேள்வி : ஸ்ரீ.ல.சு. கட்சியுடனான பேச்சு வார்த்தைக்கு என்ன நடந்தது?

ஐ.தே.முன்னணி அரசின் செயல்களின் விளைவாக நாடு முன்னோக்கும் அபாயங்களில் இருந்து நாட்டைக் காப்பதற்காக நாம் ஒன்று சேர விரும்புகின்றோம். நாட்டில் ஒரு புறம் சாவதேச நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் அதேவேளை மறுபுறம் புலிகளுக்குத் தனி நாடு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இவற்றில் இருந்து நாட்டைக் காப்பதற்காக நாம் ஒரு சக்திமிக்க பாதையை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. இதனால்தான் நாம் பல்வேறுபட்ட தலைப்புகளின் கீழ் பேச்சுவார்த்தை நடத்தினோம்.

அதிகாரப் பகிர்வு என்பது அதில் ஒன்று. ஸ்ரீ.ல.சுதந்திரக் கட்சி இதற்கு ஆதரவாக இருந்ததால் நாம் அதனை எதிர்த்தோம். நோர்வேயை அகற்ற வேண்டுமென்பது எமது கொள்கையாக இருக்கிறது. எனினும் ஸ்ரீ.ல.சு.கட்சியினா இதனை எதிர்த்தனர்.

இது தொடர்பாக நம்மிடையே இணக்கம் காண முடியாது போனமையினால் நாம் தொடர்ந்தும் பேச விரும்பவில்லை.

புலிகளிடமிருந்து நாம் முன்னோக்கக் கூடிய பயங்கரத் தன்மையினையிட்டு ஸ்ரீ.ல.சு.கட்சியினர் உணர்ந்து அதிகாரப் பகிர்வு தொடர்பான தமது நிலைமையினை மாற்றிக் கொண்டிருப்பர் என நம்பினோம்.

ஒரு சந்தாப்பத்தில் அதிகாரப் பகிர்வு பற்றிய விடயத்தை ஒதுக்கி விட்டுப் பிற விடயங்கள் குறித்து உடன்படிக்கை செய்ய விரும்பினோம். எனினும் அதுவும் பலிக்கவில்லை.

கேள்வி : அதிகாரப் பகிர்வு தொடர்பாக ஸ்ரீ.ல.சு.கட்சி தனது கொள்கையினை மாற்றுவதை விட ஜே.வி.பி. தனது கொள்கையினை மாற்ற விரும்பவில்லையா?

நாடு முன்னோக்
கும் அச்சுறுத்தல் நிலைமை பயங்கரமானதாக இருந்தமையினால் அது தொடர்பாக எமது கொள்கையினை விட்டுக் கொடுக்க நாம் விரும்பவில்லை.

கேள்வி: தொடக்கப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஜனாதிபதியின் சிந்தனையில் உடனடியான மாற்றத்தைக் கண்டீர்களா?

ஸ்ரீ.ல.சு. கட்சியிடம் ஒழுங்கான ஒரு திட்டம் இருக்கவில்லை. பேச்சு வார்த்தைக்கான ஒழுங்கான ஒரு அடிப்படை இன்றி சுயநேரத்துக்காக அவர்கள் இந்திய சாஸ்திர காரர்களை அணுகினார்கள். அரசியல் யதார்த்தங்களை விட்டும் அவர்கள் தூரமாகி இருந்தனர். அவர்களது திட்டங்கள் மாறிய நிலையில் இருந்தன.

கேள்வி : இப்போது பேச்சு வார்தைகள் முறிந்துள்ளன. ஸ்ரீ.ல.சு. கட்சியிடம் ஒழுங்கான திட்டம் இருக்கவில்லையென நீங்கள் கூறுகிறீர்கள். அதனை ஏன் ஏற்கனவே கூறவில்லை?

நாம் ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டினோம். பேச்சுவார்த்தைகள் இழுத்தடிக்கப்படுவதாக உணர்ந்து இம்மாத இறுதிக்குள் பேச்சு வார்த்தைகளை முடிக்க நாம் எண்ணியிருந்தோம்.

கேள்வி : வெற்றிக்காக இரு கட்சிகளும் இன்றியமையாதன என்று திரு. பண்டாரநாயக்க கூறியிருந்தாரே?

ஸ்ரீ.ல.சு. கட்சிக்கு எமது உதவி தேவையா என எமக்குத் தெரியாது. ஆனால் ஜே.வி.பிக்கு ஸ்ரீ.ல.சு. கட்சி தேவையில்லை. பெரும் ஆபத்தைத் தவிர்ப்பதற்காக இரு கட்சிகளதும் சேவை நாட்டுக்கே தேவை.

கேள்வி : எந்தத் தேசியத் தன்மையினைப் பிரகடனப்படுத்தினாலும் இது பதவிக்கு வருவதற்கான ஒரு முயற்சியே எனச் சிலர் கூறுகிறார்களே?

எமது இலக்கு உயர்வானதாக இருந்தது. ஒன்றாக வந்து தேர்தலுக்கு நின்று மக்களிடம் இருந்து ஒரு ஆணையை பெறவே நாம் திட்டம் இட்டிருந்தோம்.

கேள்வி : ஜே.வி.பி யின் திட்டம் ஸ்ரீ.ல.சு. கட்சி வாக்குகளை அடைவதே எனப்படுகின்றதே?

இல்லை. நாம் பேச்சுவார்த்தை தொடங்கு முன்னரே எமது கட்சி உறுப்புரிமை அதி கரித்தது.

கேள்வி : நீங்கள் ஏதும் மாற்றங்கள் செய்யமாட்டீர்களா?

ஸ்ரீ.ல.சு. கட்சி மாற்றங்களை ஏற்படுத்தினால் நாமும் செய்வோம்.

கேள்வி : உங்களது கட்சி அடுத்த தேர்தலில் அதிக ஆசனங்கள் பெற்றாலும். தனியான அரசை அமைக்க முடியாது, வேறு ஒரு கட்சியு டன் கூட்டுச்சேர்வீர்களா?

எமது முக்கிய நோக்கம் ஓர் அரசாங்கத்தை அமைப்பதன்றி நாட்டுக்கு ஏற்படப்போகும் ஆபத்தை தடுப்பதாகும். சமூக

பொருளாதாரத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் அதற்காக ஒரு தேர்தலை முன்னோக்கவும் கூட்டமைப்பை ஏற்படுத்தவும் நாம் தயார்.

கேள்வி : 2001ஆம் ஆண்டில் பொதுஜன முன்னணி அரசுடன் ஜே.வி.பி. ஏற்படுத்திய இடைக்கால ஏற்பாடு. புரிந்துணர்வு உடன்படிக்கை என்பனபற்றி தங்களது முடிவு என்ன?

அது குறுகிய காலமே அமுலில் இருந்த போதும் அரசாங்கம் 35 நாட்களுக்குள் பல உறுதிமொழிகளை அமுல் செய்தது. தொடர்ந்திருந்தால் பல நன்மைகள் நாட்டுக்குக் கிட்டியிருக்கும்.

கேள்வி : பொருளாதாரத் துறையில் ஜே.வி.பி. தனியார்மயப்படுத்தலை வன்மையாக எதிர்த்துள்ளது? ஜே.வி.பி. அரச பொருளாதாரம், கலப்புப் பொருளாதாரம் என்பதில் எதனை ஆதரிக்கும்?

அரசு முழுமையாக கட்டுப்படுத்தும் பொருளாதார முறையினை நாம் விரும்பவில்லை. தனியார் துறையினரின் பங்களிப்பு தேவை. எனினும் நிதி விவசாயம் போன்றன அரசினால் கட்டுப்படுத்தப்பட வேண்டும். தனியார் துறையினருக்கு அதிக ஆதிக்கம் செலுத்த அனுமதிப்பதானது நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

தனியார் துறையினரின் இலாப நோக்கு அரசின் சேவை மனப்பான்மை. இவ்விரண்டும் இணைந்து மத்திமமான பொருளாதாரக் கொள்கை பேணப்படுதல் வேண்டும்.

கேள்வி : வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு இடைக்கால நிர்வாக சபை அமைப்பு வழங்கப்படுவதை ஜே.வி.பி. எதிர்க்கின்றது. அது வழங்கப்படின் யாது செய்வீர்கள்?

அது வழங்கப்படின் எம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அதனால்தான் இப்போதே எதிர்க்கின்றோம். அது வெறும் இடைக்கால நிர்வாக அமைப்பு மட்டுமன்றி ஒரு இடைக்கால அரசும்கூட. ஆகவேதான் ஸ்ரீ.ல.சு. கட்சியுடனான பேச்சுவார்த்தை முறிந்தும்கூட நாம் எமது உறுதியான கிளர்ச்சியை முன்னெடுத்துச் செல்கின்றோம்.

எம்பி. மடிஸ் –21. 09. 03.

மறைந்தும் மறையாத மாமனிதர் மர்ஹூம் அஷ்ரப்

என்னால்
இன்னும்
நீப்பமுடியாமற்தானிருக்கிறது
நீங்கள்
மரணித்துவிட்டீர்கள்
என்பதனை!

என்றாலும்
நீங்கள் சார்ந்து நின்ற
சமூகவுரிமைக்காக
சாதனை செய்யவென
அமைத்த அரசியற்கட்சி
உடைந்து
உருக்குலைந்துவிட்டதையும்

ஓடி
ஓய்வின்றி உழைத்து
ஓர்மையளித்து
உயரறிவால் உணர்வூட்டி
உயர் பதவிகளும் வழங்கி
உருவாக்கிச் சென்றீர்களே!
முன்வரிசைப் போராளிகள்!

அவர்கள்
முட்டி – மோதி
மூழுச்சேற்றையும் வாரி
முதுகெலும்புடைந்துவிட்டதையும்
முழுமையாய் அறிந்தபின்னர்
முடிவொன்றெடுத்து விட்டேன்

நீங்கள் மறைந்து
விட்டீர்கள்
என்பதனை!

எந்த சமூகத்திற்காக
எல்லா இரவுகளையும்
பகல்களாய்
பயன்படுத்தினீர்களோ!
அவர்களில் பலர்
அரை உறக்கத்திலும்
அவர்களிற் சிலர்
ஆழ்ந்த மயக்கத்திலும்
ஆற்றலற்றுக்கிடக்கிறார்கள்!

யாரின் நலன்களை
காப்பதற்காக
உங்களின் மூச்சும்
உயிர்ப்பான பேச்சும்
ஓங்கி ஒலித்தனவோ!
அவர்கள்
அநியாயத்திற்குட்பட்டு
அவதிப்பட்டுக்கிடக்கிறார்கள்!

எந்த சமூகத்தின்
சுயத்தையும்
சுயகௌரவத்தையும்
கட்டிக்காத்துவைக்க
கங்கணம் கட்டினீர்களோ!
அவர்களின் தலைவர்கள்

எதிரிகளின் காலடியில்
ஏமாந்துகிடக்கிறார்கள்!

எந்த சமுதாயத்தின்
சந்தோசங்களுக்காக
உங்களின்
சிந்தனையும்
செயலும்
ஒன்றிணைந்து
பயணப்பட்டனவோ!
அந்த சமுதாயம்
அடக்கப்பட்டும்
ஒடுக்கப்பட்டும்
ஆளுமைறிக்கப்பட்டும்
நிற்கிறது!

உங்களுடன் உடன்பட்டு
உரிமைக்காய் உயிர்துறக்க
ஒப்புக்கொண்டவர்கள்!
நீங்கள் பிரிந்த பின்னால்
குழுக்குழுவாய்ப்பிரிந்து
குழப்பங்களை உண்டுபண்ணி
தர்மம் தரமிறங்கி
தமது சமுதாயத்தின்
தனித்துவத்தையும் இழந்து
தத்தளித்துக்கிடக்கிறார்கள்
தலைவா!

பூ.எல்.எம்.நஜீப்,
ஓட்டமாவடி

முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்

முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும். பாதிக்கப்பட்டவர்களின் நட்ட ஈட்டுக் கோரிக்கைக்குமான ஆவணக் காப்பகம் செயற்படத் தொடங்கி உள்ளது. 1983ம் ஆண்டுக்குப் பின்னர் அரசு. தமிழ் இயக்கப் பயங்கரவாதத்தால் மௌத்தான. காணாமல் போன. அங்கவீனமுற்ற இலங்கை முஸ்லிம்களின் தகவல்களை ஆவணப்படுத்தவும் ஆவணக் காப்பகமையும் ஊடாக நட்ட ஈட்டுக் கோரிக்கையை வென்றெடுக்கவுமான செயற்திட்டம் ஒன்றிற்காக நமது மக்களிடமிருந்து தகவல் கள் கேகரிக்கப்படுகின்றன.

தற்போதைய தேசிய இனப் பிரச்சினைச் சூழ்நிலையில் முஸ்லிம்களின் இழப்பு எவ்வித பெறுமதியற்ற ஒன்றாகவும் கவனிப்பாரற்ற நிலையிலும் காணப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இதுவரையில் 1983ம் ஆண்டில் இருந்து "முஸ்லிம்கள்" என்பதற்காக 5000 க்கு மேற்பட்ட முஸ்லிம்கள் கொல்லப்பட்டிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆகவே எமது இழப்பை பெறுமதியுள்ளதாக மாற்றுவதற்கு எமது இழப்பின் விபரத்தை ஆவணப்படுத்த வேண்டிய அவசியமுள்ளது.

இந்த பெரும் சமூக வேலைத்திட்டத்தில் தங்களை இணைத்து கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

எமது சகோதரர்களின் இழப்புக்களில் அக்கறையுள்ள சகல இயக்கங்களும். சமூக சக்திகளும் இப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை தயார் செய்து எமக்கு அனுப்பி வைக்குமாறு தங்களை சமூகத்தின் சார்பாக அழைக்கின்றோம்.

பாதிக்கப்பட்ட சகல மக்களின தும் குடும்பங்களுக்கு மாதிரி விண்ணப்பப்படிவம் கிடைப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். சமூக இயக்கங்கள் தனி மனித சக்திகள் இது தொடர்பாக எம்முடன் இணைந்து செயற்பட முன்வருமாறு வேண்டுகின்றோம்!

தகவல்களை அனுப்ப
வேண்டிய முகவரி

முஸ்லிம் தேச
ஆவணக் காப்பகம்
181/1 மாளிகா கந்த வீதி,
(வைற்பாக்)
கொழும்பு 10.

முஸ்லிம் தேச ஆவணப்படுத்தலுக்கும், நஷ்டஈட்டுக் கோரிக்கைகளுக்குமான மாதிரி விண்ணப்பம்

முஸ்லிம் தேச ஆவணக் காப்பகம்
181/1, Maligakanda Road,
(White Park)
Colombo - 10
Phone : 0777 389127

01. விண்ணப்பதாரியின் பெயர் .....
02. முகவரி .....
03. அடையாள அட்டை இல : ..... 04. தொலை பேசி இல : .....
05. விண்ணப்பதாரிக்கும் (மௌத்தானவருக்கும் / காணாமல் போனவருக்கும் / அங்கவீனமுற்றவருக்கும்) இடையிலான உறவு முறை : .....
மௌத்தானவர்கள் / காணாமல் போனவர்கள் / அங்கவீனமுற்றவர்கள் பற்றிய விபரம் :
B) 01. முழுப் பெயரும் முகவரியும், சம்பவம் இடம்பெற்ற இடமும், திகதியும்
02. கிராம சேவையாளர் பிரிவு : ..... 03. தேர்தல் தொகுதி .....
04. பிரதேச செயலாளர் பிரிவு : ..... 05. மாவட்டம் .....
06. பிறந்த திகதி : ..... 07. அடையாள அட்டை இல .....
08. சம்பவம் யாரால் நிகழ்த்தப்பட்டது .....
09. மரண அத்தாட்சிப்பத்திர இல .....
10. மரண அத்தாட்சிப்பத்திரம் இல்லையாயின் காரணம் .....
11. அங்கவீனமாயின் அங்கவீனத்தின் தன்மை .....
12. காணாமல் போனவரின் தற்போதைய நிலைமை .....
13. கலவித் தகைமை : .....
14. தங்கியிருப்போர் தொகை : ..... ஆண் : ..... பெண் : .....
15. இதுவரையில் பெற்றுக் கொண்ட நஷ்டஈட்டுத் தொகை மூலம்
.....
16. உருவ புகைப்படப் பிரதி ஒன்றையும் மரண அத்தாட்சிப்பத்திரத்தின் போட்டோ பிரதி ஒன்றையும் இணைக்கவும்.

.....
விண்ணப்பதாரியின் கையொப்பம் திகதி .....

கவனத்திற்கு

அன்பார்ந்த நமது மக்களே! முஸ்லிம் குரல் இதழ் !!இல் இணைக்கப்பட்ட 'மாதிரி விண்ணப்ப படிவம்' தொடர்பாக நமது மக்களின் பெரும்பாலானோர் விண்ணப்பப்படிவம் கேட்டு எம்மைத் தொடர்பு கொள்கின்றனர். அவ்விண்ணப்ப படிவமானது மாதிரி விண்ணப்பப்படிவம்தான் என்பதை கவனத்தில் கொள்க. அவ்விண்ணப்பப் படிவத்தை மாதிரியாகக் கொண்டு நீங்களே விண்ணப்ப படிவங்களை தயாரித்து எமக்கு விபரங்களை அனுப்பி வைக்கலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது பாதுகாப்பை நாமே உறுதி செய்ய வேண்டும்!

இலங்கை அரசியல் வரலாற்றில் முஸ்லிம்களுக்கு மிகவும் கசப்பான காலகட்டம் இதுவாகும். ஏனெனில் சிங்கள மக்களுக்கு – சிங்களப் படையினர், தமிழ் மக்களுக்கு – புலிப்படையினர் பாதுகாப்பளிக்கின்ற வேளையிலே முஸ்லிம் மக்களைப்பாதுகாக்க – சிங்களப்படையினரும் இல்லை புலிப்படையினரும் இல்லை. ஆயுதம் தாங்கும் பாதுகாப்பு படையினரோ – முஸ்லிம்களுக்கெதிரான அநியாயங்களை, அட்டூழியங்களைப் பார்த்துக் கொண்டு, வாய் மூடி மௌனியாக இருக்கின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியில் சில முஸ்லிம் அரசியல்வாதிகள். ஐக்கிய தேசிய முன்னணியில் சில முஸ்லிம் அரசியல் வாதிகள். தனித்துவம் காக்க தனிப்பெரும் தலைவர் மர்ஹூம் அஷ்ரப்பினால் உருவாக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் இன்று மூன்று பிரிவுகளாகப் பிரிந்து, முஸ்லிம் காங்கிரஸில் சில அரசியல்வாதிகள், ஏன் மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி) இலும் ஒரு முஸ்லிம் பெண்மணி – இப்படி இலங்கையிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளிலும் முஸ்லிம்கள் அங்கம் வகிக்கிறார்கள். மட்டுமல்ல பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமான முஸ்லிம் அரசியல் வாதிகள் உள்ளனர். இன்னும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் நெருக்கமான முஸ்லிம் அரசியல்வாதிகள் உள்ளனர்.

இப்படி இருந்தும் மூதூரில், சம்மாந்துறையில், அக்கரைப்பற்றில், கல்முனையில், பொத்துவிலில் நடந்தது என்ன? இந்த முஸ்லிம் அரசியல்வாதிகள் இருக்கத்தக்கதாகவே மேலே குறிப்பிட்ட முஸ்லிம் பிரதேசங்களில் கொலை, கொள்ளை, ஆள்கடத்தல், தீவைப்பு என்பன சர்வசாதாரணமாக நடந்து கொண்டிருக்கின்றன. இதற்கெல்லாம் முத்தாப்பு வைத்தது போல் – இனந்தெரியாத நபர்களால் இது நடைபெற்றதாக பத்திரிகைகளில் முன்பக்கத்தில் அறிக்கை வெளியிடப்படும்.

ஏன் இன்றும் கூட முஸ்லிம் கிராமங்களில் கப்பம் அறவிடப்படுகிறது. இதற்கெல்லாம் பெயர் – இனந்தெரியாத நபர்களின் நடவடிக்கை என்பதாகும். யார் இந்த இனம் தெரியாத நபர்கள்? இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணத்தில் சக்தி வாய்ந்த இயக்கமான புலிப்படையினர் உயிருடன் உலவுகின்ற போது – யார் இந்த இனந்தெரியாத நபர்கள்? இவர்கள் அரசபடையினரை விட, புலிப்படையினரையும் விட சக்தியும் பலமும் வாய்ந்தவர்களா? அப்படியாயின் இந்தக் கருத்தை அரச படையினர், புலிப்படையினர் வெட்கமில்லாமல், மனம் கூசாமல் ஏற்றுக் கொள்வார்களா? ஏற்றுக் கொண்டால் உண்மையென நாமும் ஒத்துக் கொள்ளலாம். இல்லையென்றால் இந்த இனம் தெரியாத நபர்களைக் கண்டு பிடித்து சந்திக்கு கொண்டு வந்து மின்கம்பத்தில் அல்லது மரத்தில் தலை கீழாகத் தொங்க விடுவது யார் பொறுப்பு? இந்த இனம் தெரியாத நபர்களைக் கண்டு பிடித்து மக்கள் மத்தியில் [illegible] படையினரதும், புலிப்படையினரதும் தலையாய கடமையாகும்.

முஸ்லிம்கள் காட்டிக் கொடுப்பவர்களுமல்ல, கூட்டிக் கொடுப்பவர்களுமல்ல. முஸ்லிம்களது இரத்தத்தில் கலந்துள்ளது சகோதரத்துவமும், சமாதானமுமாகும். இதற்கு எடுத்துக்காட்டாக முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சந்திக்கும் பொழுது முகம் மலர்ந்து புன்னகை பூத்து உங்கள் மீது சாந்தியும், சமாதானமும் உண்டாவதாக என்றே சலாம் கூறுகின்றனர்.

இலங்கையின் பண்டைய அரசியல் வரலாற்றைப் புரட்டிப்பார்த்தால் – அந்நிய அரசர்களிடம் முஸ்லிம்கள் விசுவாசமுள்ளவர்களாகவும், அரசைப் பாதுகாக்கக் கூடியவர்களாகவுமே சேவை செய்துள்ளனர். அதே வரிசையில்தான் போராட்ட காலத்தில் புலிப்படையினரைக் காட்டிக் கொடுக்காமல் வீடுகளுக்குள் வைத்து பாதுகாப்பு வழங்கியவர்கள்தான் முஸ்லிம்கள். இதனால்தான் இன்றும் கூட பல புலித்தலைவர்கள் உயிருடன் உலாவருகின்றனர். எனவே ஒரு போதும் நன்றி மறவாமல் முஸ்லிம்களை அரவணைத்துச் செல்ல வேண்டிய தார்மீகப் பொறுப்பு புலிப்படையினருக்கே உள்ளது.

போராட்டம் என்பது முஸ்லிம்களுக்கொன்றும் புதிய அத்தியாயமல்ல. அதை அவர்கள் பயிற்சியெடுத்துத்தான் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதில்லை. [illegible] அநியாயத்துக்கும் அட்டூழியத்துக்கு மெதிராக முதன்முதலில் சாத்வீகமாக போராட்டத்தை ஆரம்பித்தது முஸ்லிம்களே. முஸ்லிம் கிராமங்களில் முஸ்லிம்களுக்கெதிராக அட்டூழியங்களை, அநியாயங்களைச் செய்து விட்டு இனம் தெரியாதநபர்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. இதற்கொரு விடிவும், முடிவும் தேவை. எனவே சகல அரசியல் கட்சிகளிலுமுள்ள முஸ்லிம் அரசியல்வாதிகளே – தங்களுக்குள் உள்ள பதவிப்பட்ட ஆசைகளை ஒரு புறம் ஒதுக்கி வைத்து விட்டு சமூகத்தின் பெயரால் தனித்துவம் காக்க ஒன்றுபடுங்கள்.

அபூ அப்துல்லாஹ்
பொத்துவில்

முஸ்லிம் இளைஞர்களே! கல்விமான்களே! பொறுத்தது போதும். இனிமேல் பொங்கி எழ வேண்டிய தருணம் வந்து விட்டது. ஒன்றில் அரசியல்வாதிகளை ஒன்றுபடுத்தி நீங்களும் அவர்களுடன் ஒன்று சேருங்கள். இல்லையேல் அரசியல்வாதிகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்து விட்டு நீங்களாவது ஒன்று சேருங்கள். நாம் நமக்குள் உள்ள வேற்றுமைகளை மறந்து – ஒன்று சேர வேண்டும். ஒரே கொடியின் கீழாக வேண்டும். ஒரே தலைமைத்துவத்துக்கு கட்டுப்பட்டு முன்னேற வேண்டும். இன்னும் பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. பார்வையாளர்களாக இருந்தது போதும். பங்காளர்களாகுவோம் வாருங்கள் குட்டக் குட்டக் குனிந்தது போதும் தலை உயர்த்திப் பாருங்கள். தலை நிமிர்ந்து வாழவோம் முன்வாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்ரஃப் நினைவுதினமும் நினைவு கூரப்படாத ஆளுமையும்

வளர்மதி

இலங்கைவாழ் மக்களின் அரசியல் வாழ்வில் மட்டுமல்லாமல் அவர்களுடைய இயல்பு நிலையிலும் மிகப்பெரிய திரும்பற் புள்ளியாக காணப்படும் இக்கால கட்டத்தில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் என்ன செய்கிறார்கள்? நமது மக்களுக்காகப் போராடுவதாகக் கூறும் இவர்கள் ஏன் மக்களுடைய நியாயமான அபிலாஷைகளுக்காக எதுவும் பேச முடியாத பலவீனங்களுடன் ஆனால் நமது மக்களின் அரசியல் அதிகாரம் பெற்றுக்கொடுத்த பரிவாரங்களுடன் வெட்கமின்றி மக்களிடம் வருகின்றனர்.

வெறும் சோத்துப் பார்சல்களுக்குள் அஷ்ரஃப் பற்றிய நினைவுகள் மூடி மறைக்கப்பட்ட துரோகத்தினைத் தவிர அந்த அரசியல் ஆளுமைக்கு அன்றைய தினத்தில் நமது அரசியல் தலைமைகள் வேறெதையும் கைமாறாகச் செய்யவில்லை. அஷ்ரஃப் தினம் அனுஷ்டிக்கப்பட்டது என்பதைவிட என்னைப் பொறுத்தவரையில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது என்றுதான் கூற வேண்டும். பதிலுக்குப் பதிலாக சோறு கொடுத்து மீண்டுமொரு தடவை நமது மக்களை சுய அரசியல் தொடர்பாக சிந்திக்கவேனும் விடாது மிகக் கடுமையாகத் தடுத்த நிகழ்வுகள் அம்பாறை மாவட்டத்தில் ஏராளமாக நடந்தேறியுள்ளன. இதனை அரசியல் தலைமைகள் ஏட்டிக்குப் போட்டியாக வீர முழக்கத்துடன் விமரிசையாக நடாத்தியதையும் குறிப்பிடத்தான் வேண்டும்.

தனது தலைமையைத் தக்கவைக்க ஹக்கீம் அவர்கள் அட்டாளைச்சேனை மத்திய ஜும்ஆ பள்ளியில் இரண்டரை மணி நேரம் தட்டுத்தடுமாறி முயற்சி செய்து உரையாற்றியதையும் உதாரணங்களாக கிலாபத்தில் உஸ்மான் (றழி) கொலையும், முஆவியா (றழி) இன் செயற்பாடுகளையும் கூறி தன்னையும் அலி (றழி) அவர்களையும் ஒரேபார்வையில் மக்கள் முன் வைத்ததையும் கண்டு சிரிக்கத்தான் முடிந்தது.

இவ்வாறு ஒருவர் பள்ளியில் சொல்லி விட்டுச்செல்ல மாலையில் அஷ்ரஃப் காங்கிரஸ் பரிவாரங்கள் வந்தது அட்டாளைச்சேனைக்கு. இந்த முறை செப். 16 அட்டாளைச்சேனையையே மையமாகக் கொண்டிருந்தது. இலங்கையின் இனவாத அரசியலுக்குள் பேரினவாத முகவர்களை கட்டுடைத்துக் கொண்டு தனித்துவப் போக்குடனான வீரமிக்க ஜனநாயகப் போராளியாகத்தான் தலைவருடைய ஆளுமையினை நமது சமூகம் முதலில் கண்டது. பாஸிசப் புலிகளுடன் ஏனைய தமிழ் இயக்கங்களின் ஆயுதக் கலாசாரத்திற்குள் வடக்கு மற்றும் கிழக்கின் சுதந்திரங்கள் பறிக்கப்பட்டுக் கிடந்த போதுதான் நமது அரசியல் சக்தியின் உதயத்தினை அஷ்ரஃப் நமது மக்களின் தியாகங்களுக்கு மத்தியில் மெய்ப்பிக்கச் செய்தார். இன்னும் மறக்க முடியாத 89 தேர்தல்களின் நினைவலைகளை ஞாபகமூட்டிப் பார்க்கிறேன். நமது சமூகம் முதற்தடவையாக சுய ஆளுகை அதிகாரங்களைப் பெற்றுக்கொண்ட அன்றைய நாட்களை திரைமறைவின்பின் காய் நகர்த்தி பேரினவாதிகள் அழித்தொழித்ததை நம்மால் மறக்கவே முடியாது.

நாங்கள் அஷ்ரஃபின் அரசியல் பாசறையில் வளர்ந்தவர்கள் என்று மார்தட்டிச் சொல்லும் நமது சுயதன அரசியல் தலைமைகள் எவராவது தலைவரின் அரசியல் போக்கினை தொடர்ந்திருக்கிறார்களா? 2000 செப்டம்பர் 16 அன்று நடந்தேறிய கொலை நிகழ்வின், நாம் திக்கின்றி நிற்பதையும் நமது தலைமைகள் என்போரின் முனாபிக்தனமான செயற்பாடுகளையும் ஞாபகப்படுத்தியவாறு 2003 செப்டம்பர் 16 இற்குள் நுழைவோம். கிழக்கில் அதுவும் அஷ்ரஃப் எனும் அரசியல் ஆளுமை அடையாளம் காணப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் நடந்தேறியவைதான் என்ன? இங்கு யாருக்காக யாரால் அஷ்ரஃப் நினைவு கூரப்பட்டார்? எந்த நோக்கில் அஷ்ரப்பை இத்தலைமைகள் நினைவு கூர்ந்தனர்? "அதிகம் வெட்கித் தலைகுனிய வேண்டிய அரசியல் தலைமைகளைக் கொண்டிருப்பதால் நாமும் நமது சமூகமும் படுமோசமான வழிகாட்டல் ஒன்றிற்குள் தள்ளப்பட்டுள்ளோம்". அஷ்ரஃப் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் தற்போது திராவிட இயக்கங்களைப்போல் "சால்வை போர்த்தும் விற்பன்னர்களாக" அதிகம் விளம்பரங்களை நாடி இருப்பதை கண்டு மக்கள் அழுவதா சிரிப்பதா எனத் தெரியாமல் நிற்பதையும் செப்டம்பர் 16 இரவு அட்டாளைச்சேனையில் காணமுடிந்தது. New Model ஆக மேடையின் தரையிலே அமர்ந்து மக்கள் முன் மாறிமாறி சால்வை போர்த்தி (கட்சியிலுள்ள அனைவருக்கும்) மகிழ்ந்து சிரித்துக் கொட்டியதை ஒலி பெருக்கியில் கூட கேட்க முடிந்தது. அஷ்ரஃப் என்ற அந்த திறன்பட்ட அரசியல் ஆளுமையை உண்மையிலேயே நினைவு கூர்வதற்காகவா இந்த ஏற்பாடுகள் நடந்தனவென்றால் இல்லை என்பதைத் தவிர வேறெதுவும் பதிலாக வர முடியாது.

எங்களைவிட இன்றைய முஸ்லிம் அரசியல் தலைமைகள் அஷ்ரஃப்புடன் நெருங்கிக்கிடந்தவைகள். ஆனால் நாங்கள் அவரை நோக்கும் மரியாதை உணர்வுகூட இந்தத் தலைமைகளுக்கு தெரிந்திருக்கவில்லையோ? சிங்கள- தமிழ் பிரச்சினையாக அறியப்பட்டிருந்த இலங்கை இனப்பிரச்சினையை சிங்கள-தமிழ்-முஸ்லிம் இனங்களுக்கிடையிலான முக்கோண பிரச்சினையாக வெளிப்படுத்திய அந்த ஆளுமையினை மதிக்கத் தெரியாத அவரின் அரசியல் வழிகளை நுணுக்கமாகப் பற்றியொழுகாத இவர்கள் அவரின் பெயரைக்கூறி தயவுசெய்து அரசியல் நடாத்த வேண்டாம். இன்று அவருக்கு துரோகம் செய்பவர்களைவிட அஷ்ரஃப்பையும் அவரின் ஆளுமையினையும் ஆராய்ந்து அவரின் அரசியலை வெளிப்படுத்த வேண்டும் என்கிற சமூக சக்திகள் வெளிவந்து விட்டார்கள். எனத் தோன்றுகிறது. வெறும் முத்திரை வெளியீடு நமது அரசியல் ஆளுமையினை கௌரவிப்பதாக அமைந்துவிடாது. கௌரவித்தல் என்பது என்னவென முதலில் இவர்கள் அனைவரும் அறியவேண்டும். இந்தப் போலிகள் மூலம் அஷ்ரஃபை நாம் நினைவு கூரவில்லை என்பதைவிட்டு நாம் மிக்க மகிழ்கிறோம். தலைவர் இருக்கும்போது இந்த அரசியல் தலைமைகள் நல்ல முட்டைகளாகத்தான் தம்மை இனங்காட்டின. ஆனால் இவை வெறும் கூழ் என்பதை அஷ்ரஃப் கூட அறிந்திருக்கமாட்டார் போலும் என நினைக்கிறேன்.

அஷ்ரஃப் அவர்கள் கொலை செய்யப்பட்டபோது சோமஹிழி பௌத்தருக்கு இப்படி எழுதியிருந்தார் "அஷ்ரஃபின் உடலை பத்திரிகைகள் தின்றுவிட்டன"வென்று. ஆனால் இன்று அவரின் வாரிசுகளாகக் கூறிக்கொள்வோர் அஷ்ரஃப் அவர்களின் உணர்வுகளை விற்று தமது சுயங்களை வளர்த்துவிட்டனவே" இதைவிடப் பெரிய தவறு நமது அரசியலில் வேறென்ன.

இறுதியாக, நமது மக்களின் எண்ணங்கள் அஷ்ரஃப்பை எங்கே வைத்து மரியாதைப்படுத்த, தலைமைகள் அவரை கீழ் நிலைப்படுத்திய சூழலை விடுத்து நமது மக்களுடன் இணைந்து அந்த ஆளுமையினை நாம் மனங்கொள்வோம். நமது சமூக அசை வியக்கத்தில் அவர் ஏற்படுத்திய பல்கோண அதிர்வுகளை மனதார நினைவு கொள்ள வேண்டும். அவருடனான முரண்பாடுகளைப் பார்க்கிலும் அவரின் அரசியல் காய் நகர்த்தல்களை நாம் மேற்கொண்டு நமது மக்களுக்கான வாழ்வின் அத்திவாரங்களையாவது மிகப்பலமாக இடுவோம். அவரின் வெற்றிடம் உடனடியாக இல்லாத போதும் கூட்டாகவேனும் நிரப்பப்பட வேண்டும் என்ற ஆதங்கத்துடன் அதற்காக நாம் முயல்வதே அந்த ஆளுமைக்கானதும் நம் தேசமக்களுக்கானதுமான நமது கடமையாகும்.

நமது அசைவு எப்படி அமையலாம்?

நீண்ட கால மௌனத்திற்கும், நோக்கத்திற்கும் பிற்பாடு நமது முஸ்லிம் சமூகம் விடுதலை பிரசவ வலிகளைச் சுமந்து கொண்டு அதன் குழந்தைகளை எமது தேசத்தில் பிரசவிக்க ஆரம்பித்துள்ளது. அல்லது தனது விடுதலைக்கான உட்கட்டுமான செயற்திட்டங்களில் இறங்கியுள்ளது. இந்நிலையில் அதன் போராட்ட அரசியல் போக்கு எப்படி அமைதல் வேண்டும் என்பதை சிறிது கலந்துரையாடுவோம்.

முஸ்லிம் சமூகம் இஸ்லாத்தினையே தனது நகர்வுக்கான உரைகல்லாகக் கொண்டிருக்கும். அதன் உரைகல் அல்லது நகர்வுகளின் அடிப்படை கொம்யூனிசமோ முதலாளித்துவமோ அல்ல. இந்த வகையில் முஸ்லிம் சமூகத்தின் உயிர்ப்புக்கான விடுதலைப் போராட்டத்தின் அசைவுகளும் இஸ்லாத்தின் நிழலில் நின்றே நடைபெறுதல் வேண்டும். அப்போதே அதன் இறுதி இலக்கு சரியாக அடையப்பட முடியும்.

இந்த வகையில் இஸ்லாம் செல்வத்திற்கும், செல்வந்தருக்கும்; அதிகாரத்திற்கும், அரசியல்வாதிக்கும் முற்றிலும் எதிரானது அல்ல. அதிகார வர்க்கம் என்றும் முதலாளித்துவ பூர்வீகவர்க்கம் என்றும் சமூகத்தை கூறு போடுவது கொம்யூனிஸ சித்தாந்தத்தின் நிலைப்பாடேயன்றி, இஸ்லாமியத்தின் நிலைப்பாடல்ல. இஸ்லாம் அதிகாரத்தை செல்வத்தை துஷ்பிரயோகம் செய்வதைக் கண்டிக்கிறதே தவிர அதனை நல்ல விதத்தில் சத்தியத்தின் செயற்பாடுகளுக்காகப் பாவிப்பதை ஒரு போதும் எதிர்க்கவில்லை.



இஸ்லாத்தின் ஆரம்ப காலப் போராட்டங்களின் போது தமது செல்வத்தைக் கொண்டு வந்து குவித்த செல்வந்தர்களுள் ஒருவராக இஸ்லாத்தின் நான்காம் கலீபா உஸ்மான் (ரலி) இருந்தார்.

இஸ்லாத்தின் செல்வம், அதிகாரம் பற்றிய கருத்தாடல் மிக நீண்ட ஆய்வை வேண்டி நிற்பவை. இங்கு நாம் அண்மையில் நிகழ்ந்த முஸ்லிம் உம்மாவின் இஸ்லாமிய விடுதலைப் பின்னணிக் குரலாய் நடந்த ஒலிப்பேழை வெளியீட்டு நிகழ்வு தொடர்பில் சில விடயங்களை தெளிவுறுத்தவும் அதனடியாக எமது சிந்தனைகள் எப்படி வேறு சித்தாந்தங்களின் வாய்க்கால்களாக இருக்கின்றது என்பதுவை தொட்டுக் காட்டவுமே இந்த இடத்தில் அதிகாரம், செல்வம் பற்றி சற்று எமது சித்தாந்தத் தெளிவை முன் வைத்தோம்.

அண்மையில் (12.09.2003) கொழும்பு ஸாஹிறாக்கல்லூரியில் நடந்த ஒலிப் பேழை வெளியீட்டு நிகழ்வு அரசியல்வாதிகளுக்கும் செல்வந்தர்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கலை இலக்கிய ஆர்வலர்களை புறக்கணித்ததாக முஸ்லிம் குரலின் அச்சாறு பகுதியில் லைலா அஷ்ராவி விஷனப்பட்டுக் கொண்டிருந்தார். விஷனமும் வரவேற்கத்தக்கது. ஆனாலும் எமது விடுதலை நகர்விற்கான சர்வதேசிய, தேசிய நெடு நாளைய அசைவின் வரலாறு எமது பாதையை நீட்டிப்பார்க்க வைக்கிறது.

சர்வதேசிய எழுச்சி அசைவில் அதிகாரத்துக்கு முற்றிலும் எதிராக சூழலமைவால் பேசிய, அறிஞர் செய்யத்குதுப் போன்றோரின் சிந்தனைகள் இன்று மீள்வாசிப்பு செய்யப்பட்டு இஸ்லாமிய உம்மாவின் விடுதலைப்பாதை மீள்வரைவு செய்யப்பட்டு வருகிறது. இந்த இடத்தில் நமது தேசியத்துக்குள்ளான குறுகிய சிந்தனைகளும் இன்று மீள்வாசிப்பு செய்யப்பட வேண்டும். என்ற வாதம் இன்று பரவலாக எழுப்பப்பட்டு வருகின்றது. அதன் ஒரு வெளிப்பாடாகவும் 'காற்று சுமந்து வரும் கனவுகள்' ஒலிப் பேழை வெளியிட்டு நிகழ்வு அமைந்திருந்தது.

அங்கு ஹாசிம் உமரோ ரவூப் ஹக்கீமோ முக்கியத்துவப்படுத்தப்பட்டதாகக் கருதுவது இராஜ தந்திர அரசியலின் இன்றைய போக்கை ஆழமாக அறியாமை என்றுதான் கூற வேண்டும். ரவூப் ஹகீம் என்பவரை அந்த அதிகாரத்தில் அமர்த்தியது நமது வாக்குகள். அந்த அதிகாரம் ரவூப் ஹக்கீமுக்குரியதல்ல. அது நமக்குரியது. அவர் அதனை பல்வேறு வகையிலும் துஷ்பிரயோகம் செய்யும் போது அதனை நமது சமூக எழுச்சிக்காகப் பயன்படுத்துவது கூடாதா? ஹாசிம் உமரின் ஆழ அகலங்கள் நமக்குத் தெரியாது. என்றாலும் அவர் கையில் வைத்திருப்பது சமூகத்தின் சொத்து. அது அவரின் தனிச் சொத்தல்ல. இஸ்லாத்தின் தனித்துவமான செல்வம் பற்றிய கணிப்பீடும் இதுதான்.

செல்வம், செல்வத்தை வைத்திருக்கும் செல்வந்தருக்குரியதல்ல. அதில் அவரின் பங்கு போக மீதமானவை ஏனையோருக்கானது. அவர் அதன் பிரதிநிதி மாத்திரமே. அந்த வகையில் இஸ்லாமிய எழுச்சியின் நகர்விற்காக அவரின் செல்வத்தையும் புகழையும் பாவித்ததில் என்ன தவறு இருக்கப் போகிறது? அதிகாரத்தையும் செல்வத்தையும் ஒரு வர்க்கமாக அடையாளப்படுத்தி அதனை முற்று முழுதாக மறுப்பதற்கு நாம் ஒன்றும் கொம்யூனிச சித்தாந்திகளல்ல. நாம் இஸ்லாமியவாதிகள். நாம் நமது சித்தாந்தத்தின் நெறியிலேயே இயங்க வேண்டும்.

அது போக கொம்யூனிஸத்தின் இரும்புத்திரை கோட்பாடும் அது எதனை எதிர்த்ததுவோ அதனையே ஸ்டாலினிஸத்தின் வாயிலாக செய்ததுவும் தமக்கு மறந்து போய் விடவில்லை. அந்த இறுக்கமான கோட்பாடுகளை கேள்விக்குட்படுத்தும் ஜெயமோகனின் 'பின்தொடரும் நிழலின் குரல்' போன்ற நாவல்களும் நமது கவனத்தை பெற வேண்டும்.

இங்கு நாம் விமர்சனத்தை மறுதலிக்கவோ அதற்குரிய எதிர் சாட்சியங்களை முன் வைக்கவோ முயலவில்லை. மாறாக எமது சிந்திப்பு முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்றே சுட்டிக் காட்ட முயலுகிறோம். நாம் இஸ்லாமிய சமூகத்தின் அரசியல் நகர்வுகளை, கலை வெளிப்பாடுகளைப் பார்க்கும் போது நமக்கான கோணத்திலிருந்து சிந்திக்கவும், முன் நடத்தவும் தெரிந்திருக்க வேண்டும். இல்லாத போது நாம் எதிர் பார்க்கும் விடிவு நமக்கான விடிவாக இல்லாது தப்பிப் பிறந்த குழந்தையாகவே இருக்கும். இன்னோர் வகையில் எமது நாட்டுப் பாஷையில் சொன்னால் தமிழ் சமூகத்தின் இன்றைய சுய கருவறுப்பு நிலையையும் விட மோசமான நிலையை நாம் எதிர் கொள்ள வேண்டிவரும்.

நபி (ஸல்) அவர்கள் மன்னர் நஜ்ஜாஸியுடன் வைத்த உறவும் குறைஷிக் காபிர்களுடன் செய்த ஹுதைபியா உடன்பாடும் சமூகத்திலிருந்த நயவஞ்சகர்களுடன் வைத்த உறவும் மீள் வாசிப்பு செய்யப்பட வேண்டும். அவை எமக்கான அரசியல் பாதை எவ்வாறு அமைய வேண்டும். என்பதைச் சொல்லித் தரும். நமக்காகக் குரல் எழுப்பும் சமூகத்தியாகிகள் கொஞ்சம் இஸ்லாத்தைப் புரட்டிப் பார்த்து விட்டு தமது நகர்வை ஆரம்பிக்கமாட்டார்களா?

எம். என். இக்ரம் ஹாமியா நளீமியா
லண்டன்

முஸ்லிம் சமூகத்தை வேறுபடுத்தும் இரு கோட்பாடுகள்

இருவிதமான வாழ்வியல் அமைவொழுங்கையும், பிரச்சினைகளையும் எதிர்நோக்கும் இயல்பைக் கொண்ட முஸ்லிம் சமூகத்தின் அரசியல், பொருளாதார சமூகவியல் செயற்பாடுகளை விமர்சிக்கின்றபோதும், அவற்றை இனம் கண்டு வெளிக்காட்டும்போதும் இரு வேறுவிதமான போக்குகளை கையாள வேண்டும் என்ற உண்மையை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இவ்வித்தியாசத்திற்கு இணங்க எமது வெளிப்பாடுகளை வெளிக்காட்ட வேண்டுமாயின் தெற்கு, வடக்கு கிழக்கு முஸ்லிம்களுக்கு இடையிலான சமூகவியல் வேறுபாட்டை போட்டாட்டு ரீதியில் அறிந்து வைத்துக்கொள்வது அவசியம். அவ்வுண்மையை அறிந்து வைப்பதன் மூலமும் இலங்கை முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும்போது ஆரோக்கியமான முடிவுகளை கண்டுகொள்ள முடியும். அத்தோடு ஒரு குறிப்பிட்ட பிரிவினரின் பிரச்சினைகளைக் கையாளும் விதத்துக்கு ஏற்ப, மறுதரப்பினரின் பிரச்சினைகளையும் சிந்திப்பதிலிருந்தோ, கையாளவதிலிருந்தோ விடுபடமுடியும்.

இலங்கையில் இரு வேறுபட்ட சமூகங்களுக்கிடையில் அமையப்பெற்றுள்ள பௌதீக ஒழுங்கில், இரு வேறுவிதமான வடிவில் பிரச்சினைகளை எதிர்நோக்கும் ஒரே மொழிபேசும் மற்றொரு சமூகமாக வாழும் முஸ்லிம்கள் ஒத்த மொழியுடைய மற்ற சமூகமான தமிழரின் ஆதிக்க சக்திகளின் அடக்கு முறைக்கு உள்ளாக்கப்படுவதும், இரு முனைப் போராட்டத்தில் (தமிழ் சிங்களவர்களுக்கிடையில்) சிக்கியுள்ளவர்களுமான ஒரு பிரிவினரின், தனித்துவம் பேணல், இருப்பைப் பாதுகாத்தல் போன்றவற்றுக்கு ஒரு தீர்வாக வெளிக்காட்டப்படுவதே முஸ்லிம் தேசம். வடக்கு கிழக்கு முஸ்லிம் அரசியல் என அடையாளப்படுத்தலாம்.

இவ்வடிப்படையை மையமாக வைத்தே வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் அரசியல் சமூகவியல் விமர்சனங்கள் எழுகின்றன. முஸ்லிம்களின் பிரதான தனித்துவ அரசியல் எனும்போதும் இதைச் சூழவே அம்சங்கள் வெளிக்கொணரப்படுகின்றன. முஸ்லிம் ஊடகங்களும் இதை மையமாக வைத்தே நிரப்பப்படுகின்றன. முஸ்லிம் அரசியலும் இதை இலக்காகக் கொண்டே இயங்குகின்றது.

தென்னிலங்கையில் வாழும் முஸ்லிம் சமூகத்தின் அரசியல் வழிமுறை சமூகவியல் வெளிப்பாட்டில், தன்னைத் தேசமாக இனம்காட்டவோ, தனித்துவ அரசியலில் ஈடுபடவோ இயலாமையைக் கொண்டிருக்கும். ஏனெனில், இங்கு வாழும் முஸ்லிம்கள் பௌதீக ரீதியாக தூரப்பட்டு வாழ்விடங்களைக் கொண்டிருப்பதும், சிங்கள ஆதிக்கச்சக்திகளின் திட்டமிட்ட மேலாதிக்கத்திற்குள் நசுக்கப்பட்டுக் கொண்டிருப்பதுமாகும்.

தெற்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை வெளிக்கொணரும்போதும், ஆய்வு செய்யும்போதும், அவர்களின் சமூகவியல் தேவைகளை வெளிப்படுத்தும் போதும், அவர்களுக்கான அரசியல் வழிமுறைகள் வகுக்கப்படும்போதும் மேற்கொன்ன கோட்பாட்டு யதார்த்தத்தைக் கருத்திற்கொள்ள வேண்டும். மாறாக வடக்கு கிழக்குப் பிரச்சினைகளை ஆய்வு செய்வதன் அடிப்படை எண்ணப்போக்குகளை வைத்து இதை நோக்குவது தவறு.

தெற்கு முஸ்லிம்களிடம் சமூகவியல் பிரச்சினைகள் நிறையவே உண்டு. ஆனால் அவற்றை அரசியல் வடிவம் கொடுத்து வெளிக்கொணர இயலாமையிலேயே அவர்கள் இருக்கின்றனர். இதனால் அவர்கள் அவற்றை வெளிக்கொணர முயல்வதுமில்லை. அத்தோடு அவற்றை வெளிக்காட்ட ஊடகமும் இல்லை. இதனால் எப்பிரச்சினையும், தேவையும் அற்ற சமூகமாக அவர்கள் காட்டப்படுகிறார்கள்.

இலங்கையில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை அடையாளம் காட்டும்போது தெற்கு முஸ்லிம்களினதும் பிரச்சினைகளை, தேவைகளை இனம்காட்டுவதற்கான ஒழுங்குபடுத்தல்கள் அவசியம். ஆதலால் முஸ்லிம் ஊடகங்கள், முஸ்லிம் சமூக ஆய்வாளர்கள் மேற்சொன்ன கோட்பாட்டு யாதார்த்தங்களுக்கு இணங்க பிரச்சினைகளை ஆய்வதும், தேவைகளை அடையாளப்படுத்துவதும் அவசியமாகிறது.

எம்.எப்.எம். இஹ்ஸான், பேருவளை.

ஒரு போராளியின் வயல்வெளி



கறுப்புகளாயும்
கிழிந்தது போலவும்
எனது எதிர் காலம்

பசுமை குன்றிய
வயல் வெளி ஒன்றில்
இருக்கும் வேளாண்மை
நான்
எனது கதிரில்
மணிகள் இல்லை
குருவிகள் கொத்தின

எனக்குப் பாய்கின்ற
தண்ணீர் சிகப்பு
பசளை பிணங்கள்
அடிக்கடி வந்து என் தலை கோதும்

காற்று ஹர்த்தால்
ஊரடங்கென்று

என் வயல் வெளி
நரகம்
அறுவடை செய்ய
விதைத்தவன் வருவான்
அவன் தலை உடைத்து
மூளையை எடுப்பேன்

உச்சியில் வைப்பேன்
எண்ணெய்யாய்
குளித்து
பாடிடும் பாடல் என் எதிரியின் பெயரால்
ஆக நான் ஒரு போராளி

சோலைக்கிளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறு தொல்பொருள் ஆய்வுகளை இஸ்லாம் மறுக்கின்றதா? 3

"(வ்வினறு)வனே இரண்டு கடல்களையும் ஒன்றோடு ஒன்று சந்திக்கச் செய்தான். (ஆயினும்) அவற்றிடையே ஒரு தடுப்பும் இருக்கிறது. அதை அவை மீறமாட்டா" (குர்ஆன் - 55:19,20)

பல ஆண்டுகளுக்கு முன்னர் மத்திய தரைக்கடல்பகுதியில் பிரஞ்சுக்காரரான ஜாக் தான் ஜாக்குஸ்ஸோ என்ற ஆழ்கடல் ஆய்வாளர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். ஆய்வுக்காக அவர் மாட்டியிருந்த முகமூடி சற்றுநகர்ந்ததும் திடீரென கடல் நீர் அவர் வாய்க்குள் சென்றுவிட்டது. சென்ற நீர் உப்புக்கரிக்கவில்லை. வழக்கமாக உப்புக்கலக்காத கடல் நீர் பற்றி அத்னு கடற்பகுதியிலிருந்து வந்த கடலாடிகள் அவரிடமிருந்து அவர் ஒரு காலத்தில் கேள்விப்பட்டதுண்டு.

ஆனால், அப்போது அவர் அதை நம்பவில்லை. இப்போது அவர் வாயுனுள் சென்ற நீரில் கைப்பு இல்லை என்பது மட்டுமல்ல, அது மிக மதுரமாகவும் இருந்தது. அதைத்துப்பி விட்டு, அருகிலிருந்த நீர்ப்பரப்பிலிருந்து மீண்டும் அருந்தினார். அது கைப்புக்கரித்தது. அவருடைய ஆய்வு மனப்பான்மை மீண்டும் சில இடங்களில் சோதித்துப்பார்க்கத் தூண்டிற்று.

எம்.எம்.எம். நூறுல்ஹக் சாய்ந்தமருது 05.

கடலில் பொதுவாகவே உப்பு நீர் இருந்தாலும், சில இடங்களில் மதுர மான தண்ணீரும் இருக்கிறது. என்ப தாக்கண்டு பிடித்தார். ஆனால் இரண்டு விதமான தண்ணீரும் ஒன்றோடொன்று ஒட்டியதாகவே கடலுக்குள் இருக்கிறது. இருப்பினும் ஒன்றுடன் ஒன்று கலப்பதில்லை.

இந்நிகழ்புதிர்பற்றி எவருக்கேனும் விளக்கம் தெரியுமா? என்று விசாரிக்கலானார். ஹாரிஸ் புகைல் என்பவர் அழ்வமான ஆய்வுகள் செய்து கொண்டிருக்கிறாராம். அவரிடம் சென்று கேட்டுப்பாருங்கள் என்று சிலர் குஸ்ஸோவை வழிப்படுத்தினர். அந்த மாமேதையிடம் குஸ்ஸோ வந்து தம் அனுபவத்தை எடுத்துச் சொன்னார்.

"உங்களுக்கு இப்போதுதானே இவ்வனுபவம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் குர்ஆன் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே இது உண்மை என்று தெளிவுபடுத்தியிருக்கிறது" என்று சொல்லி மேற்கண்ட மூன்று வசனங்களிலிருந்து தம் ஆதாரத்தை கலாநிதி ஹாரிஸ் புகைல் எடுத்து விளக்கினார். (நன்றி : குர்ஆன் தர்ஜுமா)

பொதுவாக நல்ல தண்ணீரைக் கொண்ட நதிகளனைத்தும் இறுதியில் கடலில்தான் வாய்க் கலக்கின்றன. அவ்வாறு கலக்கும் இடத்தைக் கவனிக்கும்பொழுது அறைவன் கூறும் இவ்வுண்மை நன்கு தெரியும். எகிப்தில் ஓடும் மிகப் பெரிய நீல நதியும், ஷாம் தேசத்தில் ஓடும் தஜலா, புராத் என்னும் நதிகளும். இந்தியாவில் ஓடும் கங்கை, யமுனை நதிகளும் பல்நூற்றுக்கணக்கான மைல்கள் வரை ஓடி, இறுதியில் சமுத்திரத்துடன் ஐக்கியமாகி விடுகின்றன. அவ்விடத்தில் சென்று கவனித்துப்பார்க்கும் பொழுது இரு தண்ணீர்களின் சுவையும், நிறமும் வெவ்வேறாக இருப்பதைக்காணலாம்" (நன்றி : தப்ஸீர் அன்வாருல் குர்ஆன், ஹாமீம் காலமா ஹுஸைன்உக்கள்)

இப்படி மனிதனின் புலன்களுக்கும், அறிவிற்கும், ஆராய்ச்சிக்கும் அப்பாலான பல்வேறு விசயங்கள் இருக்கின்றன. அவற்றில் ஒன்றே மேற்படி கண்டுபிடிப்பினால், அனுபவத்தினால் பெறப்பட்ட உண்மையாகும். இது போன்றே நபி நூஹ் (அலை) அவர்களின் மரக்கலமும், அவர் காலத்தைய வெள்ளப்பெருக்கு பற்றிய உண்மைகளுமாகும். இதனைக் குர்ஆன் இப்படிச் சொல்கின்றது.

நபி நூஹ் (அலை) அவர்களும் வெள்ளப் பெருக்கும்

"நூஹை அவருடைய சமூகத்தினரின்பால் (ரஸூலாகத்) திட்டமாக நாம் அனுப்பினோம். ஐம்பது ஆண்டுகள் தவிர ஆயிரம் ஆண்டுகள் அவர்களிடையே அவர் தங்கியிருந்தார். பிறகு அவர்(களுடைய சமுதாயத்தவர்)கள் அநியாயக்காரர்களாக இருக்கும் நிலையில் வெள்ளப் - பிரளயம் அவர்களைப்பிடித்துக் கொண்டது. எனவே அவரையும் (அவருடனிருந்த) கப்பல்வாசிகளையும் நாம் காப்பாற்றினோம். இன்னும் அதனை உலகத்தோருக்கு ஓர் அத்தாட்சியாக நாம் ஆக்கினோம்" (குர்ஆன் - 29:14.15)

நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பலையும் அல்லாஹ் அத்தாட்சியாக்கினான். இவை எப்படி என்று இந்த நூற்றாண்டில் கண்டுபிடிக்கப்பட்டது. நபி நூஹ் (அலை) அவர்களின் கப்பல் ஜூதி மலையில் தரைதட்டிற்று. அது ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் அங்கேயே கிடந்தது.

பல ஆண்டுகளுக்கு முன் துருக்கியிலுள்ள அராத் பகுதியில் இருக்கும் ஜூதி மலையுச்சிக்கு ஓர் ஆய்வுக்குழு சென்றது. சில நவீன விஞ்ஞான சோதனைகளின் மூலம், ஜூதி மலையுச்சியிலுள்ள கப்பல் நூஹ் நபி (அலை) அவர்களின் காலத்திலுள்ளது என்று ஆய்வுக்குழு உறுதிப்படுத்தியுள்ளது. (நன்றி : குர்ஆன் - தர்ஜுமா)

(இன்னும் வரும்.)

பொதுப்பிரச்சினைகளைப் புரிய வைக்க நமக்கென்று ஓர் அமைப்பு உடன் தேவை

"சமூர்த்திங்கிறாங்களே... அது என்ன விஷயம்...?" இப்படி ஒரு முஸ்லிம் மூதாட்டி முல்லாவிடம் சமீபத்தில் கேட்டார். அடுத்த வருடம் முதலாமாண்டில் தம் பிள்ளைகளுக்கு அனுமதி பெறுவதற்கான நேர்முகப் பரீட்சை, அனேக பாடசாலைகளில் நடைபெற்று வரும் காலப் பிரிவு இது. ஒரு நடுத்தர குடும்பத்து தலைவர், தன் அண்டை வீட்டாரிடம், "ஸ்கூல்ல பிள்ளையை சேர்க்க... வோட் லிஸ்ட் ஐஞ்சு வருஷத்திட கேட்கிறாங்களே... எங்கே போய் எடுக்கிறதுன்னு தெரியல்லயே...! என ஆதங்கப்படுகிறார் "எண்ட... ஐடென்டி கார்ட் காணாமல் போயிடிச்சி.. என்ன செய்றது?" - சராசரி குடிமகனின் குரல்...

முல்லாவின் செவிப்பறையை எட்டிய குறைபாடுகள் - தேவைகள் - தெரியாமைகள் - தேடல்கள். இப்படி ஒருவரா? இருவரா? முழு சமுதாயத்திலும் இப்படியான குறைபாடு உள்ளவர்கள் - தேவை உள்ளவர்கள் - தெரியாமல் தவிப்பவர்கள் - காலமெல்லாம் தேடிக் கொண்டே இருப்பவர்கள் - இவ்வாறு ஏதேனும் ஒரு காரணத்தினால், எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் "சும்மாவே" இருப்பவர்கள்... திரும்பும் திசை எங்கும் இருக்கவே செய்கின்றனர். இவர்களின் "இந்த"ப் பிரச்சினைக்கு முடிவென்ன? நிவாரணம் எது?

முல்லா சிந்திக்கலானேன்; எழுது கோலை எடுத்தேன். முல்லாவின் எழுது கோல் சிந்தும் மைத்துளிகள். ஒரு சிந்தனையை ஏந்தி வருகின்றன. சமுதாயப் பற்றோடு சற்றே சீர்தூக்கிப் பாருங்கள் ஒரு சமுதாயத் தேவை. உங்கள் உதவியை எதிர் பார்த்து காத்திருக்கிறது...

சமுதாய உடன் பிறப்புக்களே - உடனடியாக நமக்கென்று ஓர் அமைப்பு அங்குராரர்ப்பணஞ் செய்யப்பட வேண்டும். அது எந்த அரசியல் கட்சிக்கும், அமைச்சருக்கும், அரசியல் தலைமைத்துவத்துக்கும் தாளம் போடாமல், பொது அமைப்பாக இயங்க வேண்டும். ஒரு சில முஸ்லிம் தனவந்தர்கள், அதன் ஆரம்பகால செலவினங்களுக்காக - சமுதாய நெஞ்சங்களின் நலனுக்காக - ஸதக்காவாக - ஒரு கணிசமான தொகையை - எவ்வித இலாப நோக்குமின்றி - பின்னர் தனது விரல் அசைப்பிற்கு அமைப்பு வளைந்து கொடுக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு கிஞ்சிற்றும் இல்லாமல் வழங்க முன் வரவேண்டும்.

ஒவ்வொரு துறையிலும் நிபுணத்துவ அறிஞர்கள் இருக்கின்றார்களே... அவர்களில் குறிப்பிடத்தக்க சிலரை தேர்வு செய்து. ஓர் ஆலோசனை சபையை உண்டாக்க வேண்டும். அமைப்பின் நடவடிக்கைகளுக்காக செயல்படக் கூடிய ஓரிருவரை கணிசமான ஊதியத்திற்கு அமர்த்திக் கொள்ள வேண்டும்.

இந்த அமைப்பின் முக்கிய பணி - முழுமையான பணி எதுவாக இருக்க வேண்டும் தெரியுமா?

முஸ்லிம்களின் எவருக்கேனும் ஏதேனும் ஒரு தேவை இருந்தால். அதை நிறைவேற்றுவதே இவ்வமைப்பின் பிரதான நோக்கமாகும். சின்ன சின்ன விஷயங்களில், அன்றாட தேவைகளைத் தொட்டு எழும் விவகாரங்களில், அரசின் நிர்வாக இயக்கத்துடன் தொடர்பு கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களில் யாரை முதலில் அணுக வேண்டும்? தேவையான படிவங்களை (போர்ம்ஸ்) எங்கே பெற வேண்டும்? எப்படி நிரப்பித் தரவேண்டும்? குறிப்பிட்ட நாளில் பதில் கிட்டாவிடில், மேற்கொண்டு செய்ய வேண்டிய நடவடிக்கைகள் யாவை?

இப்படியான பல்வேறு அம்சங்களில் நம் சன்மார்க்க சகோதரர்கள் பலருக்கு விசயஞானம் இல்லை; தெளிவில்லை தீர்மானமுமில்லை; தீவிர முயற்சி இல்லை. வரட்டு கௌரவத்திற்காக இந்த அறியாமையை - தெரியாமையை மூடி மறைக்கக் கூடாது. இந்த அறியாமையால் நம் சமூகத்தின் ஓரங்கம் - அல்லது பல அங்கங்கள் தொய்வு காணுகின்றன. உரிமைகள் இருந்தும் ஊமைகளாகி விடுகின்றன.

நம்மில் ஒருவர் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்து விட்டாரா? அவர் முதலில் பகுதி பொலிஸ் நிலையத்தில் 'முறைப்பாடு' (என்ட்ரீ) செய்ய வேண்டும். முறைப்பாட்டுப் பதிவு பிரதியை எடுத்து கிராம சேவகரிடம் காட்டி அவர் மூலம் புதிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க வேண்டும். ஒரு மாதத்திற்குள் புதிய அடையாள அட்டை பதிவுத் தபாலில் வீடு தேடி வந்து. வாசற் கதவைத் தட்டும். இந்த வழிமுறைகளை நம்மில் அந்த "ஒருவருக்கு" சொல்லித் தர இந்த அமைப்பின் ஊழியர்கள் செயல்பட வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் ஜூன்மாதம் தேர்தல் இடாப்பு பதிவுக்கென. படிவங்களை வீடு வீடாக விநியோகிப்பார்கள். விநியோகிக்கும் நேரம். நம்மில் ஒருவரின் வீடு மூடிக் கிடந்தது. அதனால் அவ்வீட்டுக்கு படிவம் கொடுக்கப்படவில்லை. நம்மில் ஒருவரான அவ்வீட்டுத் தலை மகன் என்ன செய்யலாம்? எப்படி தேர்தல் இடாப்பில் பதிவுக்கான விண்ணப்பப் பத்திரத்தை பெறலாம்? உரிய திகதி முடிந்து விட்டால், நிரப்பப்பட்ட அந்த பிரஸ்தாப படிவத்தை எங்கே சேர்க்க வேண்டும்? இப்படியான வினாக்களுக்கு விடைகளை மட்டுமல்ல, தேவையான இடங்களை - முகவரிகளை - சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அந்த அமைப்பினர் சுட்டிக் காட்ட வேண்டும்.

நம் வீட்டின் வளவுப்பக்கம் பிறர் அத்து மீறி, நமது காணியை கபளீகரம் செய்ய, மழைகால குடிசையினுள் ஒட்டகம் படிப்படியாக நுழைந்தது போல, கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி வருகிறார்கள்? நம்மவர் என்ன செய்யலாம்? பொலிஸில் எப்படி முறைப்பாடு செய்யலாம், துவேசம் தலை தூக்கினால் சட்டத்தின் துணையை எப்படி நாடலாம். இப்படியான விடைகளை மட்டுமல்ல விளக்கங்களையும் "அந்த" அமைப்பினர் சொல்லித் தர வேண்டும்?

சமூர்த்தி உதவி பெறுவது ஒன்றும் ஹராமான காரியமல்ல. இந்த நாட்டின் பிரஜை என்ற உரிமையில், நம் நாட்டின் சொத்தில் நமக்கும் பங்குண்டு. அந்தப் பங்கினை மறுக்காமல், பெறுவதன் மூலம் நம் உரிமையை மேலும் உறுதி செய்தவர்களாவோம். ஆகையால் சமூர்த்தி கொடுப்பனவை நம் சமுதாயத்து அடிமட்டத்து சகோதரர்கள் எப்படி பெறுவது? நகர சபை வழங்கும் தர்மப்பணத்தை பெறுவது எங்ஙனம்? இப்படியான சாதாரண விஷயங்களிலும் நம்மவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்.

இவ்வாறு பிறப்பு அத்தாட்சிப் பத்திரம், கடவுச்சீட்டு, அடையாள அட்டை, காணி உறுதி போன்றன பல பெறுவது? விண்ணப்பிப்பது? காணாமற் போனால் மீளப் பெறும் வழி முறை போன்ற விடயங்களிலும். பாடசாலைக்கு நம் பிள்ளைகளை முதலாமாண்டில் சேர்ப்பதற்கு, தேவையான ஆவணங்களை எவ்வாறு சேகரிப்பது? பெறுவது? போன்ற விடயங்களிலும் நம் பொது அமைப்பு விடயங்களை சொல்லித் தர வேண்டும்.

நம் பிள்ளைகள் படிக்கிறார்கள். க.பொ.த. (உயர்தரம்) நல்ல பெறுபேறுகளுடன் சித்தியடைந்து விட்டார்கள். மேற்கொண்டு கல்வியைத் தொடர்வது எப்படி? எந்தப் பாடநெறியை (Course) தெரிவு செய்வது? மருத்துவராக வரவேண்டுமானால் எந்தெந்த பாடங்களில் சித்தி பெற வேண்டும்? கல்வியைத் தொடர வாய்ப்பில்லையா? புலமைப்பரிசில் பெறும் வாய்ப்பு உண்டா? அதற்கு என்ன செய்யலாம் இப்படியான கல்வித்துறை சார் வழிகளிலும் நம் மாணவர்களுக்கு தெளிவேற்படுத்தலாம்! மேலும் - எந்தெந்த அரசு நிறுவனங்களில் தொழில் வாய்ப்பினை பெற முடியும்? அதற்கு என்னென்ன தகுதி வேண்டும்? என்ற விபரங்களையும் சொல்லித்தரலாமே!

சமூகத்திற்கு உரிய வழி முறைகள் மீது வெளிச்சமிட்டுக் காட்டி. அவர்களின் தேவைகளை அமைப்பு ரீதியில் நிறைவேற்றுவதும் முக்கியமான சமூகப்பணி என்பதை முல்லா சொல்லவும் வேண்டுமோ?

என் அன்பு மகனுக்கு.....!

நட்யாட் கிப்ரனின் அறிவுரைகள்

தமிழில் :-
ஏ.எம். முஹம்மத் மதனி
ஓகொடபொள

உன்னைச் சூழவுள்ளோர் தம் குறைகளை
உன் மீது சுமத்திய போதிலும்
நீ அதனால் மனந்தளராது
சுமுகமாக இருக்க முடியுமெனின்,
உன்னை அண்டியோர்
வெகுவாகச் சந்தேகித்த போதிலும்,
நீ அதனைச் சம நிலையுடன்
நோக்கிச் செயற்பட முடியுமெனின்
உரிய தருணம் வரை உன்னால்
பொறுமையுடன் காத்திருக்க முடியுமெனின்,
உன்னை நோக்கி அவதூறுகள் பல கூறப்படினும்
அதையும் அங்ஙனமே கூறாதிருக்க முடியுமெனின்,
பார்தான் உன்னை வெறுப்பினும்
நீ அவர்களை வெறுக்காதிருக்க முடியுமெனின்,
உனது நற்பாங்கினையும் நல்லறிவினையும் வீணாகத்
தெரிவியாது, வெளிக்காட்டாதிருக்க முடியுமெனின்,
இலட்சியக் கனவு நீ கண்ட போதிலும் கனவையே
உனது இலட்சியமாக்காது செயற்பட முடியுமெனின்,
சிந்திப்பதனை மட்டும் உனது எல்லையாக்காது
நீ சிந்திக்க முடியுமெனின்,
வெற்றியினையும் தோல்வியினையும் நீ
சமநிலைக்கண்ணுடன் நோக்க முடியுமெனின்
நீ பேசிய உண்மையினை மற்றோர்
திரித்துக் கூறி உன்னைச் சிக்க வைக்க முயன்றிடினும்,
இலட்சியக் கனவுடன்
நீ உருவாக்கிய கோட்டைகள்,
உனது கண் முன்னாலேயே
சுக்கு நூறாக்கப்பட்ட போதினிலும்,
உளறுதியுடன் அவற்றை நீ மீளக்
கட்டியெழுப்ப முடியுமெனின்,
உனது வெற்றிகளெல்லாம் மீண்டும்
பறந்தாடும் நிலைமைக்குள்ளாக்கப்பட்ட போதினிலும்.
உனது தோல்வியினையிட்டு ஒரு வார்த்தையேனும்
செப்பிடாது மீண்டும் வெற்றிக் கம்பம் ஏறிட முடியுமெனின்
உனது மனவுறுதி, வலிமைகள் என்பவற்றை
மீண்டும் ஒருங்கிணைத்துச் செயற்பட முடியுமெனின்,
நீ பொது சனங்களுடன் ஒன்று கூடிச் செயற்பட்ட போதினிலும்,
அத்துடன் பேரரசர்களுடன்
ஒருங்கி நடமாடிய போதினிலும்,
உனது நிலை மாறாது இருக்க முடியுமெனின்,
உனது எதிரியினதோ நண்பனினதோ வார்த்தைகள்
உன் இதயத்தினில் தாக்க மேற்படுத்தாதிருக்க முடியுமெனின்,
அத்துடனே அவர்களுடன் அகலாது அணுகாதிருக்க முடியுமெனின்,
மன்னிக்கவொண்ணாத ஒரு நிமிட நேரத்தினை
அறுப்பு வினாடி தூர ஓட்டத்தால் மறந்திட முடியுமெனின்,
இப்புவியும் அதனுள்ளடங்கும்
யாவையும் உனதுடமையாகி
நீ முழு மனிதனாவாய், என் அன்பு மகனே!

நிகழ்ந்தக் கவிதா ரட்யாட் கிப்ரனின் தன் மகனுக்கு கூறிய அறிவுரைகள் எதனை முக்கியத்துவம் கருதி இதயத்தினாடு வாழியபாக்கப்பட்டன. எதன் தமிழ் வடிவாக்கத்தை இங்கு தருகிறோம்.

சமன்பாடுகளும் முரண்பாடுகளும்

எங்களின்
வெள்ளை வினாக்களுக்கு
நீங்கள் தந்ததெல்லாம்
கறுத்த பதில்கள்தான்.

நாங்கள்
சமன்பாடுகளைப்பற்றி
பேசினால் - நீங்கள்
முரண்பாடுகள் பற்றிப்
பேசுவீர்கள்.

வட்டம் பற்றித்தான்
நாங்கள்
தெரிந்தும் வைத்திருக்கிறோம்
ஆனால் - உங்களுக்குத்
தெரிந்ததெல்லாம்
சதித்திட்டங்கள்
மட்டும்தான்.

எங்களை
மன்னித்து விடுங்கள்
உங்கள் தேவைகளுக்காக
நாங்கள்
பலிக்கடாவாக்கப்படுவோம்
என்பதை - நீங்கள்
நினைத்தே பார்க்க வேண்டாம்.

நாங்கள்
சந்தர்ப்பவாதிகளுக்காக
ஒரு போதும்
சிந்தித்ததுமில்லை
அவர்களுக்கு சந்தர்ப்பம்
வழங்கியதுமில்லை.

-மருதமுனை.ஹரீஷா.

இரண்டு ஹைக்கூக்கள்

மஜ்ஜிதுகளுக்கு
மல்லுகூடங்களாகிப் போன
மஸ்ஜிதுகள்!

கியாமநாள்களின் அடையாளமாய்
கோழான் நபிகள் சொன்ன
குறிகளின் கூந்தல் கட்டுகள்
[illegible]

ஏன் சமூகத்தின் விழிப்புக்குரல்

ஏன் நண்பர்களே இன்னும்
தூங்குகின்றீர் நீங்கள்
தூங்கியதால் அவர்கள்
விழித்து விட்டார்கள்.

நண்பா நீங்கள் விழிப்பதுக்கு முன்
அவர்கள் குழிதோண்டி
விட்டார்கள்.

ஏன் இன்னும் யோசிக்கின்றாய்
மீண்டும் தூங்கவா?
இருந்த நிலத்தையும் விட்டு
அகதிகளாக ஓடவா?

இனியும் ஓடினால் மீண்டும்
அமர நிலம் கிடைக்குமா என்று
இன்னும் நம் இளைஞர்கள்
யோசிக்கின்றார்கள்.

நண்பா உன்னை கோழை
என்று நினைத்து விட்டார்கள்
உன் மனக்கண் முன்னால்
கொட்டிக்கிடக்கின்றது
அதையும் மறந்து விட்டாயா?

மண்ணை விட்டு ஓடுவதா
மடிந்தாலும் இந்த மண்ணில்தான்
செத்து மடிவேன்
என்று நினைத்து நிலத்தில்
நிற்காமல் ஓடுவதா நண்பா
கோழையாக இருந்த காலம்
மலையேறிப் போச்சு

இனியும் கோழையாய்
இருக்க மாட்டேன்
நெஞ்சை நிமிர்த்தி
நிலத்தில் நின்று நில்

அடக்கு முறை வேண்டாம்
எங்களிடம் கப்பம் கேக்காதே
மீண்டும் எங்கள் குடியிருப்புகளில்
குடியிருப்பதுக்கு இடம் கொடு
இன சுத்திகரிப்பை நிறுத்திவிடு.

அவர்களை புதைத்து விடுவதுக்கு
இன்னும் ஏன் யோசிக்கின்றாய்
எழுந்து வா நண்பா.

-வாழைச்சேனை நகீர்

துடித்தெழு பெண்ணே

இஸ்லாமிய பெண்களே!
திரவுங்கள் உங்கள்
இதயத்தை!
திருப்புங்கள் நேராக
உங்கள் பார்வையை!

சினிமாவின் பக்கம்
சென்றதும்
அதைப்போல் நடந்ததும்
போதுமடி உன்
நவீன வாழ்க்கை.

இஸ்லாமிய பண்பாடு
இரகசியமாய்
இங்கு இல்லாமல்
போவதை இன்னுமா
நீ காண வில்லை!

இஸ்லாமிய வாழ்க்கை,
நாம் வாழும் போதே
நமக்குள் இறந்து கொண்டே
போகின்றது!
அக்கொடுமை
உன் நெஞ்சத்தை
குடைய வில்லையா?

எங்கே சகோதரி
உன் வீர உள்ளம்
எங்கே உன்
இஸ்லாமிய உதிரம்
ஏன் இன்னும் தாமதம்
துடித்தெழு பெண்ணே!
தீய ஷைத்தானை
தூரத்தில் தூரத்திடுவோம்!
இனி...
பிறக்கும் காலம்
இஸ்லாத்திற்கே
என்போம்!

பிர்தௌசியா இஸ்மாயில்
ஓட்டமாவடி 01.

கவிதைகள்

மறந்துவிடு கொலை வெறியை

சமாதானம் பிரசவிக்க
சங்கற்பம் பூணும் வேளை
எமனாக உலவுகின்றார்
உயிர் கவரும் பாதுகர்கள்!

ஏனிந்த இழி செயலோ
எதற்கா மோ கொலை வதைகள்
மனிதனென்ன மிருகமா மோ?
மரண முற விதியாமோ?

அப்பாவி மக்களினை
அடியோடு உயிர் பறித்தல்
தப்பென்று தெரியாதோ
தவறென்று எண்ணாதேன்!

பொது மக்கள் தொண்டனாக
பொழுதெல்லாம் உலவுபவர்
சதிகாரர் செயலதனால்
செத்தழிதல் முறையா மோ!

ஏனிந்த வீண் பாவம்
இறப்பதனால் இலாபமென்ன
மானிடனே இனியேனும்
மறந்து விடு கொலை வெறியை!!

மூதூர் 'கலை மேகம்'

சருகாகும் துளிர்கள்

எங்கோ ஒரு 'உம்மத்தின்'
அலறல், செவிகேளா
நெஞ்சங்களுக்கு
கேட்டுக் கொண்டே இருக்கிறது

ஒட்டியிருந்த பட்டையெல்லாம்
இன்று தட்டிவிடும்
சுத்தியோடு கட்சி சீத்தும்
பாடிக்கொண்டு நரகினில்
ஒரு நகர்வலம்

இதயத்து இடுகெல்லாம்
தலைமீது இடிமுழங்க
வழியறியா புது பாதைதனில்
எம் தலைவனின்
தனித்துவப் பயணம்

கிளைவிடும் மரத்திற்கு
இது இலையுதிர்
காலமோ விழுதுகளெல்லாம்
விழுந்து போக
துளிரெல்லாம் தூங்கி விடுமோ...

சாய்ந்து விடும் என்பதற்கா
ஆணிவேர் அணைப்பதற்கு
விண்ணிருந்து மண்ணிற்குள்
மரணித்தும் போனாரோ?...

இன்றும்தான் எம்
குரல்கள் ஒலித்துக்கொண்டே
இருக்கிறது விடிவு தேடும்
எங்களுக்கு!

எம்.ஆர். மாஜுல் அஸ்ரப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய குறுகிய அமைதி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துமா?

யுத்த நிறுத்தம் இரண்டாவது ஆண்டை அண்மிக்கும் அதே சமயம், பெரும்பாலான மக்கள் எதிர்காலம் குறித்துக் கடுமையான கவலை கொண்டுள்ளனர்.

புலிகளினால் கோரப்படும் இடைக்கால நிர்வாகத்தின் அமைப்பு பற்றி நிலவும் தடைகள் நீக்கப்பட்டு அரசாங்கம் புலிகள் இடையில் பேச்சுவார்த்தைகள் மீளத் தொடங்கப்பட்டாலும், புலிகள் தமது இப்போதைய கோரிக்கைகளில் மிதவாதத் தன்மையினைக் கடைப்பிடிக்காவிடின், எல்லாத் தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றைக் காண முடியுமா என்ற கேள்வி எழுகிறது. இப்போதைக்கு இது தொடர்பாக எந்த அறிகுறியும் காணப்படவில்லை.

சுமார் இரண்டு ஆண்டுகளை அணமித்த பேச்சுவார்த்தைகள், போர் நிறுத்தம் என்பனவற்றின் பின்னரும் முக்கியமான பிரச்சினைகள் கலந்துரையாடப்படாத நிலையில், புலிகளின் கோரிக்கைகள் எவ்வளவு தூரம் சாத்தியமானவை என்பது இன்னமும் தென் பகுதி மக்களால் உணரப்படவில்லை.

புலிகளின் கோரிக்கையின் உள்ளார்த்தமும், சுருக்கமும் இந்நாட்டின் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாகப் புலிகள் அங்கீகரிக்கப்பட்டு அதற்குரிய சட்டபூர்வ நிலை வழங்கப்பட வேண்டும் என்பதாகும்.

முறையான இடைக்கால நிர்வாக அமைப்பு இல்லாத நிலையிலேயே தமிழ் தாயகம் என அவர்கள் குறித்துள்ள பகுதிகளில் வடக்கிலும் கிழக்கிலும் ஏற்கனவே புலிகள் கட்டுப்பாடு செலுத்துகின்றனர். புலிகளின் மாற்று ஆலோசனைகள் விரைவில் அரசாங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளது. புலிகளின் பொலிஸ்படையினை அங்கீகரித்தல், காணிப்பகிர்வு, நிதி, நீதி பரிபாலனம் என்பன அதில் அடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

புலிகளிடம் இராணுவமும், பொலிசும் கொண்ட ஓர் சக்திமிக்க பாதுகாப்பு அமைப்பு உண்டு. அதன் பொலிஸ் தலைமையகம் அண்மையில் கிளிநொச்சியில் பிரபாகரனால் திறந்துவைக்கப்பட்டது. கிழக்குப் பிராந்தியப் பொலிஸ் அலுவலகம் நவம்பர் மாதத்தில் திறக்கப்படவுள்ளது.

பிரிக்கப்படாத நாட்டில் அதிகாரப் பகிர்வுக்கு இணங்கியுள்ள புலிகள், புரிந்துணர்வு உடன்படிக்கையினால் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சுதந்திரமாக நடமாடுவதற்காக வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தைப் பயன்படுத்தித் தமது அரசியற் பலத்தை மேம்படுத்திக் கொண்டு ஈழத்தை உருவாக்கக் கடுமையான விடாமுயற்சியில் ஈடுபடுகின்றனர் என எதிர்க்கட்சிகள் உட்பட அரசாங்கத்திற்கு எதிரான சக்திகள் குற்றஞ் சாட்டுகின்றன.

இக்குற்றச்சாட்டை உறுதிப்படுத்துவதற்கான ஆதாரங்கள் பல உண்டு. ஆயுதங்களைக் கடத்துவதும், ஒன்று சேர்ப்பதும், பொலிஸ் நிலையங்களையும், நீதிமன்ற அமைப்புகளையும் நிறுவியுள்ளமை, பணம் பறிப்பு, ஆட்கடத்தல், சிறுவர்களைச் சேர்த்தல், அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் ஈழக் கொடியினை உயர்த்துதல், தகவல் கொடுப்போரையும், சிறு தமிழ்க் கட்சிகளின் ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளையும் கொலை செய்தல் போன்றன சில.

புலிகளினால் மேற்கொள்ளப்படக்கூடிய மேலும்பல சட்டரீதியற்ற, ஆத்திரமூட்டும் செயல்கள் சமாதான முன்னெடுப்புகளை ஆதரிப்போரால்கூட சந்தேகிக்கப்படுகின்றன. இவை புதிய விடயங்கள் அல்ல. இவை போர் நிறுத்தத்தின் பின்னணியில் நடைபெறுவது புதினமானது.

ஈவிரக்கமற்ற பயமுறுத்தல் மூலம் புலிகள் வடக்கு, கிழக்கின் ஆதிக்கத்தைப் பெற முயல்வதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். நடப்பனவற்றில் இருந்து பாடம் படிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. ஜனநாயக ரீதியில் ஒற்றுமைப்பட்ட நாடொன்றை நாம் எதிர்பார்க்க முடியுமா?

எம் நாட்டில் பல அரசுகள் உருவாகப் போகின்றனவா? மீக்கள் கூட்டணி அரசினால் 2000ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட தீர்வுப்பொதி தொடர்பாக 26.02.1996 அன்று நோர்வே அரசினால் ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்கொன்றில் உரையாற்றிய வி. ருத்ரகுமாரன் (அமெரிக்காவில் உள்ள புலிகளின் சர்வதேச அமைப்புப் பிரிவின் அரசியல் ஆலோசகர்) பின்வருமாறு கூறினார்.

"இத்தீர்வுப் பொதி இலங்கையின் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வாகும் என்பது இலங்கை அரசின் ஓர் ஊடகப் பிரச்சாரமேயன்றி வேறொன்றல்ல. அது சிங்கள தமிழ் மக்களிடையே அதிகாரப் பகிர்வைக் கொண்டதல்ல. அத்துடன் அது போதுமானதுமல்ல"

"புலிகளைப் புறந்தள்ளிவிட்டு அதிகாரப் பகிர்வைத் தமிழ் மக்கள் மீது திணிப்பது தமிழர்களின் சுய நிர்ணய உரிமையினை வெளிப்படையாக மீறுதலாகும். சிங்களப் பெரும்பான்மையினால் இவை தூக்கியெறியப்படலாம்" அதே கருத்தரங்கில் அவர் பின்வருமாறு கூறினார். "இப்பிரச்சினையின் சட்டப் பின்னணியை நோக்கினால் சுயநிர்ணயம் என்பது சட்டபூர்வமானதும் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதுமான ஓர் உரிமை என்பதால் 'புலிகளின் அரசு' ஓர் சட்டபூர்வமான அரசாங்கமாக அங்கீகரிக்கப்படுவதற்கான சகல உரிமையும் கொண்டது. எனவே பிணக்கைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இரு அரசாங்கங்களுக்கிடையில் போன்று நடத்தப்படுதல் வேண்டும். இரு தரப்பினரும் இதனை உணர்ந்து செயற்பட்டால், நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த சர்வதேச நாடுகள் மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றியளிக்கும்" என்றும் கூறினார்.

இதன் பின்னணியில் பார்த்தால் இடைக்கால நிர்வாக அமைப்பு தொடர்பாகப் புலிகளின் ஆலோசனைகள் எவ்வாறு அமைந்திருக்கும் என ஊகிக்கலாம். அரசாங்கத்தின் பதில் எவ்வாறு இருக்கும் என்பதே இப்போதைய கேள்வி. அரசாங்கத்தின் கருத்துக்களுடன் இணங்காதவர்கள், இதனை முழுமையாக நிராகரிப்பவர்கள் என்போரின் அபிப்பிராயத்திற்கு என்ன நடக்கும்? ஜனநாயக அமைப்பின் கீழ் தொடர முடியுமா?

புலிகள் சிவில் நிர்வாகமொன்றை அமைத்துவிட்டு அதன் பின் சர்வதேச சமூகத்தினரிடம் சென்று அவர்களது தலையீடு காரணமாக இப்படியான அமைப்பொன்றை நிறுவமுடிந்தது என சர்வதேச சமூகத்தினரிடம் சுட்டிக்காட்டும் திட்டத்துடன் செயலாற்றுவதுபோல் புலனாகிறது. புலிகள் தாம் ஒரு பயங்கரவாதக் குழு என சர்வதேச சமூகம் முத்திரை குத்துவதைத் தடுப்பதற்காக இப்படியான ஒரு முயற்சியில் ஈடுபட்டுள்ளதுபோல் தெரிகிறது.

ஹெயின்கோ

பேச்சுவார்த்தைகளில் இருந்து பின்வாங்கிய புலிகள் வடக்கு கிழக்கில் ஏற்படுத்திய பிரச்சினைகள், தெற்கில் தகவல் தருபவர்களைக் கொலை செய்தமை என்பன அவர்களது சொல்-செயல் இடையேயான வேறுபாட்டைக்காட்டுகிறது. இத்தனைக்கும் மத்தியில் சர்வதேச ரீதியில் நல்முன்னேற்றத்தைக் காட்டுகின்றனர். இது ஒரு திட்டத்தின் பின்னணியில் நடைபெறுகிறது. இது அரசாங்கத்திற்கு பின்வரும் எச்சரிக்கையினை விடுக்கும்.

"காரணங்களுடனான, நியாயமான வாதத்துக்கு நீ இணங்கவில்லையெனின் அணியணியாக வரும் கால்களினதும், கோபமான குரல்களினதும் ஓசைகளுக் செவிமடுக்க வேண்டிய நிலை உனக்கு ஏற்படலாம்"

அரசியல்வாதிகளுக்கு முதுகு சொறியும் பண்பு ஒழியாதவரை நமது சமூகம் விடுதலையைப் பெறப்போவதில்லை

அல்- இஸ்லாமிய்யா செயல் அதிபர் மௌலவி றபீயுடீன் (ஜமாலி)

"இன்று முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் நற்போதனைகள் புரிவதற்கு கண்ணியமிக்க உலமாக்களின் பணி அவசியமாக இருப்பதுடன் காலத்தின் தேவையாகவும் உள்ளது. ஆனால் வேலியே பயிரை மேய்ம்போது அறுவடையே இல்லாதுபோய் விடும். அதேபோல சமூக மறுமலர்ச்சிக்கான காத்திரமான கருத்துக்களை சுயநலங்களுக்காக மறைத்துக் கொண்டு அரசியல்வாதிகளுக்கு சோரம்போகும் உலமாக்களைக் காண்கின்றபோது வெட்கமும் வேதனையாகவுமுள்ளது. என்று அல்-இஸ்லாமியா செயல் அதிபர் மௌலவி ஏ. றபியுடீன் (ஜமாலி) தெரிவித்தார்."

அண்மையில் அக்கரைப்பற்றில் நடைபெற்ற அகில இலங்கை இஸ்லாமிய அழைப்புப் பேரவையின் விஷேட செயலமர்வின்போது "இனப்பிரச்சினைத் தீர்வில் தவிர்க்கப்பட வேண்டியவை" என்ற தலைப்பில் பேரவையின் செயல் அதிபர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மௌலவி றபியுடீன் (ஜமாலி) தொடர்ந்து உரையாற்றுகையில்: "அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் உலமாக்களுக்கான மகாநாடு ஒன்று கூட்டப்பட்டது. அதில் "இனப்பிரச்சினையும் முஸ்லிம்களின் எதிர்காலமும்" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கினை பிரதானமான அங்கமாக ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட்டு இருந்தார்கள். அங்கு கலந்து கொண்டவர்களோ, அல்லது ஏற்பாட்டாளர்களோ குறித்த தலைப்பில் பேசவில்லை என்பதோடு அழைக்கப்பட்ட உலமாக்களுக்கும் அதுபற்றிப்பேச சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. இதற்குப் பெயர்தான் கருத்தரங்கு என்றால் இதைவிடச் சிறந்த ஏமாற்றம் வேறு ஒன்றுமில்லை. இப்படியான கதவடைப்புக்கள் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சிறந்த கருத்துக்களுக்கு விடப்படும் சவாலும், சாபக்கேடுமாகும்.

கருத்துக்கள் எங்கிருந்தாலும் வெளிக்கொணரப்பட வேண்டும். அதற்கான சந்தர்ப்பத்தையும் கால அவகாசத்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டும். அதுதான் தர்மமாகும். அதற்குத் தடையாக யாரும் இருக்கக்கூடாது. தங்களின் கருத்துக்களை வாரி இறைப்பதற்கு மட்டும் மக்களைப் பயன்படுத்தக்கூடாது. இது பிறரை மடையர்களாக்கும் முயற்சியாகும்.

அரசியல்வாதிகளுக்கு முதுகு சொறியும் தீய பண்பு ஒழிக்கப்படாதவரை சாந்தி, சமாதனம் மலரப் போவதில்லை. பகட்டும், பாசாங்கும் இருக்கும்வரை உண்மைகள் வெளிவரப்போவதில்லை.

இன்று பதவிக்கு வந்துள்ள ஐ.தே முன்னணி அரசு நாட்டில் சமாதானத்தையும், சுபீட்சத்தையும் காணத் துடிக்கின்றது. அதற்காக எந்தவிலையையும் கொடுக்கத் தயாராக உள்ளது. இந்த நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். யாரும் யாரையும் பாதிக்காத வகையில் சாத்தியமான, காத்திரமான கருத்துக்களை முன்வைக்கப் பின் நிற்கக்கூடாது. அன்றி இதற்கு விரோதமாக சுய இலாபங்களுக்காக துணைபோகவும் கூடாது.

வடக்கு கிழக்கு இணைப்பை வடக்கின் பெரும்பான்மைத் தமிழர்களும், பிரிப்பைக் கிழக்கின் பெரும்பான்மை முஸ்லிம்களும், சிங்களவர்களும் கேட்கின்றபோது கிழக்கு வாழ் மக்களிடம் ஒரு சர்வஜன வாக்கெடுப்பைத்தவிர வேறு எதுவும் தீர்வாகி விடாது. இதைத்தவிர்த்து வேறு வழிகளில் தீர்வுகாண முயல்வது முழங்காலுக்கும், மொட்டைத்தலைக்கும் முடிச்சுப் போடுவதாகவே முடியும்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நீங்களும் எழுதலாம்

ஆங்கிலப் பாடம் கட்டாயமாக்கப்படக் கூடாது!

கடந்த 19.09.2003 வெள்ளியன்று வெளியான "முஸ்லிம் குரலில்" மக்களிடமிருந்து மனுக்கள் என்ற தலைப்பின் கீழ் க.பொ.த. (உ-த) பரீட்சைக்கு ஆங்கிலப்பாடம் கட்டாயப்பாடமாக்கப்பட வேண்டும் என்று காத்தான் குடியைச் சேர்ந்த சகோதரர் ஒருவர் எழுதியிருந்தார். அவரது கருத்தை மறுதலித்து நான் இம்மடலை வரைகின்றேன்.

அவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராக இருந்து கொண்டு இவ்வாறான கருத்தை வெளியிட்டதையிட்டு நான் மனவருத்தம் அடைகின்றேன். ஏனென்றால் அவரது சமூகப் பற்றின்மைக்காக; சுயநலத்திற்காக.

அவரது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மாத்திரமல்ல மலைநாடு போன்ற பிரதேசங்களிலும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. மேலும் க.பொ.த உயர்தர வகுப்புகளுக்கு கற்பிக்கக் கூடிய ஆங்கில ஆசிரியர்கள் பெரும்பான்மையான பாடசாலைகளில் இல்லை என்றே கூற வேண்டும். இவ்வாறான நிலமையில் ஆங்கிலப் பாடத்தை கட்டாயப்பாடமாக ஆக்கினால் பின் தங்கிய பிரதேசங்களில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை குறையும்; நகரப் பிரதேசங்களில் தெரிவு செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்பது மாத்திரமல்லாமல் மற்றப் பாடங்களில் திறமையான மாணவர்கள் ஆங்கிலப் பாடத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியாமல் பல்கலைக்கழக அனுமதியை இழக்க நேரிடும் என்பதை சகோதரர் பைறூஸ் அவர்கள் அறியவில்லை போலும். எனவே இந்த ஆங்கிலப் பாடத்தை கட்டாயப் பாடமாக்கும் முயற்சியைக் கைவிட்டு, தீவெங்கும் பரவலாக தகுதி வாய்ந்த ஆங்கில ஆசிரியர் நியமனங்களை வழங்கி அதன் பின் ஆங்கில மொழி வளர்ச்சியை அவதானித்து கட்டாயமாக்கல் பற்றி சிந்திக்கலாம்.

சானா அம்ஜத்கான், அட்டாளைச்சேனை 03

ஊடகங்களில் முஸ்லிம்களுக்கெதிரான பொய்ப் பிரச்சாரம்

தற்போது வெளிவருகின்ற அநேகமான தினசரிகள் குறிப்பாக தமிழ்ப் பத்திரிகைகள் உண்மைக்குப் புறம்பான செய்திகளை வெளியிட்டு ஊடகத்துறையின் பெறுமதிக்கு அவப் பெயரை உண்டு பண்ணுகின்றன. இத்தகைய செயல்களை அவை வழக்கமாக்கிக் கொண்டுள்ளன. தாமாகவே பொய்களை எழுதுவது அல்லது புனைப்பெயரில் எழுதுவது. இனத்துவேசமான கட்டுரைகளைப் பிரசுரிப்பது என அவற்றின் நடவடிக்கைகள் தொடர்கின்றன.

அந்த வகையில் 07.09.2003 அன்று வீரகேசரி வாரவெளியீட்டில் சம்மாந்துறையில் இரு முஸ்லிம்கள் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டதையும், சாய்ந்தமருதைச் சேர்ந்த இரு முஸ்லிம் வாலிபர்கள் தமிழ் பிரதேசத்தில் காணாமல் போனதையும் கடத்தல் நாடகமென எழுதியுள்ளனர். உண்மையில் இது உண்மைக்குப் புறம்பான செய்தி.

அவை கடத்தல் நாடகமாக இருப்பின் மேற்குறிப்பிட்ட ஊடகத்தால் அதனை நிரூபிக்க முடியுமா? அவ்வாறு நிரூபித்தால் அது இரண்டு சமூகங்களுக்கும் செய்கின்ற பேருதவியாக இருக்கும். நிரூபிக்க முடியுமா?

முஹம்மட் இம்தி, சாய்ந்தமருது

புத்தளம் முன்மாதிரி, பள்ளிவாசல்களின் கடமை

புத்தளம் பல சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களையும் வரலாறுகளையும் தனதாக்கிக் கொண்ட ஒரு இடம் என்பதை சொல்லித்தான் தெரிய வேண்டுமென் பதில்லை. அவைகளுள் பெரும்பாலானவை புத்தளத்திற்கு புகழ் பரப்புபவையாகவே காணப்படுகிறது. அதேபோல் சமீப காலத்தில் புத்தளம் பத்திரிகைகளிலும், வதந்திகளிலும், மற்றைய ஊடகங்களிலும் அதிகமாக அடிபட்டதையும் மறுக்க முடியாது. களவு, போதைப்பொருள் பாவனை மட்டுமல்லாது விநியோக தளமாகவும் பிரபல்யம் பெற்றது. இது உரிய விதத்தில் கவனிக்கப்பட்டு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படாமையினால் கொலை வீழுளவுக்கு பாதாள உலகத்தினரின் கை ஓங்கியது. அதில் ஒரு சிலர் அழிந்தார்கள். சிலர் பொருட்களை, சொத்துக்களை இழந்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் சில நல்லவர்களுக்கும் நட்டம் ஏற்பட்டது. பொலிசாரும் செய்வதறியாது திகைத்து நின்ற வேளையில், அடுத்து என்ன நடக்குமோ. என்ற பதற்ற உணர்வு மக்களை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தபோது புத்தளம் முஹையத்தீன் பெரிய பள்ளி நிர்வாகத்தை தற்காலிகமாகப் பொறுப்பேற்று நடத்திக் கொண்டிருக்கும் சகோதரர்கள் சிலரும், நடக்கும் அக்கிரமங்களை இடுப் மௌனமாக அழுது கொண்டிருந்த சமூக நலன் விரும்பிகளுள் ஒரு சிலரும் ஒன்று சேர்ந்து புத்தளம் பெரிய பள்ளியை மையமாக வைத்து புத்தளத்திலுள்ள சுமார் 36 பள்ளிகளையும் உள்ளடக்கியதாக "மஜ்லிஸ் அஷ்ஷூரா" என்ற சமூக நலன்புரி அமைப்பொன்றினை ஏற்படுத்தியதோடு மட்டுமல்லாது கண்டி பெரிய பள்ளி பேஷ் இமாம் அவர்களது உதவியோடு வடமேல் மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு.

புத்தளம் தக்வா முஸ்லிம் மக்களின் பேராதரவோடு மாக நடவடிக்கைகளை மேற்கொண்ட வடமேல் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் அசோக ரத்னவீரவுக்கு அண்மையில் குருணாகலையில் உள்ள அவரது வதிவிடத்தில் வைத்து பாராட்டு தெரிவிக்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம் அமர்வில் சபாநாயகர் ஏ.ஹெ.மு. ஜமீல் மாகாண சபை உறுப்பினர் ஏ.ஆர்.ஏ. ரியாப் மௌலவி ஏ.ஆர்.ஏ. ஹலீம் ஆகியோர் பிரதிநிதி வழங்கலைத் பக்கத்தில் காணலாம் (படம் : குருணாகலை நிருபர்)

அசோகரத்னவீரவுடன் தொடர்பு கொண்டனர். அவர் எதிர்பாராத அளவு நேசக்கரம் நீட்டியதோடு மட்டுமல்லாது அவசரமாக பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு "மஜ்லிஸ் அஷ்ஷூரா"வை பொலிசார் மதிக்கின்ற ஒரு நிலைமையை உருவாக்கினார். பெரிய பள்ளி குழு இரண்டு முறைகள் அவரை நேரடியாக சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியது. பிரதி பொலிஸ் மாஅதிபரும் இரண்டு முறை புத்தளம் விஜயம் செய்து நம்பிக்கையூட்டினார்.

வழமையாக குருநாகலில் வைக்கப்படும் மாதாந்த பொலிஸ் உயரதிகாரிகளின் (வடமேல் மாகாண) மாநாட்டை புத்தளத்தில் வைத்தார். இதன் மூலம் பொது மக்களது கவனம் "மஜ்லிஸ் அஷ்ஷூரா"வின் பக்கம் திரும்பத் தொடங்கியுள்ளது. பொலிஸ், கோடு என்று சீரழிந்தவர்கள் பள்ளிகளின் துணையை நாடத் துவங்கியுள்ளனர். பள்ளியில் பிரதி செவ்வாய்கள் தோறும் பிரச்சினைக்கு தீர்வுகாணும் சபை ஒன்றும் கூடுகிறது. தீர்வு கிடைக்கிறதோ இல்லையோ பிரச்சினைகள் இனம் காட்டப்படுகின்றன. பிரச்சினைகள் பள்ளிக்கும்போய் விடுமோ என்ற பயத்தில் சிலர் விட்டுக் கொடுத்து நடக்குமளவுக்கு நிலைமை சுமுகமாக மாறி வருகிறது. அவைகளெல்லாம் -உதயம்

முஸ்லிம் குரலின் வளர்ச்சிக்கு பக்க பலமாக திருங்கள்

நமக்கான பத்திரிகைகளின் அவசியம் குறித்து நீங்கள் அறிவீர்கள். மக்களாகிய உங்களின் ஆதரவுடனேயே நமது பத்திரிகையை தொடர்ச்சியாக வெளிக்கொணர முடியும்! சந்தாதாரர்களாக சேருங்கள்! சகோதர சகோதரிகளுக்கும் அறிமுகப்படுத்துங்கள்! பத்திரிகையை வாங்கி, விநியோகியுங்கள்!

சந்தா விபரம்!

3 மாதங்கள் - (12 இதழ்கள்) 250/-
6 மாதங்கள் - (24 இதழ்கள்) - 500/-
1 வருடம் - (48 இதழ்கள்) - 1000/-

(குறைந்தபட்ச அனுப்பி வைக்கப்படும்)

காசோலையாகவோ, காசுக் கட்டளையாகவோ எமக்கு அனுப்பி வைக்கலாம். பத்திரிகையை விநியோகிக்கும் எமது ஊர் பிரதிநிதிகளிடமும் நேரடியாக கையளிக்கலாம். காசுக்கட்டளையாக அனுப்புவதாக இருந்தால் Muslim Rural Publiction Slave Main Post office என்று குறிப்பிடவும்.

இன வன்செயலால் மரணித்தோர் விபரம்

1985.04.14 - அக்கரைப்பற்று (புட்டம்பைக் கிராமம்)

01. உதுமா லெவ்வை ஆதம்பாவா வயது 50 (குடும்ப தலைவன்)

02. முகிதீன் பாவா செய்னம்பு வயது 43 (குடும்ப தலைவி)

03. ஆறு பிள்ளைகள்.

04. தஸ்தகீர் சம்சுதீன் வயது 17 குடும்ப உறவினர்.

இவர்கள் அனைவரும் புட்டம்பை விவசாயக் கிராமத்தில் வசித்து வந்தபோது 1985.04.14ஆம் திகதி காணாமல் போயிருந்தனர். தஸ்தகீர் சம்சுதீன் என்பவர் தந்தையை இழந்து கால்நடை மேய்ப்பவராக கூலி வேலைக்காக உறவுக்காரர்களோடு தங்கியிருந்தார்.

புட்டம்பை கிராமத்தில் வசித்துவந்த நூற்றுக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் வன்செயல் வெடித்தபோது தப்பிவந்தபோதும் இக்குடும்பம் மாத்திரம் ஏதோ ஒரு நம்பிக்கையின் பேரில் தங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1985. 04. 14 - பொத்துவில் - தகரம்பளை (வயல் பிரதேசம்)

இஸ்மா லெவ்வை அசுமது லெவ்வை வயது 40, (04 பிள்ளைகள்) மேய்ச்சலுக்காக கால்நடைகளை வைத்திருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இவருடன் அட்டாளைச்சேனையைச் சேர்ந்த 04 பேரும் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இப்பயங்கரவாதக் குழுவினர் இவர்களோடு தங்கியிருந்த இன்னுமொருவரின் குடும்பத்தினரிடம் வந்து மரவள்ளிக் கிழங்கு பிடுங்கி அவித்துத் தின்றுவிட்டு "இருங்கள் பின்னர் வருகிறோம்" எனக்கூறிவிட்டுச் சென்றிருந்தனர். இத்தாக்குதல் குழுவின் செயற்பாடுகளில் சந்தேகம் கொண்ட குடும்பம் இரவோடிரவாக தப்பித்து வந்தனர்.

அக்கரைப்பற்று பனையறுப்பான் எனும் வயல் பிரதேசத்தில் வைத்து சகீத் அலிகான் மற்றும் பர்சத் (ஆசிரியர்) ஆகிய இருவரும் மோட்டார் சைக்கிளுடன் சேர்த்து கடத்தப்பட்டுக் கொல்லப்பட்டார்கள்.

எம்.ஏ. மகுறுன் நிசா, அக்கரைப்பற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு புலிகள் இடையில் முஸ்லிம்களின் எதிர்காலம்!

நேரடி ஆயுதப்போர் தணிந்து. ஆயுத மிரட்டல்களுடனான போலி ஜனநாயகப் போராட்டம் ஒன்று நமது நாட்டில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது. இதற்குப் பெயர் சமாதான முயற்சிகள். சமாதான முயற்சிகள் நேர்தியானதாகவும், அனைத்து சமூகங்களுக்குமான நீதியைப் பெற்றுத் தருவதாகவும்அமைந்திருக்க வேண்டும். ஆனால் இங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது வடக்குக் கிழக்கு வாழ் முஸ்லிம்களை அடிமைப்படுத்துவதற்கான கண்ணாமூச்சு விளையாட்டுத்தான். இந்த விளையாட்டுக்கு நமது அரசியல் தலைமைகளும்கூட துணை போவதுதான் விசனிக்கத்தக்கது.

இந்தநாட்டில் வாழும் பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் உள்ள உரிமைகள் அனைத்தையும் பாதுகாக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்குள்ளது. சிங்களவர், தமிழர், முஸ்லிம், மலையகத் தமிழர் என்ற வேறுபாடுகள்அந்தக் கடமையை நீக்கிவிடாது. சுதந்திரத்திற்கு முற்பட்ட காலத்திலிருந்தே மாறி மாறி வந்த அரசாங்கங்களால் ஒவ்வொரு இனத்தின் மீதும் மேலாதிக்கம் பிரயோகிக்கப்பட்டே வந்திருக்கிறது. சில கட்டங்களில் அரச பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தது. அரசாங்கமொன்று தனது மக்களின் மீது வானிலிருந்து குண்டுமழை பொழிந்த சோக வரலாறு நமது நாட்டிலுண்டு. இவற்றால் விடுதலை உணர்ச்சிபெற்று சிங்களத்தேசத்தினின்றும் பிரிவினை கோரும் சகல உரித்தும் தமிழருக்குண்டு என்பதில் எமக்குக் கருத்து முரண்பாடுகள் கிடையாது.

ஆனால் வன்முறையை தமது உரிமைப்போராட்டத்தை அடையாளப்படுத்திக்கொள்ள நாடியவர்கள்; அதே வழிமுறையை தம்து மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கும் பயன்படுத்த முடியாது. நமது மக்களின் மீதான தமிழர் மேலாதிக்கத்தை தக்கவைத்துக்கொள்வதை நமது மக்களால் ஒரு போதும் ஜீரணித்துக்கொள்ள முடியாது.

அன்றைக்கு அரசாங்கம் தமிழரின் அரசியல் அபிலாஷைகளை நேரடியான ஆயுதக் கையாளல் மூலம் அடக்கமுற்பட்டது. இதனை நேரடிச் செயல் (Commission) வடிவிலான அரச பயங்கரவாதம் எனலாம். இன்றைக்கு முஸ்லிம்கள் மீதான அரச பயங்கரவாதம் எதிர்வினைச் சொல் அல்லது செய்யாமை (Commission) வடிவில் அமைந்துள்ளது. வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம்களின் உயிருக்கும் உடமைக்கும், அமைதிக்கும் பாதுகாப்புத் தர வேண்டியது அரசாங்கத்தினதும் அதன் துருப்புக்களினதும் கடமையாகும். இதனை நிறைவேற்றாது முஸ்லிம்களைப் பலிகொள்ளும் புலிகளிடம் பேசித் தீர்த்துக் கொள்ளுமாறு கூறி விலகுவது மிகப்பெரிய பயங்கரவாதமாகும்.

அரசாங்கம் முஸ்லிம்களைப் பாதுகாக்கவில்லை என்பதற்காக முஸ்லிம்கள் ஆயுதப் போராட்டங்களில் இறங்கவில்லை. இறங்குவதற்கான தேவையுமில்லை. ஜனநாயக வழியிலான அனைத்துச் சாத்தியமான வழிமுறைகளையும் பரீட்சித்துப் பார்க்க இன்னும் அவகாசம் இருக்கிறது. இராஜ தந்திர முயற்சிகளுக்கு இன்னும் இடமுண்டு என்றே முஸ்லிம்கள் கருதுகின்றனர். ஆனால் தமிழ் பேரினவாதமும், சிங்களப் பேரினவாதமும் இவற்றுள் ஊதுகுழலாய்த் தொழிற்படும் ஒரு சில ஊடகங்களும் முஸ்லிம்களுக்குள் ஆயுதப் போராட்ட உந்துதல்களைத் திணித்து வருகின்றன. ஆடு நனைகிறது என்று ஓநாய் கண்ணீர் விடுவதுபோல.

அரசாங்கங்கள் நமது மக்களுக்கு இளைத்துள்ள துரோகங்களைப் பட்டியலிட இப்பத்தி போதாது. ஆனால், ஒரு சிலவற்றை இங்கு சுட்டுவது பொருத்தம். 1987 இந்திய இலங்கை உடன்படிக்கையில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்பட்டது. அதுவரையும் அதன் பின்னரும் இடம்பெற்ற பேச்சுக்களில் நம்மைப்பற்றிய கரிசனையே காட்டாமல் விட்டாலும், கள்ளத்தனமாக வடக்கையும், கிழக்கையும் இணைத்து கிழக்கில் பெரும்பான்மையாக வாழ்ந்த முஸ்லிம்களை தமிழ்ப் பேரினவாதத்திற்கு அடிமைப்படுத்தியமை. 1990 இல் முஸ்லிம் பிரதேச பொலிஸ் நிலையங்கள் அத்தனையையும் புலிகளிடம் சரணடையக் கட்டளையிட்டனர். புலிகள் புரிந்துணர்வு உடன்படிக்கையில் முஸ்லிம்கள் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டமை. பேச்சுவார்த்தை மேசைக்கு தனித்தரப்பாக அனுமதிப்பது என்று கூறிக்கூறியே ஏமாற்றிக் கொண்டிருப்பது போன்றவை ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை வைத்துள்ள முஸ்லிம்களின் மீதான மிகமோசமான பயங்கரவாதச் செயல்களாகும்.

இவற்றுக்கு மேலதிகமாக யுத்தத் தவிர்ப்பு உடன்படிக்கையின் பின்னரான காலப்பகுதியில் மூதூர், வாழைச்சேனை, சம்மாந்துறை என கிழக்கில் தொடரும் முஸ்லிம்கள் மீதான ஆயுத அடக்கு முறைகளின்போது அரசாங்கம் செயலிழந்து நிற்பதுவும் புலிகளின் தலைவர்களிடம் முஸ்லிம்களின் பாதுகாப்பை அடகுவைத்து, உறுதிப்படுத்தக் கோருவதும் ஒரு வகையான பயங்கரவாதமே.

இவற்றைச் சகித்துக்கொண்டு வாழும் முஸ்லிம்கள், தமது பிரதிநிதிகள் உரிமைகளைப் பெற்றுத்தருவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் ஈடுபடாது தமது பதவிச் சண்டையால் பிரிவடைந்து செல்வதைக் கண்டு ஆத்திரமடைந்துள்ளனர். முஸ்லிம்களின் வாக்கெடுப்பைப் பெற்று, அம்மக்களின் உரிமைகளுக்காக போராட்டம் செய்வதாக வாக்களித்த பிரதிநிதிகள் மக்களின் பாதுகாப்பும் வாழ்வும் கேள்விக்குட்படும்போதும் கூட மக்களைப் பாதுகாக்க முடியாத [illegible]த்திற்கு இன்னும் முட்டுக் கொடுத்துக் கொண்டிருப்பது நமது மக்களை மேலும் ஆத்திரமூட்டுகிறது. முஸ்லிம்களின் இரத்தம் ஓட்டப்படுகையில் எதிரணிக்குச் சென்றுவிடுவோம் எனக்காச்சிக்கும் சில பிரதிநிதிகள் பின்னர் பெட்டிப்பாம்பாய் அடங்கிப்போவதன் மர்மம்தான் என்ன என முஸ்லிம் பொதுஜனம் கேள்வி எழுப்புகிறது.

இதனிடையே நமது மக்களை கடந்த இரண்டு தசாப்தகாலமாக ஏமாற்றி, கொன்றொழித்து, தமது மேலாதிக்கத்தை நிலை நிறுத்தி தனித் தமிழின தமிழகத்தை அடைந்து கொள்வதற்கான இனச்சுத்திகரிப்பில் ஈடுபட்ட புலிகளிடம் நமது மக்களின் எதிர்காலத்தை அடகு வைக்கும் இடைக்கால நிர்வாகம் வழங்கப்படுவதை முஸ்லிம்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. இத்தகைய முன்னெடுப்புக்கள் முஸ்லிம்களிடம் தமது எதிர்காலம் தொடர்பிலான அச்சத்தைத் தோற்றுவித்திருக்கிறது.

புலிகளின் வேண்டுகோளுக்கிணங்க (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஊடாக) வடக்கு கிழக்கு உள்ளூராட்சித் தேர்தல்களை ஒத்திப்போட்ட அரசாங்கம், பின்னர் சிங்களப்பகுதிகளில் நடத்துவதற்கு புலிகளின் அனுமதி பெற்று நடத்தியதும், முஸ்லிம் காங்கிரஸின் வழுவழுப்பான கோரிக்கைகளை நிராகரித்து முஸ்லிம் பிரதேசங்களை விட்டுவிட்டமையும் அரசாங்கத்தால் முஸ்லிம்கள் தொடர்பிலான மாற்றாந்தாய் மனப்பான்மையையும், புலிகளின் அடக்கு முறைக்கான வழிதிறப்பையும் சுட்டி நிற்கிறது.

இந்தப் பின்புலத்துடன்; உருவாக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாகத்தில் காணி, பொலிஸ், நிதி போன்ற விடயங்களை புலிகள் கோரியுள்ளனர். இவர்களிடம் ஒரு பலம் பொருந்திய இராணுவ அமைப்பு முஸ்லிம்களைக் கொன்றொழிப்பதிலும், பொருளாதார மையங்களை இலக்குவைத்துத் தாக்கி அழிப்பதிலும் தேர்ச்சி பெற்ற நிலையிலுள்ளது. இவற்றைக் கண்டும் காணாததுபோல் இருக்கத்தக்க ஒரு கண்துடைப்பு நீதித்துறையும், பொலிஸும் கூட இருக்கிறது. இவைகள் ஒரு போதும் முஸ்லிம்களுக்கு நீதியைப் பெற்றுத் தராது.

ஆக இணைத்த வடக்கு கிழக்கில் தமிழ்ப் பேரினவாதத்தின் காவலாளிகளாய்த் தம்மைப் பிரகடனப்படுத்தியுள்ளவர்களிடம், கள்ளத்தனமாக சிறுபான்மையாக்கப்பட்ட அரசியல்பலம் சிதைக்கப்பட்ட, அரச பயங்கரவாதத்தால் பலமுறை ஊமையாக்கப்பட்ட முஸ்லிம் சமூகம் ஒப்படைக்கப்படுமாக இருந்தால் அது முஸ்லிம் இளைஞர்களை, அவர்களின் சிந்தனைகளை மிகவேகமாக உசுப்பிவிடும். இது நியாயமானதும் தவிர்க்கப்பட முடியாததுமாகும். எனவே இந்நிலையில் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு அவற்றுக்கான அரசியல் அந்தஸ்தையும் அங்கீகாரத்தையும் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும்.

இடைக்கால நிர்வாகமாயினும், நிரந்தரத் தீர்வாயினும் எதிலுமே முஸ்லிம்களின் உரிமைகள் தமிழ்ப் பேரினவாதத்தின் மேலாதிக்கத்திடம் அடகுவைக்கப்பட முடியாது. ஆட்சித்துறை, நிர்வாகத்துறை, பாதுகாப்பு, நீதி, நிதி, காணி, அனைத்திலும் தமிழ்ப் பேரினவாதத்திற்கான அலகுகளை அரசாங்கம் அங்கீகரிக்குமாக இருந்தால், முஸ்லிம்களுக்கும் இவற்றிற்குச் சமனான அதிகாரங்களையும் அந்தஸ்தையும் கொண்ட சமாந்தரமான அலகுகள் ஒவ்வொரு துறையிலும் தனியாக உருவாக்கப்பட வேண்டும்.

முஸ்லிம்கள் தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முயலும் இக்கட்டத்தில் தமது இனத்தின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ளப் போராடும் புலிகள் அமைதியாய் வழிவிட வேண்டும். மாறாக குறுக்கே நின்று அடக்கியாள நினைத்தால் அரசாங்கத்திடமிருந்து அவர்கள் அதிகாரங்களைப் பெறுவதற்குக் கையாண்ட அதே வழிமுறைகளை அவர்களிடம் கையாள வேண்டிய நிர்பந்தம் முஸ்லிம்களுக்கு உருவாகும்.

இந்த உணர்ச்சிகரமான கட்டத்தில் நமது அரசியல் தலைமைகள் நம்மைச் சரியான திசையில் வழி நடத்தத் தவறிக் கெண்டிருக்கின்றன. ஒன்றில் இவர்கள் சரியான வழிமுறைக்கு உடனடியாகத் திரும்பி, உரிய தீர்வுகளைப் பெற்றுத்தர வேண்டும். இல்லையேல் வெகுஜனப் போராட்டங்களை முன்னிறுத்தி வளர்த்துவரும் சமூக அக்கறையுள்ள புதிய இளம் தலைமைகளுக்கு இடம்விட்டு ஒதுங்க வேண்டும். நமது சிவில் சமூகம் தமது உரிமைப் போராட்டத்தை ஒரு சிலரிடம் ஒப்படைத்துவிட்டு தொடர்ந்தும் வாழாதிருக்க முடியாது. தமது உரிமைகளுக்கான வெகுஜனப் போராட்டங்களை முஸ்லிம் பொதுஜனம் முன்னெடுத்தே ஆக வேண்டும். இந்தக்கட்டத்தில் நமது முயற்சிகள் இத்திசையில் அமையாவிட்டால், அரச பயங்கரவாதமும், புலிப் பயங்கரவாதமும் நமது இளைஞர்களை ஆயுதத்தினுள் புதைத்து நமது சமுதாயத்தின் எதிர்காலத்தை கோரம் நிறைந்ததாய் ஆக்கிவிடும்.

மூதூர் முஸ்லிம்கள் மீது ஏவப்பட்ட மனித வெடி குண்டின் முன்றாண்டு நினைவும், நினைவும்.

– மஹல்லாவாசி –

ஈழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் அப்பாவிப் பொதுமக்கள்(முஸ்லிம்கள்) மீது ஏவப்பட்ட முதல் மனித வெடிகுண்டின் கோரம் மூன்றாவது தடவையாக மூதூர் மக்களால் கசிந்த கண்களோடும், கவலையோடும் நினைவு கூரப்படுகிறது.

2000-10-02 அன்று மாலை 6.15க்கு ம.ஃ. ரிப் தொழுகைக்காக அல்லாஹு அக்பர்- அல்லாஹ் பெரியவன் என்ற அதான் ஒலிக்கிறது. மூதூர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தை முடித்துக் கொண்ட மு.கா. வேட்பாளரும், குழுவினரும் தொழுகைக்காக பள்ளிக்குச் செல்ல தயாராக இருந்த முச்சக்கர வண்டிகளில் ஏறுகின்றனர் அதுவரை மறைவிடம் ஒன்றில் காத்திருந்த புலிகளின் தற்கொலைக் குண்டுதாரி முச்சக்கர வண்டியை நோக்கிப் பாய்ந்து குண்டை வெடிக்கச் செய்கிறான். அந்த மனித வெடி குண்டு பாரிய சப்தத்துடன் வெடிக்கிறது. அதானை அடுத்து தொழுகைக்குச் செல்ல தயாரான அனேகரின் உயிர்கள் அவ்விடத்திலேயே பிரிகிறது.

2000ம் ஆண்டு பொதுத்தேர்தல் வேட்பாளர் வைத்துல்லாவை குறிவைத்த இத்தாக்குதல் 24 உயிர்களைப் பலிகொண்டு, 48 பேர்களை அங்கவீனப்படுத்தியது. ஒரு தனிநபரைக் கொல்ல -முஸ்லிம் என்ற ஒரே காரணத்திற்காக 71 அப்பாவிகள் மீது பாஷிசப்புலிகள் நடத்திய நரவேட்டையை வரலாறு ஒருபோதும் மறந்துவிடாது. இதன்போது இரு கண்களையும் இழந்த இரு முஸ்லிம்கள் இன்னும் உயிர் வாழ்கின்றனர். ஒருவர் முஹம்மது தாஹிர் (40வயது) மற்றவர் முகைதீன் சஹாப்தீன் (40வயது)

இது மூதூரின் பிராதான வீதியில் நடந்தது. இந்தக் குண்டுச் சப்தம் மக்களின் காதில் பேரிடியாக இருந்தது. என்ன நடக்கிறது? எங்கே நடக்கிறது? ஒரே பதற்றம். பெண்கள், குழந்தைகள் எல்லோரும் வீதியில் தத்தளிக்கும் காட்சி வெளியில் சென்று பார்க்க பயம். எங்கும் முன்னிருட்டு பரவத்தொடங்கிவிட்டது. கூடவே கலாசார மண்டபத்திலேயே குண்டு வெடித்துள்ளதென்ற செய்தியும் பரவத்தொடங்கியது.

இச்செய்தி கேட்ட மக்கள் அலைபோல் பொங்கி முண்டியடித்துக்கொண்டு, குண்டு வெடித்த இடத்தை நோக்கி ஓடினார்கள் அங்கு அவர்கள் கண்ட காட்சி எந்தக் கல் மனதையும் கரையச்செய்து விடும். பலர் இரத்த வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்தார்கள். பலர் அவ்விடத்திலேயே இறந்து கிடந்தார்கள். ஏன் இக்குண்டுத்தாக்குதலை நடாத்தினார்கள்? இது விடுதலையா? அல்லது இனப்படுகொலையா? இதற்குப் புலிகள் கூறும் பதில்கள் என்ன? பால்நிலா முகம் கொண்ட பதினேழு வயது மாணவன் யூசுப் புலிகளின் விடுதலைக்கு இழைத்த துரோகம் என்ன. இவர்களை அழிப்பதில் புலிகளுக்கு என்ன இலாபம். இதற்கு அவர்கள் கூறும் நொண்டிச் சாட்டு என்ன? இது மறக்கக்கூடிய விடயமா? இல்லை இதனை மன்னிக்கத்தான் முடியுமா?

அன்றிரவு அழாதவர்கள் யாருமில்லை என்று சொல்ல வேண்டும். தாய்மார், மனைவியர், சகோதரிகள் எல்லோரும் அழுத வண்ணம் வைத்தியசாலையை நோக்கி படையெடுத்தார்கள். பார்க்கும் இடமெங்கும் கண்ணீரும், கம்பலையும். மூதூர் வைத்தியசாலையில் ஒரே ஒப்பாரிச் சப்தம். கணவனை இழந்த மனைவி, தந்தையை இழந்த தனயன், மகனை இழந்த தாய், கணவனையும், பெறாமகனையும் இழந்த தாய், இப்படியாக கண்ணீருடன் கழிந்தது அந்த இருண்ட இரவு.

முஸ்லிம் காங்கிரஸிக்கும் அதன் வேட்பாளருக்குமாக பிரச்சாரத்தளத்தில் உயிர் நீத்த தியாகிகள் - உறவினர்களுக்காக ஊனமுற்றோருக்காக மு.கா.வோ, அதன் தலைமையோ இதுவரை நிலையான அமைப்பொன்றையோ, நிரந்தர வாழ்வாதார வழிமுறைகளையோ ஏற்படுத்தவில்லை. மூன்றாண்டு நிறைவான பிண்ணராவது இதற்காக ஏதாவது இடம்பெறுமா?

மரணித்த ஷுஹதாக்கள் விபரம்

01. அப்துல் சலாம் நழீம் - நெய்தல் நகர், மூதூர் - 01
02. நெய்னா முகம்மது அசீஸ் - நெய்தல் நகர், மூதூர் -1
03. செய்யது அலவி யூசுப் - நொக்ஸ் றோட், மூதூர் 04
04. அப்துல் வஹாப் தாஜிதீன் - தாரிக் வீதி, மூதூர் 01
05. முகம்மது இப்றாஹீம் தௌபீக் - நெய்தல் நகர், மூதூர் 1
06. ஹனீபா முகம்மது றியாஸ் - கிண்ணியா 07
07. முகம்மது அனீபா தாஹிர் - கிண்ணியா
08. முகம்மது லத்தீப் உபைதுல்லாஹ் - கிண்ணியா
09. சலீம் கியாஸ் - பாலை நகர்
10. அப்துல் மஜீத் மர்சூக் - மூதூர் 2
11. புகாரி முகம்மது ஜெசீன் - பாலை நகர்
12. குத்தூஸ் முகம்மது நியாஸ் - பாலை நகர்
13. சதக் முகம்மது முஜீப் - பாலை நகர்
14. பக்கீர் குட்டி அமீர் - பாலை நகர்
15. ஜெய்னுதீன் முபாறக் - பாலை நகர்
16. முகம்மது ஹனீபா சலீம் - பாலை நகர்
17. முகம்மது ஹனீபா ஜெமீல் - அக்கரைச்சேனை
18. மீரா முகிதீன் ஐயுப்கான் - அக்கரைச்சேனை
19. பக்கீர் முகிதீன் ஜெலீம் - அக்கரைச்சேனை
20. காசிமுகம்மது முபீன் - கலீல் நகர்
21. ஆதம்பாவா ஜஹாங்கீர் - மூதூர் 07
22. மௌறூப் நிஜாம் - தக்வா நகர்
23. முகம்மது ஹனீபா ஜமீல் - தக்வா நகர்
24. அப்துல் ஜப்பார் உனைஸ் - மூதூர்



முஸ்லிம் தேசத்தின் சார்பில் உயிர் நீத்த ஷுஹதாக்களுக்கு எமது கண்ணீர் காணிக்கைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம்

முஸ்லிம் மக்களுக்குரிய சுதந்திர உணர்வுகளை ஏற்றுக்கொள்ளுமா?

தற்போது ஆட்சியிலிருக்கும் ஐ.தே.மு. அரசாங்கத்தைப் பதவிக்கு அமர்த்தியவர்கள் முஸ்லிம்கள் எனினும் பதவிக்கு வந்த மறு நிமிடமே ஏணியாக இருந்த முஸ்லிம்களின் நலன்களை ஒவ்வொன்றாகக் குறைப்பதைக் கொள்கையாகக் கொண்டிருக்கின்றது. நேரடியாக இவ்வரசாங்கம் அதனைச் செய்யா விடினும் பிரதேச ரீதியான அதன் அரச அதிகாரிகள் நியமனங்களூடாகக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

உதாரணத்திற்கு வடக்கு கிழக்கு மாகாண சபையின் அமைச்சுக்கள் திருகோணமலையில் அமைந்திருக்கின்றன. அந்த அமைச்சுக்களில் வேலை செய்கின்ற அதிகாரிகள் 99 சதவீதம் தமிழ்ச் சகோதரர்களே. முறைப்படி வடக்கு கிழக்கிலே வாழுகின்ற மூவின மக்களுக்கும் உரிய விகிதாசாரப்படியே அரச நியமனங்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அது அங்கே கடைப்பிடிக்கப்படவில்லை. ஏனெனில் கடந்த ஐ.தே.க அரசாங்கம் திரு ஜே.ஆர். தலைமையில் இருந்த வேளை உருவாக்கிய மாகாணசபை உருவாக்கத்தில் தமிழ்ச் சகோதரர்களே நியமிக்கப்பட்டார்கள்.

அதனையடுத்து பொ.ஐ.மு. ஆட்சிக்கு வந்தவேளை இந்த விபரங்கள் சுட்டிக்காட்டப்பட்டபோது அன்று மாகாண அமைச்சின் உயர் அதிகாரிகளினதும் மற்றும் அரசியல் வாதிகளினதும் எதிர்ப்பையடுத்து அவை கிடப்பில் விடப்பட்டன. மேலும் இக்காலப்பகுதி யுத்தம் அகோரமாக நடைபெற்ற வேளை. இவ்வேளை வடக்கு கிழக்கிலே வேலை வாய்ப்பு வழங்கல். அபிவிருத்தி வேலைகள் போன்றவற்றிற்கு இந்த மாகாண சபையில் உயர் பதவியிலிருந்தோர் பெரும் இடைஞ்சலாக இருந்தனர். எனினும் அன்று மிக முக்கிய அமைச்சராக இருந்த மர்ஹூம் மு.கா. தேசியத் தலைவர் எம்.எச்.எம் அஷ்ரப் அவர்கள் அன்றும் ஜனாதிபதியாகவிருந்த திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் விசேட உத்தரவுகளைப் பெற்று மிக முக்கியமான சேவைகளையும் இட மாற்றங்களையும் அரச நியமனங்களையும் செய்தார்.

ஆனால் இன்று நடப்பது மிக மிக மனவருத்தம் ஏற்படக்கூடிய விடயங்களாகவே உள்ளன. இன்றைய அரசாங்கத்திலும் நமது முஸ்லிம்கள் முக்கிய அமைச்சுப் பதவிகளில் இருக்கின்றபோதும் அவர்களால் இந்த மாகாண அமைச்சிலுள்ள அதிகாரிகளைக் கொண்டு சேவை செய்ய முடியாமலிருக்கின்றது. ஏனெனில் இன்றைய அரசியலில் முஸ்லிம் மக்கள் வெறும் பகடைக்காய்களாக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அபிவிருத்தி வேலைகள் மந்த கெதியில் நடைபெறுகின்றன. மாகாண அமைச்சின் அரச நியமனங்களில் முஸ்லிம்கள் புறக்கணிப்பு, இடமாற்ற விடயங்களில் பழிவாங்கல், காணி விடயங்களில் பக்கச்சார்பு போன்றவற்றுடன் முஸ்லிம்களுக்கு வடக்கு கிழக்கு மாகாண சபையில் கிடைக்க வேண்டிய விகிதாசார அரசியல் உரிமைகள்கூட உதாசீனம் செய்யப்பட்டிருக்கின்றன.

எம்.எல்.எம். முஸ்தபா
மருதமுனை

ஏதோவொரு வகையில் முஸ்லிம்களுக்கு வல்ல இறைவன் கொடுத்த பொருளாதார வளத்தைக் கொண்டே ஓரளவு இன்று வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இப்படிப்பட்டதொரு நிலையிலேயே இன்று வடக்குக் கிழக்கிற்கென இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான "இழுபறி" நடைபெற்று வருகின்றன. இதிலும் முஸ்லிம்கள் ஏலவே அப்புறப்படுத்தப்பட்டு விட்டார்கள். எனினும் அங்குமிங்குமாக முஸ்லிம்களிடமிருந்துவரும் எதிர்ப்புக்களைத் தணிய வைப்பதற்காக இப்போது முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லிக் கொள்பவர்களிடம் ஒப்புதலுக்காக ஏதோ பேசுகின்றது இன்றைய ஐ.தே.மு அரசாங்கம். இதில் சிலர் ஏமாந்தாலும் ஐ.தே.மு அரசாங்கத்தின் உண்மையான கொள்கைகளை விளங்கிய முஸ்லிம்கள் ஏமாறமாட்டார்கள்.

ஏனெனில் ஐ.தே.கட்சிக்கு உண்மையில் முஸ்லிம் மக்களிடம் நேசமிருந்தால் முஸ்லிம் மக்களைக் கேட்காமல் இரவோடிரவாக வடக்கையும் கிழக்கையும் இணைத்திருக்காது. மேலும் அன்று பயங்கரவாதிகளின் தாக்குதல்களைத் தடுக்க முன்னின்ற முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களை ஜிஹாத் படைவீரர்கள் என்று சொல்லி கைது செய்து அடைத்திருக்காது. இன்னும் விடுதலைப் போராளிகளால் இலட்சக்கணக்காக விரட்டப்பட்டு அகதி வாழ்க்கையை நடாத்திவரும் முஸ்லிம் மக்களைக் கணக்கிலேயே எடுக்காமல் மிகவும் ரகசியமாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருக்காது. மேலும் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையிலே நியாயமான முறையில் இருக்கவேண்டிய முஸ்லிம் தரப்பினை வேண்டுமென்றே தட்டிக் கழித்திருக்காது. இது தவிர வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு இன்று அரசாங்கம் பொறுப்பல்ல. இது திட்டவட்டமாக அண்மையில் சில இடங்களில் நிரூபிக்கப்பட்ட உண்மை. (எமக்கு இன்று அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் பாதுகாப்பில்லை)

இவை ஒருபுறமிருக்க மு.கா.கட்சியின் உதவியோடு பதவியேற்ற இவ்வரசாங்கம் அண்மையில் மு.கா.சின் கோட்டையான அம்பாறை மாவட்டத்துக்கு தமது முக்கிய அமைச்சர்களில் பத்துக்கும் அதிகமானவர்களை அனுப்பி கட்சியை புனரமைப்புச் செய்துகொள்ள கூட்டங்களை நடத்தியது. இந்தச் செயல்களுக்கு யார் பொறுப்பு. இது கட்சிகளுக்கிடையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மீறும் செயலல்லவா? எந்தக் கட்சியாக இருந்தாலும் அரசாங்கமாகவிருந்தாலும் உறுதியும் நேர்மையும் கொண்டிருக்க வேண்டும். இவைகள் இன்றைய ஐ.தே.மு அரசாங்கத்திடம் இருக்கின்றதா? இப்படிக் கொள்கையற்ற அரசாங்கத்தினால் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம்களுக்கென்று நீதிகிடைக்குமா? இவைகளை நாம் ஏன் கேட்கிறோம். வடக்கு கிழக்கு இணைப்பின்போது வடக்கு கிழக்கு மாகாண சபை அமைக்கும்போது இன்றைய புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடும்போது சமாதானப் பேச்சுவார்த்தைகளின் ஆரம்ப நிலைகளின் போது மேலும் வடக்கு கிழக்குப் பயங்கர வாதிகளால் வரலாற்று ரீதியான முஸ்லிம்கள் மீதான அதியுச்சத் தாக்குதல்கள், இனச்சுத்திகரிப்புகளின்போது ஆட்சி அதிகாரத்தில் ஐ.தே.முன்னணி இருந்துள்ளது. எனவே இப்படியான அரசாங்கம் ஒன்றினால் வடக்கு கிழக்கு [illegible]லிம்களின் உணர்வுகளை[illegible] நேர்மையான தீர்வுகளைத் தரமுடியுமா?

வாரமொரு உரைகல் - மருதூர் மெய்யொளி

தீமைகளுக்கெதிராகப் போராடும் மனோவலிமை வேண்டும்!

இன்று நம்மைச் சுற்றிப்பல்வேறு தீமைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவற்றினால் நமது வாழ்வு முறைமைகள் இஸ்லாமிய நடைமுறைகளிலிருந்து விலகிச் சென்றுகொண்டிருக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையை அகற்றுவதிலும், மாற்றியமைப்பதிலும் நாம் பெரும் கவனத்தைச் செலுத்துவதாக இல்லை. மாறாக நமக்கேன் வேண்டாத வேலைகள் என்ற மனோ நிலையில் வாழவே நம்மில் பலர் விரும்புகின்றோம்.

இதற்கு முக்கிய காரணம் நம்மை எதிர்கொண்டுள்ள தீமைகளுக்கு எதிராகப் போராடும் போக்கினை நம்மில் வளர்த்துக் கொள்வதன் மூலம் பல்வேறு தியாகங்களை, இழப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என்கின்ற அச்ச உணர்வு மேலீட்டினாலாகும்.

சத்தியத்தை நிலை நாட்டப்புறப்படும் பயணத்தில் மரண அச்சுறுத்தல்கள்கூட வரலாம். அவற்றுக்காகப் பயந்து, தூரமாகி வாழ்வதென்பது ஒரு முஸ்லிமின் உயர்ந்த பண்பாக இருக்க முடியாது. இறை நம்பிக்கையை உறுதியாக நிலை நாட்டும் பக்குவம், வீர உணர்வு, நீதி, நேர்மை, ஒழுக்கம் போன்ற பண்புகளை நிலை நாட்டுவதற்கு நாம் என்றும் எம்மைத் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

நமது பிறப்பும், மரணமும் ஒரு முறைதான் நிகழும். அதுவும் அல்லாஹ்வின் நாட்டத்தின் அடிப்படையில் என்பதனை நாம் உறுதியாக நம்ப வேண்டும். அவ்வாறு நம்புவோமானால் பயந்து, பதுங்கி வாழும் முறைமைக்குமாறாக சத்திய போராட்டத்தின் வழியில் எம்மை உட்படுத்திக்கொள்ளவே விரும்புவோம். அதுவே உறுதியான விசுவாசத்தின் நடைமுறையாக இருக்கும்.

"ஒரு தீமை ஓரிடத்தில் நடைபெறுவதை உங்களில் ஒருவர் பார்க்க நேரிட்டால், அதனை அவர் கையால் தடுத்து நிறுத்தவும். அப்படிச் செய்ய இயலாவிடின், நாவினாலாவது சொல்லி அதனை நிறுத்த வேண்டும். இதற்கும் இயலவில்லையாயின், மனதாலாவது அத்தீமையை வெறுத்து ஒதுங்கியிருந்துவிட வேண்டும். (மனதால் வெறுக்கும்) இதுவே இறை நம்பிக்கையில் வலிமை குன்றியதாகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

(ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி)

இந்த நபி மொழி தனி நபர்களை நோக்கிப் பேசுகின்றது. அவ்வாறாயின் ஒரு பிரதேசத்தில், அல்லது ஒரு குழுவாக வாழும் மக்களிடையே எல்லோரும் விசுவாசப்பலம் குன்றியவர்களாக இருக்கமாட்டார்கள். பெரும்பகுதியினர் கரத்தினால், நாவினால் தடுக்கும் வல்லமையுடையோர்களாகவே இருப்பார்கள். அவர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து கொண்டு ஒரு கட்டமைப்பாக இயங்க முன் வரவேண்டும்.

இவர்கள் தம்மை சூழவுள்ள தீமைகளுக்கெதிராக போராடுவதற்கும், சத்தியத்தை நிலைநாட்டி வைப்பதற்கும், தமது விசுவாசத்தின் உறுதியான மனோ வலிமையை நிரூபித்து வைப்பதற்கும், அவனது தியாகிகள் எனும் வட்டத்திற்கும் சொந்தக்காரர்களாக மாறுவதற்கும் தயாராகவே இருக்க வேண்டும்.

தீமைகளுக்கு எதிராகப் போராடும் சக்தி குன்றியோர்கள் தமது விசுவாசத்தின் படித்தரத்தில் குறைந்தவர்கள் என்று மேற்படி நபிமொழி பகர்வதும், அத்தகையோர்களை விட்டு விட்டு வலிமையுடையோர்களின் கூட்டிணைப்பினால் உருவாகும் கட்டமைப்பினால் தீமைகளை களைந்தெறிவதற்கு நாம் எக்கணமும் தயாராக இருக்கும் வலிமையான விசுவாசத்தைப் பெற்றுக் கொள்வோம்; வெற்றி வாழ்வை நமதாக்குவோம்.

கிட்டாயம் ஒரு கப்று

பாலஸ்தீனப்
பாலகன்
எறிந்த
கல்லொன்று
எரிமலையாய்
வெடிக்கும்
நாளொன்று
வெகு சீக்கிரம்
வேண்டும்!

அமெரிக்கனின்
ஆணவமும்
இஸ்ரேலின்
இலட்சியமும்
அழித்தொழிக்கப்படும்
நாளொன்று
அவசியம் வேண்டும்!

எங்கள்
கிப்லா உங்கள்
யூத
ஆலயமாகி விடுமா?
ஷரோனே!
கட்டாயம் வேண்டும்
ஒரு கப்றுக்குழி
உனக்கும் – உன்
கூட்டத்தினருக்கும்
சேர்த்து
கட்டாயம் வேண்டும்
ஒரு கப்றுக்குழி
பாலஸ்தீனக்
குஞ்சுகளே
தோண்டுங்கள்
உங்களால் முடிந்தவரை
தோண்டுங்கள்
ஆறடிக்குழிக்குள்
இவர்கள்
அராஜகத்தையெல்லாம்
அடக்கி விடலாம்!

அக்ஸாவில் ஒலிக்கும்
பாங்கோசை
அமெரிக்காவில்
எதிரொலிக்க வேண்டும்!

ஏரியல் ஷரோனின்
ஏவுகணையை
எரித்து
அமெரிக்கனின்
அணுவை
அழித்து
பிரிட்டிஸின்
பீரங்கியை
பிடுங்கி
காபிர்களெல்லாம்
காலடியில் கிடக்கும்
நாளொன்று
கட்டாயம்
வேண்டும்!

புத்தளம் நஸீம் ரூமி

நீ மலைவர் பேசுகிறேன்...!

உஸ்மான் மரிக்கார்

ஏன் தம்பி என் முகத்தில்கரி பூசுகிறாய்?
**
எதற்கு என் முதுகில் எச்சில் தடவுகிறாய்?
**
இந்த முத்திரை வெளியீடு வெகுமானமல்லவே; அது எனக்கு அவமானமன்றோ?
**
என் மூச்சு முடிந்து மூன்று வருஷமாச்சு எனது மரண விசாரணைக்கு என்ன ஆச்சு?
**
என் ஜனாஸாவைப் போர்த்திய கபனைப் போலவே என் மௌத்தையும் மூடியிருக்குது மர்மத்திரை.
**
என் தர்ம பத்தினியும் தங்கத் தம்பிமாரும் அதிகார நாற்காலிகளில் ஆழ்ந்த நித்திரை.
**
எனக்கெதற்கு முத்திரை? இது நாளைய நாடகத்துக்கான இன்றைய ஒத்திகை. உங்கள் நிர்வாணத்தை மறைப்பதற்கான நிஜமான ஒப்பனை.
**
மக்கள் மத்தியில் முகம் காட்ட முடியாதவர்களுக்குத் தேவை ஒரு முகத்திரை அதுதான் இந்த முத்திரை!
**

இது அடுத்த தேர்தலுக்கான ஆரம்ப யாத்திரை.
**
என் ஆயுசுக் கயிறு அறுந்து ஆயிரம் நாளாச்சு ஆயினும் இன்னும் அவிழவே இல்லை அந்த மர்மமுடிச்சு.
**
என் இளைய தளபதி! கீர்த்தி மிகுந்த கிரேக்க வேந்தன் அலெக்ஸாந்தர் போல் ஆவேசப் பட்டாய்.
**
நீலப் பாறையிலிருந்து பச்சைப் பாறைக்குத் தாவினாய். வாள் வீச்சில் வல்லவன்போல் வேஷம் போட்டாய். வாய்வீச்சில் வல்லவனே! உன் உடைவாளை மட்டும் நீ உருவவே இல்லையே.
**
எனது மரண விசாரணைக் கமிஷனுக்கு முத்திரை வைத்தவனும் நீதான் எனது மரணத்துக்காக முத்திரை வெளியிடுபவனும் நீயே.
**
தம்பி! பிள்ளையையும் கிள்ளிவிட்டுத் தொட்டிலையும் ஆட்டுகிறாய்.
**
என்னைத் திட்டம் போட்டுத் தீர்த்துக் கட்டிய தீயவன் எவன்?
**
அது ஆனையா? கதிரையா? பூனையா? புலியா? பச்சையா? நீலமா? மஞ்சளா?
**
அந்தக் கவலை உங்களுக்கெதற்கு மகராசன்மாரே?
**
யானைச் சவாரி கதிரைச் சொகுசு புலிச் சவாரி. சீடர்களின் பேரில் குருநாதர் சாப்பிடுவாராம் இங்கோ குருவின் பேரைச்சொல்லி சீடர்கள் புகுந்து விளையாடுகிறார்கள்.
**
என் மரணச் செய்திகேட்டு எனது எதிரிகள் ஆனந்தக் கூத்தாடினார்கள் அது நிஜம்.
**
எனது தர்மபத்தினியும் தங்கத் தம்பிமாரும் அழுது புரண்டார்கள் அது மாயம்.
**
அவர்களது நிஜப் பகைமை என்னை நோவிக்கவில்லை. இவர்களது போலிப் பாசம்தான் என்னைப் படாதபாடுபடுத்துது.
**
அந்தரத்தில் பிரிந்தது என் ஆவி நிலத்தின் கீழே நிம்மதியாய் நித்திரைக்க முடியலையே தேவி.
**
மனித உரிமை கொடிகட்டிப் பறக்கும் மகத்தான காலமிது.
**
சராசரி மனிதன் கொலையுண்டால் கூடச் சட்ட விசாரணை உண்டு. நானோ மக்கள் தலைவன் மாமனிதன்! எனது கொலைக்கு மட்டும் ஏன் இருட்டடிப்பு?
**
சொல்லடா என் தங்கத்தம்பி நீ! சொல்லடி என் தர்மபத்தினி! என் மர்ம மரணத்தைத் துப்புத்துலக்கினால்... நான் உடனே உயிர்த்தெழுந்து வந்து உங்கள் பதவியைப் பறித்துக் கொள்வேன் என்று பயமா?
**
எனது மரணத்தால் உச்ச பயனடைந்தது நீங்கள் இருவரும். மிக்க நட்டமடைந்ததோ எனது மக்கள் யாவரும்.
**
என் தங்கத் தம்பி! நான் ஆசையோடு வளர்த்த மரத்தை ஆனைக்குத் தின்னக் கொடுக்க ஆசைப்படுகிறாய்.
**
என் தர்மபத்தினி! அந்த மரத்தை அறுத்து அம்மையாருக்குக் கதிரை செய்யத் துடிக்கிறாய்.
**
என்ன இது? உங்கள் அப்பன் வீட்டுச் சொத்தா? நாங்கள் பொத்திப் பொத்தி வளர்த்த முத்து.
**
நாங்கள் தண்ணீர் ஊற்றிவளர்த்த மரம் அல்ல; கண்ணீரும் செந்நீரும் ஊற்றி வளர்த்த மரம் அது!
**
நிழலை அனுபவிக்க வந்த நீங்கள் எல்லாம் அதன் ஆணி வேரையே அசைத்துப் பார்க்கிறீர்கள்.
**
பேரில் இருந்தால் மட்டும் போதுமா? செயலில் இல்லையே அல்லாஹ்!
**
அல்லாஹ்வின் வாளாய் இருக்க வேண்டிய அருமைத் தம்பிமாரே! ஆனையின் வாலாய் ஆனீரே வேங்கையின் வாலாய்ப் போனீரே.
**
அப்படியே போனால் நாயின் வாலாய் ஆனாலும் நான் ஆச்சர்யப்படமாட்டேனே.
**
தம்பி! நீ எனது இறந்த காலத்தை குழி தோண்டிப் புதைத்தது ஒன்றும் அவ்வளவு ஆச்சர்யம் அல்லவே! நீ! எனது மக்களின் எதிர்காலத்தையே குழி தோண்டிப் புதைத்தவனாயிற்றே!
**
நான் பத்திரமாய்ப் பாதுகாத்த வெள்ளாட்டுப் பண்ணையை வேங்கைக்குத் தாரைவார்த்தவனே!
**
வேண்டும் வரம் என்ன? வெட்கப் படாமல் சொல்லு தம்பி! இரும்பு இல்லையே! தங்கம் தானே? தாராளம் தருவார்கள். ஆயினும் என் "தங்கத்" தம்பி! ஒன்றை மட்டும் ஒருபோதும் மறந்துவிடாதே!
**
நீ நினைத்த படி விற்பதற்கு அது வொன்றும் ஐஸ்க் கிறீம் அல்ல;
**
கிட்ட நெருங்கினால் சுட்டுப் பொசுக்கும் கிழக்கு நெருப்பு!
**
ஜாக்கிரதை! விற்பதற்கு முயன்றால் விலை கொடுக்க நேரும்.

சீர்திருத்தவாதி முஸ்லிம் குரல்!

தங்களின் முஸ்லிம் குரல் பத்திரிகையூடாக சமுகத்தை சீர்செய்யும் விடயத்தில், வியாபார நோக்கு என்ற பதத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தாற்போல் நியாயமான, ஏற்றுக் கொள்ளக்கூடிய ஆக்கங்களிற்கு மதிப்பளித்து பிரசுரம் செய்துள்ளீர்கள். இவ்விடயத்தில் பக்கச்சார்பற்று பத்திரிகைச் சுதந்திரம் எனும் வாசகத்திற்கு பத்துயிர் அளித்ததுபோல் தங்கள் பத்திரிகை தலைமைத்துவம், கட்சி வேறுபாடு பாராமல் ஆக்கங்களை உண்மையென அறிந்து இடம் ஒதுக்கி பிரசுரம் செய்துள்ளதைக் கண்டு பெருமிதம் அடைகிறேன்.

முஷ்மில் ஏ. காதர்
புல்மோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாதுகாப்பு வீரனின் நாட்குறிப்பு

ஒரு பாதுகாப்பு வீரனின் வாழ்க்கை அபாயகரமானது. ஒரு பிரபல அமைச்சரின் பாதுகாவலரான அசங்காவிடம் தன்னம்பிக்கையும், உறுதியும் மிளிர்ந்து காணப்படுகின்றன. பொறுப்புக்களை உணர்ந்து செயற்படும் அசங்க வார்த்தைகளை மிகவும் நிதானமாக உபயோகிக்கிறார்.

விஷேடமாக பிறருடன் (வெளியாருடன்) உரையாடும் போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்.

அவர் எளிதில் உணர்ச்சி வசப்படமாட்டார் அவரது உள்ளுணர்வுகள் மிகப் பலமானவை.

எனது சுயவிருப்பப்படி நான் இந்தத் தொழிலைத் தெரிவு செய்தேன்.

முன்னர் 10 ஆண்டுகள் இராணுவ அதிகாரியாக இருந்தார். அபாயம் சூழ்ந்த தனது தொழிலின் தன்மை காலையில் சென்றால் மாலையில் வீடு வருவது நிச்சயமில்லை.

அச்சம் என்பது இல்லாமல் இல்லை. எச்சமயம் எதுவும் நடக்கலாம் என்ற அச்சம் உண்டு.

தன்னம்பிக்கை மிகுந்த அசங்க. வெறும் பகட்டு ஆடம்பரமோ வீண் பெருமையோ கொண்டவரல்ல.

அதிக தன்னம்பிக்கை கொண்டு செயற்பட ஒழுக்கம் அதி முக்கியம்.

அவரது கருத்துப்படி முதலில் நடவடிக்கை எடுப்பவர் 60% தொடக்கம் 75% வரை வெற்றி பெறும் வாய்ப்பைக் கொண்டிருக்கிறார். நான் துப்பாக்கியைப் பிரயோகிக்க வேண்டியிருப்பின் தயார் நிலையில் இருக்கும் மற்றவர் அறியாவகையில் சுடுவேன்.

அச்சுறுத்தல் எப்பகுதியில் இருந்தும் வரலாம் ஆட்களின் முக்கியத்துவத்துக்கு ஏற்ப அச்சுறுத்தலும் வித்தியாசப்படும். சமூகத்தின் எத்தரப்பினருக்கும் அச்சுறுத்தல் ஏற்படலாம். உதாரணம் தாதி ஒருத்தியுடன் காதல் கொண்ட ஒருவன் தனது உறுதியைக் காட்டுவதற்காக அமெரிக்க சனாதிபதி ரொனால்ட் ரீகன் மீது சுட்டான்.

முன்னரே திட்டமிடுதல்

ஆபத்தை மிகக் குறைந்த அளவில் வைத்துக் கொள்ளும் நோக்குடன் திட்டமிட்டுச் செயற்படுவோம்

சில சமயம் இலக்குக்கு முன்பே திட்டம் இடுவோம்.

செல்லும் பாதையும் வாகனமும் அடிக்கடி திட்டம் இட்டுத் தெரிவு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு நாளைய செயற்பாடுகள் பற்றி அந்நாள் மாலையிலேயே கலந்துரையாடப்பட்டு தவறுகள் ஏதும் இருப்பின் திருத்திக் கொள்ள ஆவன செய்யப்படல் வேண்டும்.

சில சமயம் செல்லவிருக்கும் இடத்துக்கு முன்கூட்டியே ஆட்கள் அனுப்பப்பட்டு விடயம் அறிந்த பின் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்பாடு செய்யப்படும்.

மேதினம் போன்ற வைபவங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்படவேண்டியிருக்கும்.

பாதுகாப்பு அதிகாரியொருவர் V.I.P நபரின் உணவுகள், ஆளுமை போன்றன பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும்.

அசங்க தனது பணிகளில் (100%) முழுமையான கவனம் செலுத்துகிறார். தினமும் 12 மணித்தியாலயம் பணியுரியும் அவர் எதனை பற்றியும் கவலை கொள்வதில்லை.

தன்னுடன் பணியுரியும் பிற அதிகாரிகளையும் கவனித்து அவர்கள் எல்லை மீறாது உறுதி செய்து கொள்வது அசங்கவின் மற்றுமோர் கடமை.

சில சமயம் அமைச்சரின் பிரதிபலிப்புகளுக்கு ஏற்ப, நிலைமையினை உணர்ந்து செயற்படுவது எமது கடமை.

எனவே விழிப்பும், துடிப்பான செயலும் எந்நேரமும் தேவை. ஒரு குழுவினராக இணைந்து செயற்படுவது முக்கியம். காரணம் ஒவ்வொருவரும் தமது பாதுகாப்புக்காக அடுத்தவர் மீது தங்கி நிற்கிறார்.

ஒவ்வொருவரும் முழுமையான 100% அர்ப்பணிப்புடன் கடமையாற்ற வேண்டும். ஆபத்தை எதிர் கொள்ள இதுவே ஏற்ற வழி..

மேரியன் டேவிட்
சண்டே லீடர்

அதிமேதாவி "பறுவதம் பாட்டி"யும் அடிமுட்டாள் "சலீம் நானா"வும்

எழுதுவது: லைலா அஷ்ராவி

தமிழரின் ஊடகங்கள் பற்றி நாம் நன்று அறிந்தாயிற்று; உணர்ந்தாயிற்று. இதை அவர்களே விளங்குமளவிற்கு எம் மத்தியில் பகிரங்கப்படுத்தியாயிற்று. நமக்கான சுயமான ஊடகத்தின் தேவையை எங்களுக்கு நாளுக்கு நாள் உணர்த்தியதையிட்டு நாம் தமிழர் ஊடகங்களின் போக்கை அவதானித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் நம் தன்மான உணர்ச்சிகள் செயல் வடிவம் பெறும்.

கடந்த 26 ஆம் திகதிய வீரகேசரியின் "வாயாடி" எழுதும் "சந்தியில்" பந்தியை வாசித்துப் பாருங்கள். இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முனறு பிரதான பாத்திரங்கள் (பண்டா ஐயா, பறுவதம் பாட்டி, சலீம் நானா) இருப்பார்கள். எப்போதும் "சலீம் நானா" அதிமுட்டாளாகவே சித்தரிக்கப்படுவார். ஆனால் பறுவதம் பாட்டி (கவனிக்க : பாட்டி) அதிமேதாவியாகவே வலம் வந்து பண்டா ஐயாவுக்கும், சலீம் நானாவுக்கும் புத்தி புகட்டிக் கொண்டிருப்பார். சிலவேளை பறுவதம் பாட்டி, அல்லது பண்டா ஐயாவுக்கு ஊடாக "வாயாடி" மேதாவி, முஸ்லிம்களை மட்டம் தட்டிக் கொண்டிருப்பார், குறித்த இப்பந்தியில் "உங்கள் மர மண்டைக்கு டாலர் கணக்குப் பிடிபடாது" என சலீம் நானா மட்டம் தட்டப்படுகிறார். ஆனால், பந்திப்படி அந்தக் கணக்கை சலீம் நானாதான் போடுகிறார்! கூடவே, "முஸ்லிம்கள்தான் சமாதானத்தைக் குழப்பப் பார்க்கிறார்கள்" என்ற திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கருத்தாக்கத்தையும் அப்பந்தியில் வைக்கிறார்.

புலம்பெயர நாடுகளில் தமிழர்களின் அடையாளம் குறித்த கதையாடல்கள் எழுந்துள்ள நிலையில் "நம்முடைய ஆட்களுக்கு நல்ல மதிப்பு (ஆமாம், லண்டனில் வீஷேட அதிரடிப்படையை அவர்களுக்காக உருவாக்கியிருக்கிறார்கள்) எங்கள் ஆட்களின் பிள்ளைகள் படிப்பில் சூராக்களாக இருக்கிறார்கள்" என்றும் மார்தட்டிக் கொள்கிறார்.

இவையெல்லாம் முஸ்லிம்களுக்கு மன உளைச்சல்களை ஏற்படுத்துகின்ற விடயங்கள். ஆனாலும் இதனை நம் சிந்தனைப் பாங்கினூடாக தவிர்த்துக் கொள்ள முடியும். அதாவது நாம் எம்மை கூனிக் குறுக வைக்கும் சிறுபான்மைக் கருத்தாக்கத்தில் அதிகம் பாராப்பதை விடுத்து, எம்மை உலகளாவிய முஸ்லிம் உம்மத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அதன் ஆழ, அகலங்கள், அறிவுப் பொக்கிஷங்கள் எம்மை ஆசுவாசப்படுத்தி புத்துயிர்ப்பூட்டும். இப்போதும்கூட, எமது சிதறிய சொற்ப ஆளுமைகள், ஒப்பீட்டளவில் எவ்வளவோ திறமை வாய்ந்தவை என்பது ஒன்றாய் இருந்து பழகியவர்களுக்கு விளங்கியிருக்கும். ஆனால், அவர்களுக்கு சாதகமாய் இருந்தது என்னவென்றால், அவர்களின் ஊடகங்கள் தான்! ஆம், பதர்கள் கூட நெற்கதிர்களாகின!

"ஹனான் அஷ்ராவிக்கு 2003 இன் சிட்னி சமாதான - அமைதிப் பரிசு

என் பெயரின் பின் பகுதிக்குரிய ஹனான் அஷ்ராவி இவ்வாண்டின் மேற்குறித்த பரிசுக்கு பலத்த யூத எதிர்ப்புக்களுக்கு மத்தியில் தெரிவாகியுள்ளார். பலஸ்தீன அரபுக் கிறிஸ்தவரான அஷ்ராவி பலஸ்தீனப் போராட்டத்தின் நீண்டகால புலமைத்துவப் போராளியும், கவிஞருமாவார். யாசிர் அரபாத்தின் நிர்வாகத்தில் முக்கிய பதவி வகித்த இவரின் தெரிவு குறித்து பரிசு வழங்கும் அமைப்பின் பணிப்பாளர் பேராசிரியர் ஸ்டுவர்ட் ரீஸ் கூறுகையில் "ஹனான் அஷ்ராவியின் தெரிவையிட்டு எமது அமைப்பு பலத்த அழுத்தங்களுக்குட்பட்டது. இதனால் இதுபற்றிய அறிவிப்பு பல மாதங்களுக்கு தள்ளிவைக்கப்பட்டது. எனினும் நவம்பர் ஆறாம் திகதி அவர் இயரிசைப் பெற்றுக் கொள்வார். மனித உரிமைகள், மத்திய கிழக்கு சமாதான முனைவுகள் போன்றவற்றில் அவர் காட்டிய ஈடுபாட்டுக்காகவும் ஆக்கிரமிப்பு ஊழலுக்கு எதிரான அவரின் துணிச்சலுமே பேச்சுக்களுக்காகவும் இப்பரிசு வழங்கப்படுகிறது என்று கூறியுள்ளார். தனது தெரிவு குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அஷ்ராவி "மத்திய கிழக்கில் மட்டுமல்ல உலகில் எங்காவது சமாதானத்திற்காகவென வழங்கப்படுகின்ற விருது எப்போதுமே முக்கிய சேதியொன்றைச் சுமந்து வருகிறது" என்று கூறியுள்ளார்.

இதனைக் கடுமையாக எதிர்த்துள்ள யூத நிறுவனமொன்றின் தலைவர், "டெஸ்மன்ட் டுடு சேர் வில்லியம் டீன், மேரி ரொபின்சன் போன்றோருக்கு வழங்கப்பட்ட விருது இம்முறை மிக மோசமான தெரிவினைச் செய்துள்ளது" என்று கூறியுள்ளார். எனினும் இவ்விருதை வென்ற முன்னாள் மனித உரிமைக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராகிய மேரி ரொபின்சன் இந்த "யூதக் குற்றச்சாட்டை" மறுதலித்துள்ளார்.

இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரிய பொருட்களை, அரும் பொருட்களைப் பாதுகாத்தல்

முஸ்லிம் கலாசார நூதனசாலை - அட்டாளைச்சேனை

கொழும்பு நூதனசாலை உட்பட நாட்டின் பிற நூதன சாலைகளில் உள்நாட்டு முஸ்லிம்களின் கலாசாரம், பாரம்பரிய வாழ்க்கை முறை போன்றன தொடர்பான அரும் பொருட்கள்/கலைப் பொருட்கள் காணப்படாமையினால் இலங்கை முஸ்லிம்களின் பாரம்பரியத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கான நூதனசாலையொன்றின் தேவை நீண்டகாலமாகக் காணப்படுகிறது.

இவ்வகையில், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தினால் 2001ஆம் ஆண்டு யூன் மாதம் தாபிக்கப்பட்ட முஸ்லிம் கலாசார நூதனசாலை இன்று இலங்கை முஸ்லிம்களின் குறிப்பாகக் கிழக்கிலங்கை முஸ்லிம்களின் வரலாற்று கலாசார, முக்கியத்துவமிக்க பொருட்களைப் பாதுகாத்து சமூகத்தின் கலாசாரப் பாரம்பரியங்களை விஷேடமாக இளம் பரம்பரையினரிடத்தில் அக்கறையுண்டாக்கப் பெரிதும் உதவும்.

அட்டாளைச்சேனை, மீனோடைக்கட்டில் அமைந்துள்ள இந்நிலையம் கடந்த கால முஸ்லிம்களின் சமூக, பொருளாதார வாழ்வுடன் தொடர்பான பொருட்கள், ஓலை எழுத்துக்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், உடை மற்றும் ஆபரணங்கள் உட்படப் பெருந்தொகையான பொருட்களைக் கொண்டுள்ளது.

ஆங்கில மூலம்: ஆஸிப் ஹுசைன்

அக்கரைப்பற்றில் பல பொருட்கள் இந்நாட்களில் பயன்படுத்தப்படுவதில்லை. முற்காலத்தில் வாழ்ந்த முஸ்லிம் மக்களின் (சிராமிய) பாரம்பரிய வாழ்க்கை பற்றி இவை சுட்டிக்காட்டுகின்றன. இலங்கை முஸ்லிம் மக்கள், விஷேடமாகக் கிழக்கிலங்கை மக்கள் தமது சமய அனுஷ்டானங்களில் ஆழ்ந்த ஈடுபாடுடையவர்கள். ஆகவே அவர்களது பாரம்பரியங்களைப் பாதுகாக்க முன்வரும் மக்கள் அவ்வாறு சமய விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இயல்பே. உதாரணமாகக் கையெழுத்து, அச்சு வடிவான பல குர்ஆன் பிரதிகளை இங்கு காணமுடியும். இவற்றில் சில 19ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திற்கு உரியனவாகும். இவற்றில் ஒன்று 1800ஆம் ஆண்டுக்குரிய ஓர் அங்குலம் அல்லது அதற்கும் குறைந்த அளவிலான சிறு குர்ஆன் ஒன்றும் உண்டு.

அக்கரைப்பற்றுத் தக்கியா நகர் பக்கீர்களால் பாடப்பட்ட 1832ஆம் ஆண்டுக்குரிய கப்பப் பாடலும் இங்கு உண்டு. 18ஆம் அல்லது 19ஆம் நூற்றாண்டுகளில் பயன்படுத்தப்பட்ட பன ஓலையில் எழுதப்பட்ட மருத்துவக் குறிப்புகளும், மாயாஜாலக் குறிப்புகளும்கூட இருக்கின்றது.

உள்ளூர் வைத்தியர் ஒருவரான சின்னத்தம்பி பரிசாரியின் வைத்தியக் கையேடு உட்பட அக்கரைப்பற்று சிக்கந்தர் வடதனியின் மகன் முகம்மதுத் தம்பியின் வைத்திய அஸ்மா மறைந்த கையேடும் உண்டு. பல பிணி நீக்கும் அறிவுரைகள் இதில் உண்டு.

முற்கால முஸ்லிம் பெண்கள் அணிந்த பல சாரி வகைகளும் உள்ளன. மணப் பெண்கள் அணியும் 50 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த அரிதான வெல்வட் உடையும் (Jacket) உண்டு. முஸ்லிம் மணவாளன் அணியும் 19ஆம் நூற்றாண்டின் சாரமும் உண்டு. முஸ்லிம் விவசாயிகள் அணியும் சர்வாலும் உண்டு. நபிமார்களின் காலத்தில் ஆண்களும், பெண்களும் அணிந்த இவ்வகை உடுப்புகள் அரபிகளால் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டவை. சாரத்துடன் அணியும் இடுப்புவார் எனும் பட்டியும் உண்டு.

கறுப்புக் குஞ்சன் பூட்டிய சிவப்பு நிறத் துருக்கித் தொப்பி வகையும் உண்டு. இவை 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தவை. மிதியடி சோடியும் உண்டு. 1960ஆம் ஆண்டு வரை அணியப்பட்ட இவ்வகைப் பொருட்கள், 1980 தொடக்கம் பயன்படுத்தப்படுவதில்லை. முற்காலங்களில் முஸ்லிம் பெண்களால் அணியப்பட்ட மோதிரம், சிலம்பை, பாதசரம், அரைமுடி (சிறுமிகள் அணிபவை) 1960வரை பாவிக்கப்பட்டன, 1970களில் மறைந்துவிட்டன.

மணப்பெண் ஆசனம்

நாட்டு முஸ்லிம்களின் சமூக வாழ்வுடன் தொடர்புடைய பொருட்களும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மணவாளன், மணப்பெண் அமருவதற்கான சிம்மாசனம். மணவாளன், மணவாளிக்குப் பரிசுப் பொருட்களையும் ஆபரணங்களையும் அனுப்புவதற்கான பிரம்பாலான கட்டுப்பெட்டி. இப்போதும் பாவிக்கப்படக்கூடிய பன்னீர்ச் செம்பு.

நூற்றாண்டுகளுக்கு மேல் பழமைமிக்க பிறை. மலர் வடிவம் கொண்ட பீங்கான் வகைகள். திருமண வைபவங்களிற் பயன்படக்கூடிய சவன் வகைகள் சிவப்பு, மஞ்சள் பூக்களைக் கொண்டவை. தண்ணி வட்டிகள் நூற்றாண்டுகளுக்கு முன் திருமண வைபவங்களின்போது தண்ணீர் பகிரப்பாவிக்கப்பட்டவை. மருதமுனையில் பாவிக்கப்பட்ட கோப்பிக் குவளைகள், பாண் தட்டு (பனை ஓலையினால் இழையப்பட்டவை) சாம்பிராணிச்சட்டி, சுர்மாகூடு, இரவில் குர்ஆன் ஓதுவதற்குப் பயன்பட்ட அகல்விளக்கு, மந்திரப்பெட்டி வேளான்மையினைத் திருட்டில் இருந்து பாதுகாப்பதற்காகப் பாவித்தவை.

பழைய பூட்டுகள், சாவிகள், மான்கொம்பு வகைகள், சுவர் அலங்காரத்துக்கு உடுப்புகளைக் கொழுவி வைப்பதற்கான சட்டமைப்புகள்.

முஸ்லிம் காங்கிரஸ் தீர்வைத்தேடி வெளிநாடு செல்கிறது.

அதிகாரப் பரவலாக்கலைப்பற்றி கற்பதற்கு முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் 20ஆம் திகதி லண்டனுக்கு செல்லவுள்ளனர்.

1980களின் ஆரம்பத்திலிருந்தே அதிகாரப் பரவலாக்கல் பற்றி விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. இவ்வளவு காலமும் சும்மா இருந்து விட்டு, தற்போது முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகள் முஸ்லிம்களுக்கான தீர்வு தொடர்பாக மேலதிக அறிவைப் பெறுவதற்காக வெளிநாடு செல்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரஸ் அரசியல்வாதிகள் உலகம் சுற்றி அதிகாரப் பரவலாக்கலைப்பற்றி படித்துவிட்டு நாடு திரும்பும்போது நாட்டு நிலைமை வேறு விதமாக மாறாமல் இருந்தால் சரி.

பாடசாலை அபிவிருத்திச் சபைகள்

தேவையான விடயங்களில் தீர்மானம் மேற்கொள்ளும் அதிகாரத்தினை உறுப்பினர்களுக்கு வழங்கி; அதன் மூலம் பாடசாலை விவகாரங்களைச் சிறப்பாகவும், திறமையாகவும் நடாத்திச் செல்ல வழிவகுக்கும் அமைபே இச்சபைகளாகும்.

அதிகாரப் பகிர்வு கீழ் நிலையில் உள்ள மக்களுக்கு வலுவூட்டும் ஒரு கருதுகோளாகும். பெற்றோர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் என்போர் பாடசாலையின் நலனில் அக்கறை கொண்டவர்களாதலால் தமது பிள்ளைகளின் பாடசாலையினை நடாத்திச் செல்லுதல் பற்றி முடிவெடுக்க அவர்களுக்கு தற்றுணிவு அதிகாரம் வழங்கப்படுதல் நியாயமானதே.

இவர்கள் மேற்கொள்ளும் முடிவுகள் மத்திய அமைப்பில் இருந்து திணிக்கப்படும் தீர்வுகளை விட யதார்த்தமானதாக இருக்கும்.

பாடசாலை மட்டத்திலான முகாமைத்துவமானது, பாடசாலைகளை அபிவிருத்தி செய்யச் சிறந்த ஒரு வழிமுறையாகும் எனத் தேசியக் கல்வி நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது. அதிகாரம், பொறுப்புகள் போன்றவற்றை அவை தெளிவாகக் கூறவேண்டும்.

இச்சபையின் பொதுநோக்கங்கள்

+ பாடசாலைச் சமூகத்தினரிடையே சொத்து பற்றிய உணர்வை ஏற்படுத்தல்.
+ திட்டமிட்டபடியிலான அபிவிருத்தி
+ வளங்களை நன்முறையில் பயன்படுத்தல்
+ கல்வித்துறையில் தலையிட அதியுயர் சுதந்திரம்
+ பாடசாலை சமூக அமைப்புகள் என்பவற்றுக்கிடையில் ஒத்துழைப்புகள் விளைவாக சிறந்த பயன்களை பெறுதல்.
+ பாடசாலை - சமூக உறவினை உறுதிப்படுத்தல்

எதிர்பார்க்கும் விளைவுகள்

+ பாடசாலைக் கொள்கையினைத் தீர்மானித்துச் செயற்படுதல் தொடாபில் திறமை மிக்க ஒரு முகாமைத்துவக் கூட்டமைப்பை அபிவிருத்தி செய்தல்.
+ திட்டமிடல், கண்காணிப்பு, திட்ட அமுல் நடத்தல் போன்றன தொடர்பாகக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல்.
+ பாடசாலை - சமூகம் இடையில் கிட்டிய ஒத்துழைப்பை ஏற்படுத்துதல்.
+ அரசினால் வழங்கப்பட்ட வசதிகள் போதாதவிடத்து சமூக அமைப்பில் இருந்து வளங்களை பெறுதல்.
+ பாடசாலை அபிவிருத்தியினை ஒட்டுமொத்தமாக முன்னேற்றுதல்.
+ பிள்ளைகளின் தனித்திறமைகளை வளர்த்தல்.

தெரிவு செய்யப்பட்ட 80 பாடசாலைகளில் இது அமுல் நடாத்தப்படவுள்ளது.

ஒருவர் ஒரு கருத்தை சொல்லிவிட்டார் என்பதற்காக உங்கள் கருத்தை நீங்கள் சொல்லாமல் இருக்கலாமா?

நாம் எழுதுவதற்கும், நமது மக்களுக்குள் கருத்துக்களை பரிமாறிக் கொள்வதற்கும் விவாதங்களைத் தொடங்கவும், தொடரவும் தயாராகவுள்ளோம்! உங்கள் கருத்துக்களை சுருக்கமாக எமக்கு எழுதி அனுப்புங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானா மக்கீன் தருவது

40 வயதுக்குட்பட்டோரைத் தாக்கும் நோய்

40 வயதுக்குட்பட்டவர்களை அதிகம் தாக்கும் நோய்தான் "ஆஸ்டியோ ஆர்த்தரைடிஸ்" எனப்படும் கீழ்வாத நோய். கடுமையான இந்த நோய் ஏற்பட என்ன காரணம்?

நாசத்து மிகுந்த உணவு வகைகளை உணவில் சேர்த்துக் கொள்ளாமை.

புளிப்பு மிகுந்த உணவு வகைகளை அதிகமாக அடிக்கடி உண்பது. அன்றாடம் முறையாக உடற்பயிற்சி செய்யாமை.

வயது முதிர்ந்ததின் காரணமாக மூட்டுக்கள் தேய்ந்து போவது.

நாட்பட்ட மலச்சிக்கல்.

உடலில் ஏற்படும் சிலவகை நோய்களுக்கு சிகிச்சை எடுத்துக் கொள்ளாமல் அப்படியே விடுவது.

முழங்கை, முழங்கால், கணுக் கால், கைவிரல் மூட்டுக்கள், மணிக் கட்டு, விரல் மூட்டுக்கள் கழுத்து. இடுப்பு போன்ற இடங்களில் உள்ள எலும்புகள் போன்ற பகுதிகளில்தான் இந்தப் பாதிப்பின் தாக்குதல் ஏற்படும்.

இதன் அறிகுறிகள்?

எலும்பு மூட்டுக்களில் வீக்கமும், வலியும் இருந்து கொண்டேயிருக்கும். சில சமயம் காய்ச்சலும் அடிக்கும். பாதிப்புள்ள பகுதிகள் நன்கு சிவந்து காணப்படும்.

இதுபோன்று அவதிகள் ஏற்படும் போது நோயுற்றவர் முழுமையாக ஓய்வு எடுக்க வேண்டும். அப்படியின்றி மூட்டுப் பகுதிகளை அசைத்துக் கொண்டேயிருந்தால் வலி மேலும் கூடுவதுடன் மூட்டு இணைப்புகளில் உள்ள ஜவ்வுகள் தேய்ந்து விரல்களையோ, கைகால் மூட்டுக்களையோ நீட்டுவதும் மடக்குவதும் கூட கஷ்டமாக இருக்கும்.

எங்க ஊர் அங்கே!

வடபுலத்து நாகர் கோவிலும், வட மத்திய புத்தளமும் தமிழ் நாட்டு (கன்னியா) குமரி மாவட்டத்திலும் மத்திய ஊர்களாகத் திகழ்கின்றன! அதே போல் "பெருவிளை" பேருவளை (வோ்விலை)யை நினைவூட்டுகின்றது.

தமிழ் சின்னம் நூறு ஆண்டுகளில் அழிந்து போகும் என்ற பூச்சாண்டியை யுனிசெப் ஆய்வு அவிழ்த்து விட்டாலும் அதில் சில உண்மைகள் தொக்கி நிற்கின்றன.

அவற்றைப் பொய்யாக்கிப் பொசுக்கி விட சில நடவடிக்கைகள் சென்னையில் நடந்துள்ளன.

அதிலொரு அம்சமாக, இந்திய அரசு "தமிழ் மொழியை செவ்வியல் மொழி" என அறிவிக்கக் கோரி நாடாளுமன்றம் முன்பு ஒரு நூறு தமிழ் அறிஞர்கள் "பட்டினிப் போராட்டம்" ஒன்றை நடத்தினார்கள்.

தமிழைச் செம்மொழியாக்கப் பட்டினிப் போராட்டம்!

உலக அளவில் செவ்வியல் மொழி எனப் போற்றப்படுபவை தமிழ், கிரேக்கம், இலத்தீன், சீனம், எபிரேயம், சமஸ்கிருதம் ஆகிய ஆறு மொழிகள் என மொழி நூல் வல்லுநர்கள் கூறுகின்றனர். ஆங்கிலேயா ஆட்சிக் காலத்தில் சமஸ்கிருதம், பாரசீகம், அரேபியம் ஆகிய மொழிகள் செவ்வியல் மொழிகள் என அறிவிக்கப்பட்டன.

தமிழ்மொழிக்குச் செவ்வியல் மொழி உரிமை கோரும் களம் கி.பி. 1887 இல் பரிதிமாற் கலைஞராலும், அதன் பின்பு பேராசிரியா ஏ.கே. இராமானுசம், மாகறல் கார்த்திகேயன் முதலியாராலும் கமில் சுவலபில், வின்ஸ்லோ பாதிரியார் ஆகியோர்களாலும் வரையறை செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக செக் நாட்டு அறிஞா கமில் சுவலபில், சங்க இலக்கியத் தொகுப்பில் உள்ள 26.350 வரிகள் தமிழ் மொழி செவ்வியல் மொழி என்பதனை நிலை நிறுத்தப் போதுமான சான்று என எடுத்துக் காட்டியுள்ளார்.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்த டாக்டர் ஜாஹூர்ாட் எழுதிய கட்டுரையில் தமிழ் செவ்வியல் மொழி என்பதற்கான சான்றுகளைக் காட்டியுள்ளார். தமிழக அரசியல் கட்சிகள் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இக்கோரிக்கையை வலியுறுத்திப் பலமாநாடுகளும், கருத்தரங்குகளும் நடத்தி வருகின்றன.

நமது புத்தி ஜீவிகளும், அறிவு ஜீவிகளும் என்ன செய்து கொண்டிருக்கிறாகள். அல்லது என்ன செய்யப் போகிறார்கள் என்பது எனக்கு சத்தியமாகத் தெரியாது.

தந்தையை ஏலம் போடும் பெண்!

நீனா மெல்ஹம் என்ற 25 வயது கல்லூரி மாணவி நோர்வே நாட்டின் ட்ரான்ட்ஹீம் என்ற இடத்தைச் சோந்தவள். டிரைவரான 52 வயது தந்தை கிறிஸ்டியான் ஸெனுடன் வசிப்பவள். சமீபத்தில் இன்டர்நெட்டில் தன் தந்தையை ஏலத்தில் விட்டுள்ளார். இன்டர்நெட்டில் அவர் கூறியிருப்பது :

"என் 52 வயது தந்தை ட்ரிம்மர், ஸ்லிம்மாக இருப்பார். கொஞ்சம் மாநிறம். ட்ரான்ட் ஹீம்

நகரிலே வசிக்கும் நல்ல பெண்ணிற்கு தந்தையை கொடுக்க நினைக்கிறேன்.

"அவரோடு என்னால் சோ்ந்து இருக்க முடியவில்லை. அவரை அழைத்துச் செல்லும் பெண்ணிற்கு எங்கள் வீட்டு தளபாடங்கள் முழுவதும் இலவசம்!"

இது எப்படி இருக்கு?

சோபாக்காரர்கள் படுக்க ஒரு கதை

அவனுக்கு அன்று பத்தாவது இன்டர்வியூ இதிலாவது தனக்கு கண்டிப்பாக வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நேர்காணலுக்குச் செல்கின்றான்.

அந்த அலுவலகத்தில் இவனைப் போலவே இன்னும் நிறையப் பேர் வந்து காத்திருந்தனர். இவன் முறை வந்ததும் எழுந்து உள்ளே செல்கிறான். இன்டர்வியூ நடத்தும் அதிகாரிகள் இவனிடம் முதல் கேள்வியைக் கேட்கின்றனர்.

"இந்த வேலைக்காக மொத்தம் எத்தனை பேர் வந்து உன்னுடன் ஹாலில் அமர்ந்திருக்கின்றனர்?" "ச்சே இதெல்லாம் என்ன கேள்வி!" என்று மனதில் கோபம் வருகிறது. இருந்தாலும் அதை மறைத்துக் கொண்டு முகமலர்ச்சியோடு பணிவாக "தெரியவில்லை" பதில் சொல்கிறான்.

"சரி. நீ ஏறி வந்த மாடிப்படிகள் எத்தனை?" இதற்கும். "தெரியவில்லை" என்று அமைதியாகப் பதில் சொல்கிறான் மூன்றாவது கேள்வி கேட்கிறார்கள் – "சரி. நீ கீழே அமர்ந்திருந்த ஹாலில் எத்தனை ஜன்னல்கள் இருக்கின்றன?" இப்படி அவர்கள் உப்பு சப்பில்லாமல் கேட்ட எந்த கேள்விக்குமே அவனுக்குப் பதில் தெரியவில்லை" ஆனாலும் எல்லா கேள்விகளுக்கும் அமைதியாகப் பதில் தந்து விட்டு வீட்டுக்கு வருகிறான்.

இப்போது வீட்டில்தான் அவனது கோபம் தலைக்கேறுகிறது. "ச்சே.. என்ன கேள்வி கேட்கிறார்கள்? அவர்கள் தரப்போகும் வேலைக்கு சம்பந்தமில்லாத, எடக்கு மடக்கான கேள்விகள்! நாம் இவ்வளவு படித்தும் பட்டம் வாங்கியும் என்ன புண்ணியம்? இனி எனக்கு படிப்புக்குத் தகுந்த வேலை வேண்டாம். கூலி வேலை செய்தே பிழைத்துக் கொள்ளலாம். என்று கோபப்பட்டவன் ஏதோ ஒரு வேகத்தில் தனது சாட்டிஃபிகேட்களை எல்லாம் எடுத்து தாறுமாறாகக் கிழித்துப் போடுகிறான்.

அப்போதுதான் அவனது கோபம் அடங்குகிறது. ஆனால், விஷயம் அதோடு முடியவில்லை. மூன்றாவது நாளே அவன் விலாசத்துக்கு ஒரு பதிவுத் தபால் வருகிறது. வாங்கிப் பிரித்துப் பாா்க்கிறான். அதில் அவன் வேலைக்குச் சோ்வதற்கான அப்பாய்மெண்ட் ஆா்டரும் ஒரு கடிதமும் இருந்தன. கடிதத்தைப் படிக்கிறான்.

"தம்பி! நாங்கள் உப்புச்சப்பில்லாமல் கேட்ட எந்த கேள்விக்கும் நீங்கள் கோபப்படவில்லை. அமைதியாக இருந்தீர்கள். நீங்கள் பாா்க்கப் போகிற எங்கள் கம்பெனியின் ரெப்ரசன்டேட்டிங் வேலைக்கு பொறுமைதான் முக்கியம். பலரும் பல மாதிரியாக உங்களிடம் பேசுவாா்கள். அவா்களிடமெல்லாம் கோபப்படாமல் சமாளித்தால்தான் எங்கள் கம்பெனி பொருட்களை உங்களால் சுலபமாக விற்பனை செய்ய முடியும். எனவேதான் பொறுமைசாலியாக உங்களை இந்த வேலைக்குத் தோ்ந்தெடுத்தோம். உடனே சாா்ட்டிஃபிகேட்களுடன் வந்து பணியில் சேரவும்" என்று அந்தக் கடிதத்தில் எழுதியிருந்தது. இப்போது அந்த இளைஞனுக்கு வேலை ரெடி! ஆனால், அவா்கள் கேட்கிற சா்ட்டிஃபிகேட்கள் இல்லை! பாவம் இந்த வேலையையும் அவன் இழந்து விட்டான்.

சிறுகதை

அட்டைகள்

'மருதமுனை மஜீட்'

மம்மறான் தண்டையல் அதிகாலை நாலரை மணிக்கெல்லாம் படுக்கையில் இருந்து எழுந்து விடுவார். பல் விளக்குவார். முகம் கழுவுவார். அடுப்பை மூட்டி தண்ணீர் பானையை ஏற்றுவார். சரியாக ஐந்து மணிக்கு அவர் மனைவி மீரா நாச்சி விழித்துக் கொள்வாள். தனது கணவன் கடலுக்குச் செல்ல வேண்டிய ஆயத்தங்களைச் செய்வாள். முதலில் அடுப்பில் கொதிக்கும் சுடுதண்ணீரில் இஞ்சைத் தட்டிப் போட்டு நல்ல "பிளேன் ரீ" தயாரித்து அவருக்கு கொடுத்து விட்டு தானும் வாயைக் கழுவிக் கொண்டு ஒரு கோப்பை தேநீர் அருந்துவாள். அதன் பிறகு வட்டாவை எடுத்து தான் படுத்த பாயில் இருந்து கொண்டே நல்ல நல்ல கொட்டைப்பாக்காகத் தெரிவு செய்து, பாக்கு வெட்டிக்குள் வைத்து 'கடிக் கடிக்' கென்று வெட்டுவாள். தானும் ஒருவாய் தாம்பூலம் போட்டுக்கொண்டு தன் கணவனுக்கு பகல் முழுக்க மெல்லுவதற்காக வெற் நிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆகியவகை நாக்களை அளவாக எடுத்து பேப்பரில் பாா்சலாக சுற்றிக் கட்டி வைப்பாள். ஐந்தே கால் மணிக்கு சுபஹுக்கு அதான் சொல்லும் சப்தம் கேட்கும். மம்மறான் தண்டையல் 'சுபஹுத் தொழுகைக்கு பள்ளிக்கு போகமாட்டாா். தனது வீட்டிலே முஸ்லாவை விரித்து தொழுது கொள்வாா். இதற்கிடையில் மீராநாச்சி ராத்திரி பானையில் தண்ணீா் ஊற்றிக் குளிர வைத்திருந்த பழைய சோற்றை அகப்பையால் கிண்டி பீங்கானில் ஊற்றி எடுப்பாள். சின்ன வெங்காயப்பற்கள் இரண்டை உரித்து அதனுள் போட்டு வைப்பாள். மம்மறான் தண்டையல் வெங்காயத்தில் ஒரு கடி கடித்துக் கொண்டு தண்ணீா் சோற்றை உறுஞ்சிக் குடிப்பாா். அந்த நேரத்திற்கு அது தேவாமிா்தமாக இருக்கும். தன் மனைவிக்கு மீதிச் சோற்றில் கொஞ்சம் வைத்து விட்டு வாய் நிறைய வெற்றிலையைக் குதப்புவாா்.

நெடிய சிறுவால். அதற்கு மேல் பிஜாமாச் சாறன். வட்டக்கழுத்துச் சட்டை ஆகியவற்றை அணிந்து கொண்டு கடற்கரைக்குப் போகப் புறப்படுவாா். வாசலில் சுவரோடு சாய்ந்து வைத்திருக்கும் கறுத்த றான மரக் கம்பை வலது தோளில் தூக்கி வைத்துக் கொள்ள அவருடைய இல்லக் கிழத்தி மீராநாச்சி நேற்றுப் பின்நேரம் பீய்த்தல் பொத்தி வைத்திருந்த மடியை அந்தக் கம்பில் முன்பக்கம் கொழுவி விடுவாள். பின் பக்கத்தில் கரை வலைத் துண்டுகளைக் கொழுவுவாள். மணி ஆறாகி விடும். சரியாக அந்த நேரத்தில் மம்மாக்கா் வந்து வாசல் படலையை தட்டிக் கொண்டிருப்பான். அவன் நெடுங்காலமாக மம்மறான் தண்டயலின் தோணியில் மன்றாடியாக உழைத்து வருபவன்.

அன்றும் நான் போய்வாறன் புள்ளே..... என்று தண்டயல் தன் மனைவியிடம் விடைபெறும் போது அவள் முற்றத்திற்கு ஓடி வந்து முக்காட்டை வலக்கி பளிச்சென்று முகத்தைக் காட்டி சிரித்துக் கொண்டே விடை கொடுத்தாள். படலையில் தட்டும் சத்தம் கேட்டது. மம்மாக்கா் வந்து விட்டான். அவன் வந்தால் சும்மா நிற்கமாட்டான். நல்ல நாட்டுக் கவி ஒன்றை இராகம் எடுத்துப் படித்துக் கொண்டிருப்பான். அல்லது உதட்டைக் குவித்து விசில் அடித்துக் கொண்டிருப்பான். இன்று அவனிடம் இருந்து இரு சத்தமும் கேட்கவில்லை. தண்டையல் ஆச்சரியப்பட்டாா்.

"மம்மாக்கா் என்னடா..... இண்டைக்கு பாட்டு... பதம்.... ஒண்டையும் காணல்ல.... ஊட்ட சண்ட கிண்ட....."

"அதெல்லாம் இல்ல தண்டயல்... வயிறு நெறஞ்சாத்தானே பாட்டும் வரும்.... பதமும் வரும்.." மேலே தண்டயல் ஒன்றும் பேச வில்லை. அவனுடைய கதையில் உள்ள உண்மையை உணா்ந்து கொண்டவா் போல மௌனமானாா்.... நாலு மாதத்திற்கு மேலாகி விட்டது. ஒரு மீன் குஞ்சு பட்டு. தொழிலாளாா்கள் என்ன செய்வாா்கள். எல்லோரும் அரைப்பட்டினி. கால் பட்டினி. இருபத்து நாலு போ் அவருடைய தோணியில் வேலை செய்கிறாா்கள். ஒவ்வொருவருடைய பெண்சாதி பிள்ளைகள் என்று கணக்குப் பாா்த்தால் நூறு பேருக்கு மேலே அந்தந் தோணியையும் கடலையும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறாா்கள். நாலு மாதமாக ஒரு சதம் வருமானமில்லை. மீன் பிடி இல்லாவிட்டாலும் கடன் பட்டாவது தொழிலாளரைப் பாதிக்குப் பக்கமாகவாவது தாபரிக்க வேண்டியது தண்டயலின் கடமை. இல்லாவிட்டால் வேறு தோணிகளுக்குப் போய் விடுவாா்கள். பிறகு வேலைக்கு ஆள்பிடிப்பது ரொம்பக் கஷ்டமாகி விடும். வெளிநாடொன்று வந்து 'குஞ்சி நின்று குரல்' போக வெளிநாடு சென்றுவிட்டாா்கள். அதனால் ஊரில் கூலிக்கு ஆள்பிடிப்பது கஷ்டமாகிவிட்டது.

நீண்ட மௌனத்தின் பின்னா் தண்டையல் "நீ.... மண்டாடி.... உனக்குத்தான் இந்தத் தொழிலில் நீட்டு முடக்கெல்லாம் நல்லாத் தெரியும். பொறுமையாக இருக்க வேணும்...."

"என்ன பொறுமையும்... சிறுமையும் தண்டையல்... எல்லாத்துக்கும் ஒரு எல்லை இருக்கி... பிள்ளைகள் பட்டினியால் கெடந்து சாகுதுகள்..."

மம்மாக்கா் விரக்தியாக கதைத்தான்.

"நீ மனசை உட்டுட்டாய் போல இருக்கி... சாப்பிட்டாயா...?

தண்டையல் அனுதாபத்துடன் கேட்டாா். "ஓம் தண்டையல்... சாப்பிட்டென்.... அரணாணியோடு சாப்பிட்டென்" மம்மாக்கா் எல்லாத்துக்கும் "அல்லாஹ்" இரிக்கான். ஒவ்வொருவருக்கும் அவன் அளந்த நிஸ்கை கொடுத்தே தீருவான்.... நம்மட கடலிருக்கே.... அது "அல்லாஹ்ட வேங்கு..." ஒரு நாளக்கி "அல்லாஹ்" கண் தொறந்தா போதும். நம்மட பஞ்சமெல்லாம் பஞ்சாய்ப் பறந்து போகும்..."

மன்றாடி இது பற்றி மேலே பேச விரும்பவில்லை "அல்லாஹ்" போ் வந்திற்று. அதற்கும் அப்பால் என்ன பேசக்கிடக்கு.

இருவரும் பேசிக் கொண்டே கடற்கரைக்கு வந்து சோ்ந்து விட்டாா்கள். இளைய சூரியன் பிரகாசமாக அடிவானத்தில் இருந்து இவா்களை வரவேற்றுக் கொண்டிருந்தான். காலை ஆறுமுப்பது மணி.

அலைவாய்க் கரைக்கு கால் கழுவச் சென்ற ஒருவன் "தண்டையல்.... தண்டையல்..." என்று கத்தினான். தண்டையல் எழுந்து நின்று நெற்றியில் கைவைத்து சூரியக்கதிா்கள் முகத்தில் படாதபடி மறைத்துக் கொண்டு கடலைப் பாா்த்தாா். பெரிய பாரைச்சிவப்பு.... மகிழ்ச்சி பிடிபடவில்லை....

பாரக்கிளை.... எடுங்கடா... தள்ளுங்கடா தோணியை.... என்று மன்றாடியம் தண்டயலும் ஒருமிக்கக் கத்தினாா்கள்.

"தள்ளுங்கடா....."

"ஓடியல.... ஊம்.... தள்ளுங்க"

"ஓடியல.... ஏலேலோ.... ஓடியலே.... ஓடியல....

தோணியின் முன்பக்கம் ஒருவன் தனது முதுகைக் கொடுத்து தம் பிடித்துத் தள்ளினான்.

ஏலே லோ... ஓடியலெ...

ஈய்யா... இய்யா... ஓடியலெ...?

"ஏலாவெட்டி ஈய்யா..."

ஆராவெட்டி.. ஈய்யா...

"வட்டக் களஞ்சி இய்யா...."

"இய்யா.. இய்யா..."

ஒவ்வொரு இய்யாவுக்கும் ஒவ்வொரு அடி தோணி கடலை நோக்கி நகா்ந்தது.

"ஓடியலே... ஏஏஏ...ஏ...ஏ..."

கடலுக்குள் தோணி இறங்கிவிட்டது. தண்டையலும் மன்றாடியும் இன்னும் இரு தொழிலாளரும் தோணியில் தாவி ஏறிக் கொண்டனா். பாரக் கிளையை வைத்து மெள்ள மெள்ள வலையை இறக்கிய வண்ணம் தோணி வளைந்து வந்தது. எல்லாரும் மௌனமாகப் பிராா்த்தித்தனா். "நாலு மாதத்துக்குப் பிறகாவது அல்லாஹ் ஒரு மீன் சிகப்பை காட்டியிருக்கான்... ஒரு மீனும் தப்பாம்ல் மடிக்குள் ஏறிட்டவேணும்...."

வலைக்கால் இரண்டிலும் பத்துப்பத்துப் பேராகச் சோ்ந்து கொண்டாா்கள். வலையை மெள்ள மெள்ள இழுக்கத் தொடங்கினா். தோணியில் இருந்தவா்கள் கரையைப் பாா்த்து கூச்சலிடுவதும். வலையை இழுக்குமாறு சைகை காட்டுவதுமாக இருந்தாா்கள். மன்றாடியின் குரல் கம்மி விட்டது. அத்தனை கத்தல்... மழைக்காலங்களில் ஆலா வானத்தில் சிறகை விரித்துக் கொண்டு நிற்பது போல மன்றாடி... அவன் மட்டும்தான் அப்படி அலைகள் தூக்கியடிக்கும் தோணியில் பற்றுக் கோடு எதுவுமின்றி கைகளை அகல விரித்தபடி நிற்க முடியும். வலை இழுப்பவா்களுக்கு "ஜெது" வேக வேகமாக இழுத்தாா்கள்.

"ஏலேலோ.... வலை...."

"ஏலேலோ.... வலை...."

"ஓவேலோ.... வலை...."

"ஐயோடா.... வலை...."

"ஆடோடா.... வலை...."

"சாலுவகாட்டுறான் தண்டையல்...."

"சள்ளையும் தள்ளிட்டான் தண்டையல்"

"அள்ளி இழுங்கடா தம்பிகாள்...."

"அல்லாஹ்வும் நாடிட்டான் தம்பிகாள்..."

"ஏலேலோ... ஓவேலோ வலை..."

"பொத்தி இழுங்கடா சள்ளையை.."

"வெற்றி நமக்கு அள்ளுடா..."

"ஏலோலோ.... ஓவேலோ வலை..."

"ஐயோடா வலை..."

"ஆடோடா வலை.."

ஒருவா் மாறி ஒருவா் அம்பாச் சொல்லிக் கொண்டே மிக உற்சாகமாக வலை இழுத்தனா். தரையில் வலை குவிந்தது. சூரியன் அடிவானத்தில் இருந்து இரண்டு மீற்றா் உயரத்துக்கு வந்து விட்டான். ஏறுவெயிலில் தொழிலாளாின் கண்கள் கூசின. ஆளுக்கு ஆயிரம் ரூபாவாவது இன்றைக்கு கிடைக்கும் என்று ஒவ்வொருவரும் நினைத்தனா்.

அருகில் இருந்த தென்னந் தோப்புக்குள் சட்டை தொப்பிக்காரா் சிலா். பழைய பள்ளி மரைக்கா்... பென்சன் எடுத்த விதானை... இரண்டு மூன்று ஜேபி மாா்... சில ஆலிம்கள்... இவா்கள் தோணிவலையுடன் உழைக்கும் இருபத்தைந்து தொழிலாளா்களின் உழைப்பை உறிஞ்சும் அட்டைகள். ஓசி மீன் தேடி வந்தவா்கள். வந்தாலும் சும்மா இருக்கமாட்டாா்கள். ஜனாதிபதியைப் பற்றி பேசுவாா்கள். லஞ்சம் வாங்கும் கிராம சேவகா்கள் பற்றி அளப்பாா்கள். புதிதாக வீடு கட்டும் ஒருவனுக்கு பணம் எப்படி வந்தது என்று கணக்கெடுப்பாா்கள். அரட்டைக்காரா்கள். அவா்களால் அலசப்பட்டு கழுவப்படாத இரகசியங்களும் இல்லை. பரகசியங்களும் இல்லை.

"நம்மட கடலில் மீன்பட்டு நாலு மாசமாப் போச்சி..."

ஒருவரின் ஆதங்கமே இது

"நாலஞ்சி மாசமில்லை.. நாலஞ்சி வருசமானாலும் இவனுகளுக்கு மீன் படாது... அல்லாஹ்ட கோபப் பாா்வை... இவனுகளுக்கிட்ட தா்மம் இல்ல... சந்தோசமா ஒரு கறிக்கு மீன் தருவானுகளா...?

இப்படி அலசிக் கொண்டிருந்தாா்கள்.

ஆயிற்று. வலை கரையேறிற்று. மடியை எல்லோரும் சோ்ந்து இழுத்துக் கரைக்குக் கொண்டு வந்தாா்கள். அவ்வளவுதான்... எல்லோருடைய முகங்களும் பேயறைந்ததுபோல... மடி நிறைந்துதான் இருந்தது. மீனைக் காணவில்லை. அவ்வளவும் கடல் வழு... ஏமாற்றம்... சில தொழிலாளா்கள் இடுப்பொடிந்தவா்கள்போல கரையில் விழுந்துவிட்டனா்.

தோப்புக்குள் இருந்த சட்டைத்தொப்பிக்காரா் இருந்த இடத்திற்கும் தெரியாமல் நழுவிவிட்டனா். வழுவை வெளியேற்றி மடியை துப்பரவு செய்தனா். உள்ளே இருபெரிய பாறை மீன்கள். ஒவ்வொன்றும் 8 கிலோ தேறும். தூக்கி வெளியே போட்டாா்கள். வியாபாரிகள் 3000 ரூபா வரை விலை பேசிக்கொண்டிருந்தாா்கள். ஒரு தொழிலாளிக்கு 100 ரூபாயாவது கூலிகொடுக்கலாம் என்று தண்டயல் தீா்மானித்துக் கொண்டாா்.

தூரத்தில் ஒரு மோட்டாா் சைக்கிள் வந்து நின்றது. ஊரில் உள்ள ஒரு பெரிய முதலாளி ஒருவா் இறங்கிவந்தாா். மீன் படாத நாட்களில் தொழிலாளரை தாபரிக்க இவா்தான் தண்டையலுக்கு கொமிஸனுக்குப் பணம் கொடுப்பவா். முதலாளியைக் கண்டதும் மம்மறான் தண்டையலுக்கு திக்கென்று இருந்தது.

"தண்டையல்..." மோட்டாா் சைக்கிளில் வந்த முதலாளி அழைத்தாா். அவா் ஒரு பேச்சும் பேசவில்லை. சாக்கஸ் யானை போல மெல்ல நடந்துசென்று முதலாளியின் முகத்தைப் பாா்த்தாா்.

"இண்டைக்கி கண்டியில் இருந்து 5 போ் ஆக்கள் வீட்டுக்கு வாறாங்க... அவங்களுக்குச் சாப்பாடு... ஒரு பாறமீனைத் தரவேணும். தண்டையலுக்குப் பேச்சுவரவில்லை. முடுக்கிவிடப்பட்ட இயந்திரப் பாவைபோல திரும்பிவந்தாா். ஒரு மீனைத்தூக்கி முதலாளியிடம் கொடுத்தாா். எல்லாருடைய கண்களிலும் ஏக்கம்.

மண்றாடிக்கு இரத்தம் கொதித்தது. ஆத்திரம் தாங்கமுடியவில்லை. களைத்து மணலில் மல்லாந்து கிடந்தவன் முதலாளியிடம் சென்றான். தொழிலாளரும் அவனைத் தொடா்ந்தனா்.

"முதலாளி... நாலு மாசமாக நாங்க இந்த கடலை நம்பி பட்ட பாட்டுக்கு அல்லாஹ் இன்டைக்குத்தான் இந்த மீன் இரண்டையும் தந்திருக்கான். எங்கள் கொஞ்சம் இரக்கம் வைங்க... மீன் உங்களுக்குத்தான்... ஆனா... விலையைக் கொடுத்துட்டுக் கொண்டு போங்க....""

முதலாளியல்லவா... இரக்கம் வருமா... "எனக்கு மீன் தராட்டா... இந்த மாசக் கொமிஸனத்தாங்க... என்று வாதாடினாா்... மண்றாடியும்... தொழிலாளரும் தண்டயலைக் கவனிக்கவில்லை... ஆத்திரம். ஒரு உதை. முதலாளியின் மோட்டாா் சைக்கிள் விழுந்து கிடந்தது. முதலாளி தூரத்தில் ஓடிக்கொண்டிருந்தாா்.

யாவும் கற்பனை.

முஸ்லிம் சமுகத்தின் கன்!

முஸ்லிம் குரலே
உன் வருகையே
முஸ்லிம் சமுகத்தின் கண் முஸ்லிம்
குரலே நீ
இல்லை என்றால்
முஸ்லிம்களின் உரிமை
சந்தோசம் காணாது

எல்லோா் கையிலும்
உன் பிறப்பு
முஸ்லிம் என்ற காவியம்
கற்றுத் தருகிறது
வந்து விடு ஒவ்வொரு இதழும்

நான் எனது உயிா் மூச்சை
சுவாசிக்க மறந்தாலும்
எனது இனிய சுவடு
முஸ்லிம் குரலை மறக்க மாட்டேன்.

M.U. புகாரி
தரம் 8 (ஏ)
மட/ ஓட்டமாவடி தேசிய பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜே.வி.பி. இலங்கையின் வரலாற்றை மீண்டுமெழுத முயல்கிறது.

அரசாங்கம் ஜே.வி.பி. இன் நிபந்தனைகளின்படி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டுமென்றும் அன்றேல் அரசாங்கத்தை துரத்தி விட வேண்டுமென்றும் ஜே.வி.பி. கூறியுள்ளது. நாட்டின் மொத்த தேசிய வாக்குகளில் 10 வீதத்திற்குக் குறைவான வாக்குகளைப் பெற்றுள்ள ஒரு கட்சியின் இத்தகைய கோரிக்கை வியப்புக்குரியது.

தான் இந்நாட்டின் தேசிய நலனில் அக்கறை கொண்டுள்ளதாகவும் அதன் அடிப்படையில் அரசாளும் கட்சியின் செயல்களைப்பற்றித் தீர்ப்புக்கூறத் தனக்கு உரிமையுள்ளதாகவும் ஜே.வி.பி. கூறுகிறது.

ஆட்சியில் உள்ள ஐ.தே. முன்னணி நாட்டை ஆள்வதற்காக ஓர் உறுதியான ஆணையினை அண்மையில் தான் பெற்றுக்கொண்டது எனவும் ஜே.வி.பி. கூறுகிறது.

ஒருவரின் தேசப்பற்றினை அளவிடக்கூடிய அளவு இல்லை/கருவி இல்லை. உலக நாடுகள் பலவற்றையும் இந்நாட்டின் தலைவர்கள் பலரையும் ஒப்பிட்டுப் பார்ப்பின் தேசப்பற்றை அளவு ரீதியாகக் கணிப்பீடு செய்ய முடியாது என்பது தெளிவு.

ஜனநாயகம். பிரதிநிதித்துவ ரீதியிலான அரசாங்கம் என்பன ஆச்சரியமான கருதுகோள்களாகும். முழு உலகினதும் அங்கீகரிப்புக்குள்ளான அரசாங்க முறையொன்றை ஸ்தாபிப்பது முடியுமா என யாம் அறியோம். ஆனால் பிரதிநிதித்துவ அரசாங்க முறையானது ஆளப்படுபவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றனவையாக இருக்கும். மக்கள் விரும்பாதபோது ஒதுக்கப்படலாம். மக்களால் இப்படி மாற்றப்பட முடியாத பல அரசாங்கங்கள் உலகில் உள்ளன. ஜனநாயகத்தின் கீழ் பின்வரும் வாய்ப்புகளும் உள்ளன. பேச்சு உரிமை. அறிக்கை விடும் உரிமை. ஆர்ப்பாட்ட உரிமை. வேலை நிறுத்த உரிமை. அரசியற் கட்சிகளை அமைப்பதற்கான உரிமை. தொழிற்சங்க நடவடிக்கை உரிமை. இந் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காகச் சுதந்திரமான நீதிமன்றுகளின் பாதுகாப்பை நாடும் உரிமை போன்றன உள்ளன. உலகில் எந்த ஒரு சோஷலிஸ நாட்டிலும் இத்தகைய உரிமைகளைக் காண முடியாது.

சோஷலிஸ நாடுகளில் இருக்கின்ற நடைமுறையினை எதிர்க்கும் ஒருவர் உடனே சிறையில் தள்ளப்படுவார். அல்லது தனியிடத்தில் வைத்துப் பூட்டப்படுவார். எதிர்த்தவர் முற்றாக மறைந்து போகும் நிலையும் உண்டு. சில சமயம் ஆட்சியாளர்களின் விருப்பப்படி வரலாறு மீள எழுதப்பட்டதுமுண்டு.

ஜே.வி.பி. என்பது ஒரு சமதர்மக்

சமரசம்

ஆங்கில ஊடகங்கள்

தமிழில் : முஹம்மட் மதனி

கட்சியாகும். ஜே.வி.பியைப் பொறுத்தவரையில் மக்களது ஆணையோ வாக்காளனின் விருப்புரிமைகளோ முக்கியமானதன்று. ஆட்சியதிகாரம் என்பதே அவர்களது ஒரே அவா. அது எப்படிப் பெறப்பட்டது என்பதன்று. அவர்கள் பதவியேற்றபின் எல்லாப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும். சோசலிஸ நாடுகளில் பலியானவர்களின் கல்லறைகள் எமக்குப் பகட்டும் கசப்பான பாடங்களை நாம் இலகுவில் மறந்து விடமுடியாது. கம்யூனிஸ, பாசிச நாடுகளின் வரலாறுகள் எமக்குப் பாடம் புகட்டுகின்றன.

இனப்பிரச்சினையைத் தம்மால் தீர்க்க முடியும் எனக்கூறும் ஜே.வி.பி. யினரிடம் ஆட்சியதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எவ்வளவு தூரம் செயலில் சாத்தியமாகும்?

ஜே.வி.பி. சிறுபான்மையினரின் ஆதரவைப் பெற்றில்லை. சிங்கள ஆதிக்கவாதிகளின் வெளிப்பாடே ஜே.வி.பி. எனச் சிறுபான்மையினர் கருதுகின்றனர். சிறுபான்மையினரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரேவழி அடக்குமுறைதான் என மாக்ஸியவாதிகள் கருதுகின்றனர். சரியான தகவல்களை வைத்துத் தீர்மானிக்காத. யதார்த்த ரீதியற்ற கொள்கைகளின் அபாயத்தன்மை குறித்து இந்நாட்டின் முதிர்ச்சியுள்ள வாக்காளன் உணரத்தவறமாட்டான்.

சர்ச்சைக்குரிய விடயங்களில் ஒரு கட்சி என்ன நினைக்கிறது என்பதல்ல முடிவு. எதிர்ப்பக்கத்தின் கருத்துகளுக்கும் உணர்வுகளுக்கும் உரியபடி மதிப்பு அளிக்கப்படுதல் வேண்டும்.

கலந்துரையாடலின்போது சிறு கட்சிகளுக்குச் சந்தர்ப்பம் வழங்கப் பெரிய கட்சிகளும், பலம்மிக்க கட்சிகளும் தயாராக இருத்தல் வேண்டும். பொருத்தமான முடிவு என்பது அங்கு வெற்றி பெற்றோர்களோ, நஷ்டமுற்றோர்களோ இரார். வெற்றிகரமான பேச்சுவார்த்தையின் பின்னர் பயன்கள் தொடக்கத்தில் விளங்கமாட்டாது.

பேச்சுவார்த்தையின்போது நாம் சிற்சில சலுகைகளை மறுபுறத்துக்கு இணங்க விட்டுக் கொடுத்துவிட்டால் நாம் நஷ்டவாளிகள் என ஜே.வி.பி. யினர் கூறுகின்றனர். ஆகக்குறைந்த அளவிலான சுயாதீனத்தை 1970 களில் நாம் கொடுத்திருந்தால் இன்று ஒரு முன்னேறிய நாடாக இருந்திருப்போம். அதனை செயற்படுத்துவதற்குரிய அறிவோ, உணர்வோ அன்று எம்மிடம் இருக்கவில்லை. அந்த அறிவும், உணர்வும் ஜே.வி.பி. யிடம் இப்போதேனும் கிடையாது. ஐ.தே.மு. தலைமையிலான அரசைத் துரத்திவிடும் அச்சுறுத்தலின் அடிப்படை யாது?

ஜே.வி.பி. க்கு அதனைச் செயற்படுத்த முடியாத போதிலும் அந்த அச்சுறுத்தலின் பின்னணியினை நோக்குதல் பொருத்தமானது. ஜே.வி.பி. 1987 இந்திய இலங்கை ஒப்பந்தத்தின்போதும் இப்படியே கர்ஜித்தது. அக்கட்சி அரசாங்கத்துடன் கொள்கை அடிப்படையில் முரண்பட்டது என்பதற்காக ஆளும்கட்சியை வெளியேற்றுவதற்கு ஜே.வி.பிக்கு உரிமையில்லை. அவ்வாறு வெளியேற்ற நினைப்பது; ஜனநாயகக் கொள்கைகள் பற்றிய அதன் அறிவீனத்தையும், பொதுசன அபிப்பிராயத்தை மதியாமையின்மையையுமே காட்டுகிறது.

அதிகாரப் பகிர்வுப் பொதியில் சில விடயங்கள் மக்கள் முன் கருத்தறிவதற்காக வாக்குக்கு விடப்பட வேண்டுமென மீயுயர் நீதிமன்றம் தீர்மானிக்கலாம். இவ்விடயத்திலேயே ஜே.வி.பி. தலைகாட்டித் தனது வாதத்தை மக்கள் முன்வைக்க வேண்டும் அல்லது அடுத்த தேர்தல் வரை பொறுத்திருக்க வேண்டும். ஜனநாயகம் இவ்வாறுதான் செயற்படுகிறது. எனவே சட்டத்துக்கும், விதிகளுக்குமேற்ப நடந்துகொள்ளத் தெரிந்திருத்தல் முக்கியமானது.

நாட்டின் இரு பெரும் ஜனநாயகக் கட்சிகளும் இவ்விடயத்தில் கறைபடிந்த வரலாற்றையே கொண்டுள்ளன. ஆனால் இதற்காகச் ஜனநாயக வழிமுறைகளை ஒதுக்கிவிட்டு ஜே.வி.பி விடுக்கும் அழைப்புக்கேற்ப இருட்சூழ்ந்த பாதையில் செல்ல முடியுமா? ஆகவே பிள்ளையைக் குளிப்பாட்டிய அழுக்கு நீருடன் பிள்ளையினையும் தூர எறியக்கூடாது.

ஜனநாயக வழிமுறையில் எத்தகைய குறைபாடுகள் நிலவிய போதிலும் மக்களுக்கு ஆட்சியை மாற்றவும், தமது கருத்துக்களைத் தெரியப்படுத்தவும் முடியும்.

இந்தச் சக்தியினை விட்டுக் கொடுக்கக்கூடாது. ஜனநாயக அமைப்பில் உள்ள குறைகளைக் களைய வேண்டுமேயொழிய அந்த அமைப்பினை ஒதுக்கிவிடக்கூடாது. ஆகவே ஜனநாயக அமைப்பின் கொள்கைகள் பற்றிய எமது அறிவீனத்தைத்தான் துரத்தியழிக்க வேண்டுமே தவிர சுய லாபத்துக்காக அந்த ஜனநாயக அமைப்பை நசுக்கி விடக்கூடாது.

வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை கவனிக்கப்பட வேண்டிய சில விடயங்கள்

இலங்கையின் சமாதான முன்னெடுப்புகள், வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபை விடயமாக இடைநிறுத்தம் கண்டுள்ளன. இச்சபைகள் விடயத்தில் அரசாங்கம் ஒரு பொருளாதாரக் கட்டமைப்பை மனதிற் கொண்டுள்ள அதேசமயம், புலிகளோ அச்சபைகள் தம்கட்டுப் பாட்டின் கீழுள்ள ஒரு அரசியற் சக்தியாகவேயிருக்க வேண்டுமென விரும்புகின்றனர். இக்காலகட்டத்தில் இரு மாகாணங்களும் தமது முழுமையான கட்டுப்பாட்டில் வரவேண்டுமெனவே புலிகள் எதிர்பார்க்கின்றனர்.

தமது கோரிக்கைகள், முன்மொழிவுகள் போன்றன தொடர்பால் புலிகள் உச்ச தயார் நிலையிலும், உறுதியான அடிப்படையிலும் செயற்படுவதைக் கவனிக்கலாம்.

அரசாங்கம் சமாதானம் என்பதன் பின்னணியில் பொருளாதார விருத்தியை மனதிற் கொண்டு செயற்படுகிறது. சமாதான முன்னெடுப்பில் அதி அக்கறை காட்டிச் செயற்படும்படி சர்வதேச நிறுவனங்கள் புலிகளை வலியுறுத்துகின்றன.

புலிகள் மீண்டும் போர்ப்பாதைக்கு செல்வதை ஐ.அமெரிக்கா உட்பட பல நாடுகள் விரும்பமாட்டா. புலிகளின் நிதி சேகரிக்கும் செய்கைகள் மேற்கு நாடுகளிலும், அவற்றின் நேச நாடுகளிலும் நடைபெறுவதாலும் இலங்கை அரசுடன் சமாதான முறையில் முடிவுகளுக்கு வருமாறும் இந்நாடுகள் வலியுறுத்துதலை புலிகள் உதாசீனம் செய்ய முடியாது. இது தொடர்பாக ஜப்பானும் அண்மையில் முன்வந்து சமாதானத்தை வலியுறுத்தியதைப் புலிகள் கவனித்தல் வேண்டும்.

இந்தியாவும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக வித்தியாசமான கருத்தைக் கொண்டிருந்தாலும் அவை புலிகளுக்கு உதவ மாட்டா.

இலங்கையின் படைகளை நவீனகரமாக்க அமெரிக்கா, இந்தியா, பர்கிஸ்தான் போன்ற நாடுகள் உதவ்வதாகக் கூறப்படுகின்றது. புலிகளோ தம்மீது விதிக்கப்படும் சர்வதேச அழுத்தங்களையிட்டு கவனஞ் செலுத்துவதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கின்றனர். ஆகவே. ஒரு வகையான இடைக்கால நிர்வாக சபை முறையினை ஏற்கும் படி புலிகளை வற்புறுத்துவதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாடுகள் மீது தங்கியிருப்பது ஏற்றுக் கொள்ளத்தக்கதே.

எதிர்ப்புகள்

புலிகளின் கட்டுப் பாட்டின் கீழ் இடைக்கால நிருவாக சபை அமைப்பு அமைவதை ஈ.பி.டி.பி. ஈ.பி.ஆர்.எல்.எப். பிளாட் போன்றன எதிர்க்கின்றன. ரீ.என்.ஏ. அமைப்பு புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இச்சபை வருவதை ஏற்கின்றது. நாட்டின் தென்பகுதியில் ஜே.வி.பியும் சில சிங்கள தேசிய இனக் குழுக்களும், புலிகளுக்கு எவ்வித சலுகைகளும் வழங்கப்படுவதை எதிர்க்கின்றன.

மக்கள் கூட்டு அமைபோ பி.ஏ. அதிகாரப் பரவலாக்கத்தை எதிர்க்காதபோதிலும், தொட்சி நிபந்தனையாகப் புலிகள் வன்முறையினைப் பகிரங்கமாகக் கைவிட்டுச் சனநாயக அரசியலில் பிரவேசிக்க வேண்டுமெனக் கூறுகிறது. பன்முகவாதத்தையேற்று வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் சிங்கள, முஸ்லிம் சிறுபான்மையினருக்கு உரிமைகள் வழங்குவதைத் தாம் ஆதரிப்பதாகப் புலிகள் கூறியபோதிலும் தொடர்ந்து நடைபெறும் கொலைகள் புலிகளின் வாக்குறுதியில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துகின்றன. இந்த அடிப்படையில் தான் ஜனாதிபதி அண்மையில் வடக்கு - கிழக்குப் பிரிக்கும் கருத்தினை வெளியிட்டிருந்தார்.

தடைகள்

எனவே, அரசாங்கமும் புலிகளும் இணைந்து செயற்பட்டுச் சனநாயக ரீதியில் ஓர் அமைப்பை ஏற்படுத்தாவிடின் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறி எழுவது தவிர்க்க முடியாதது. இவ்வகையில் புலிகள் தம்மை ஓர் சனநாயக ரீதியிலான அரசியற் சக்தியாக மாற்றிக் கொள்வது முக்கியமானது. அப்போதுதான் ஜனநாயக உலக அமைப்பும் புலிகளை அங்கீகரிக்கும். புலிகளைப் பொறுத்தவரையில் இது கடினமானது. எனினும், இப்போதைய உலகம் இம்மாற்றத்தினையே விரும்புகிறது.

இதனைப் புலிகள் துரிதமாக உணர்ந்து செயற்படின் அனைவருக்கும் நன்மை பயக்கும். வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களுக்குக் குறைபாடுகள் உள்ளமையும் புலிகளே அவற்றைச் சர்வதேச சமூகத்துக்கு உணர வைத்தனர் என்பதுவும் உண்மை.

வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்குப் போதுமான அளவு அதிகார பரவலாக்கத்தை அறிமுகப்படுத்தக் கூடிய அளவுக்குப் புலிகளே அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தினர் என்பதும் உண்மை. எவ்வாறெனினும் பரவலாக்கப்படக் கூடிய அரசியல் அதிகாரம் மற்றோருடன் சனநாயக ரீதியில் பகிரப்பட வேண்டும் என்பதையும் புலிகள் உணர வேண்டும். எனவே. உண்மையான சனநாயக நடைமுறைகள் தெற்கில் பின்பற்றப்பட்டால் புலிகளும் தமது செயல்களில் தளர்வான நெகிழ்வான போக்கைக் கடைப்பிடிப்பர் என நம்பலாம்.

ஜே.வி.பியினர் ஜனநாயக வழிமுறையைப் பின்பற்றியுள்ளமையினை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அப்போது தென்னிலங்கையும் புலிகளை ஏற்கும்.

வடக்கு - கிழக்குச் சிங்களவர்களும். முஸ்லிம்களும் புலிகளைச் சந்தேகக் கண் கொண்டு நோக்குவது முதற் பிரச்சினையாகும். எனவே. அதிகார பரவலாக்கலை ஒதுக்கி வைத்து விட்டு வடக்கு - கிழக்குப் பொருளாதார ரீதியில் மேம்படுத்துவதற்கான ஓர் அமைப்பு நிறுவுவது சாலப் பொருத்தமாகும். சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் அடங்கிய ஒரு அமைப்பை நியமனம் செய்வது இவ்வகையில் பொருத்தமானது. இவ்வமைப்பு வடக்கு கிழக்கின் பொருளாதார அபிவிருத்தி. மக்களின் புனருத்தாரணம் என்பவற்றில் கவனஞ் செலுத்தும்.

வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதியுதவிகள் வடக்கு - கிழக்கு மக்களின் நலவுவிருத்திக்கு [illegible] நோக்கத்துக்கு [illegible] என்பது மறக்கப்படக் கூடாது.

வெளிச்ச வாசல்

எமது வன்முறைச் சமூகம்

ஆங்கிலத்தில்: எட்னா யாகி தமிழில் : அபூ அஸ்ஸன்

"பலஸ்தீனர்கள் இல்லாத பலஸ்தீனம் மரணித்துப் போய்விடும்.
அவளது நதிகள் நஞ்சாகி விடும். ஊற்றுக்கள் அனைத்தும் வற்றிப் போய்விடும்.
மலைகளும் பள்ளத்தாக்குகளும் பாழடைந்து விடும்."
- இஸ்ரேலிய ஷமீர்

எனது பெயர் ராஃபி. நான் ஒரு அமெரிக்க இஸ்ரேலியன். முன்னாள் இஸ்ரேலிய பாதுகாப்புப் படை அங்கத்தவனும் கூட.

எமது சமூகம் குறிப்பாக அண்மைய பலஸ்தீன எழுச்சியில் எவ்வளவு மோசமான வன்முறைச் சமூகமாக மாறியிருக்கிறது என்பதை நினைத்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

நாம்தான் வன்முறைக்குள்ளானவர்கள் என்று உலகத்தையும் ஏன் எம்மையும் கூட நாம் ஏதோ ஒரு விதத்தில் நம்பவைத்துக் கொண்டுள்ளோம். ஆம். ஒரு கால கட்டத்தில் நாம் வெறுக்கப்பட்டவர்களாகவும் வேறுபடுத்தப்பட்டவர்களாகவும் இருந்தோம். யூதர்கள் என்ற காரணத்திற்காக நாம் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் வாழ்ந்தோம். கஷ்டத்திலும் துன்பத்திலும் அலைக்கழிந்து கொண்டிருந்த ஐரோப்பிய யூதப் பரம்பரை எங்கு அவமானத்தையும் அச்சத்தையும் வெறுப்பையும் சந்திக்காமல் நீண்ட காலம் வாழ முடியுமோ அப்படியொரு இடத்தை நம்மில் சிலர் தேடிக் கொண்டிருந்தனர்.

நமது கற்பனை மிகவும் தவறானதாயிருந்தது. நாம் தேர்ந்தெடுத்த நிலப்பரப்பானது ஏற்கனவே அதன் பூர்வீக மக்கள் வாழ்ந்த இடமாக இருந்தது. பயங்கரவாதம், ஒழித்துக் கட்டுதல், காட்டுமிராண்டித் தனம் ஆகியவற்றைப் பிரயோகித்து அமைதியான அந்த மக்களைப் பலவந்தமாக அவர்களது சொந்த இடங்களிலிருந்து ஓட ஓட விரட்டினோம். அவர்களில் ஒரு பகுதியினர் அண்டைய அறபு நாடுகளுக்கு ஓடிப் போனார்கள். ஏனையோர் இன்று வரை நமக்குள்ள அதிகாரத்தாலும் அசைக்க முடியாதபடி சொந்த மண்ணிலேயே அகதிகளாக குந்தினார்கள்.

யூதர்கள் மீதான பெரும்படுகொலைக்குப் பின்னர் நாம் வேண்டப்படாத அகதிகளாகத்தான் இருந்து வந்தோம் என்ற ஒரு காரணம் மட்டுமல்ல, அமெரிக்காவுக்கு நம்மூடாக அறபு நாடுகளில் பாதம் பதிக்கும் ஒரு தேவையும் இருந்தது. இது நமக்கு ஆயுதங்களைச் சேகரிக்கவும் அமெரிக்க, பிரித்தானிய ராணுவ உதவியைப் பெறவும் இலகுவான வழியாக இருந்தது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் எம்மில் அதிகமானோர் எமது முன்னைய ஐரோப்பிய வாழ்விடங்களிலிருந்து இங்குவந்தோம். ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வந்த மக்களின் சொந்த மண்ணையும் அவர்களது வாழ்விடங்களையும் சண்டையிட்டு அடிமைப்படுத்தி ஆக்கிரமிக்கும் வழியையே தேர்ந்தெடுத்தோம்.

பின்னர் சூழ்ச்சிகளையும் சதித் திட்டங்களையும் மேற்கொண்டோம். வஞ்சகத்தனமாக எல்லாவற்றையும் மாற்றுவதில் மும்முரமாக இருந்தோம். வரலாற்றைத் திரித்துக் கூறினோம். நாங்களே இந்த மண்ணின் சொந்தக் காரர்கள் என்று உரிமை பாராட்டி உலகத்துக்குச் சொன்னோம். குறிப்பாக நாங்களும் அப்படியே நம்பத் துவங்கினோம். எவையெல்லாம் யூதர்களின் மனித உரிமைகளாக இருந்தனவோ அவற்றை மாத்திரமே மனித உரிமை என நாம் ஆதரித்தோம். எவையெல்லாம் யூதர்களது சுதந்திரம் என்று கருதினோமோ அவற்றை மாத்திரமே சுதந்திரம் என்று கருதினோம். மத்திய கிழக்கில் ஜனநாயகத்தின் தேவை குறித்துப் பிரஸ்தாபித்தோம். அதே வேளை எமது ஜனநாயகம் மிகச் சாதுரியமாக யூத மதத்தை உள்ளடக்கியதாக இருந்தது. யார் யாரெல்லாம் யூத மதத்தைப் பின்பற்றாதவர்களாக இருந்தார்களோ அவர்களையெல்லாம் எமது அரசியலிலிருந்து தள்ளி வைத்தோம்.

ரமல்லாஹ்வில் பாதாள முகவர்கள் மூலம், எதிர்த்துச் சீறும் பலஸ்தீனியருக்கு விசாரணைகள் இன்றி மரண தண்டனை வழங்கிக் கொண்டே அவர்களைக் கொடூரமானவர்கள் என்றும் குற்றவாளிகள் என்றும் சொன்னோம். ஆனால் 'பெய்த் ஹதெஸ்ஸா'வின் பாதையில் - நான் கண்டது கொடூரங்களையெல்லாம் மிகைத்த கொடூரமாகும்.

அது ஜனவரி 12ம் திகதி. ஷாகிர் - அதுதான் அந்தப் பலஸ்தீனிய இளைஞனின் பெயர். இஸ்ரேலியப் பாதுகாப்புப் படை வீரர்கள் ஜெரூஸலேம் தெருவில் அவனைத் துரத்திச் சென்றார்கள். ஜெரூஸலேம் யூதர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் புனிதமானது. ஒரே இறைவன் என்ற கொள்கை போதித்த தூதர்கள் நடந்த மண் அது. ஆனால் அதில் நான் கண்டது, புனிதமான ஒன்றோ அல்லது நேர்மையான ஒன்றோ அல்ல. நான் அதில் கண்டது என்னவெனில்... இன்னும் உயிர் பிரியாத நிலையில் இருந்த அந்த இளைஞனை எமது வீரர்கள் சிரித்தபடி கொடுமையான முறையில் தெருவில் இழுத்து வந்தார்கள்.

நகரின் எமது பகுதியில் அந்த உடலை தெருவில் இழுத்துக் கொண்டு வந்தார்கள். பெய்த் ஹெதஸ்ஸாவில் நமது யூதக் குடியேற்றவாசிகள், இரத்தம் பொங்கிக் கொண்டிருந்த அந்த உடலைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினார்கள். அடித்தே வதைக்கப்பட்ட அந்த உடலில் உயிர் பிரிவதற்கான மூச்சுத் திணறல் தென்பட்டது. நமது யூதக் குடியேற்றவாசிகள் பாடினார்கள்... ஆடினார்கள்... ஒருவருக்கொருவர் பலமான சத்தத்தில் வாழ்த்துக்களைத் தெரிவித்தபடி கைகளைக் குலுக்கிக் கொண்டாடினார்கள். சிறுத்தைகள் தான் அடித்துக் கொன்ற இரையை தம் இடத்துக்குக் கொண்டு வரும் காட்சி என் கண்முன் விரிந்தது. இவர்கள் ஒரு பலஸ்தீனிய இளைஞனின் பிணத்தின் மீது தமது மகிழ்ச்சியைக் கொண்டாடினார்கள். இந்த இளைஞன் பலிகொள்ளப்பட்ட விதத்தில் எந்த வீரத்தையும் நாகரிகத்தையும் என்னால் காண முடியவில்லை.

இந்தக் கொடூரம் அத்தோடு முடிந்து விட வேண்டும் என நான் விரும்பினேன். ஆனால் அப்படி முடிந்துவிடவில்லை. சில இஸ்ரேலியர்கள் அந்த உடலின் தலையை நொருக்கிச் சிதைத்தார்கள். சிலர் கண்களைத் தோண்டியெடுத்தார்கள். ஒருவர் மூக்கை அறுத்தெடுத்தார். இறந்து போன உடல் இதனால் எந்த வேதனையையும் உணராது என்று கருதினாலும் கூட இவ்வாறு மிருகத்தனத்தை விடக் கோரமாக இவர்கள் நடந்து கொள்வதற்கு அந்த அப்பாவி இளைஞன் செய்த தவறுதான் என்ன? இப்படியொரு குரூரத்தை என் வாழ்நாளில் இதற்கு முன்னர் நான் சந்தித்ததில்லை.

ஷாகிர் இவ்வாறு மனிதாபிமானமற்ற முறையில் பலியிடப்பட்டமைக்காக என்னை மன்னியுங்கள். அவன் அவ்வாறு அநாகரிகமான முறையில் கொல்லப்படுவதற்குக் காரணமானவர்கள் சட்டத்தின் முன் கொண்டு வரப்படல் வேண்டும். எங்களிலிருந்து யார் யாரெல்லாம் பாடி மகிழ்ந்தார்களோ, ஆடிக் களித்தார்களோ, கொண்டாடினார்களோ அவர்களெல்லாம் வெட்கத்தில் தமது தலைகளை எரித்துக் கொள்ள வேண்டும். நாம் மனித குலத்துக்கு எதிராகக் குற்றமிழைத்தவர்கள். நம்மை நாமே அழித்துக் கொள்ளும் இந்த வழியைத் தொடர்ந்து பின்பற்றினோமேயானால் எங்களில் சிறிதளவு மனிதர்களும் எஞ்சப் போவதில்லை. நீண்ட காலங்களுக்கு முன்னர் படுகொலையான நாம், பலஸ்தீனத்தில் புதிய படுகொலைக் களத்தை அமைத்திருக்கிறோம். அப்பாவிகளை அநியாயமாகப் பலியிடுவதை நிறுத்த இதுவே சரியான நேரம். ஆயுதங்களை ஏந்தாத அப்பாவிகள் மீது மோசடியும் பாசாங்கும் நிறைந்த எமது முகமூடிகளை அகற்ற வேண்டிய காலம் இது. நாம் இதுவரை எவ்வாறான கொடுமைகளை இழைத்து வந்துள்ளோம் என்பதைத் திரும்பிப் பார்க்க வேண்டிய நேரம் இதுதான்.

உலகத்துக்கும் நமக்கும் நாம் நியாயமற்றோராக இருக்கின்ற காலம் வரை நாம் ஒரு போதும் அமைதியைக் காணப் போவதில்லை.

அடித்துக் குற்றுயிராகத் தெருவிலே இழுத்துவரப்பட்டு உதைத்து இழிவுபடுத்தப்பட்ட அந்த இளைஞன் அடிக்கடி எனது நினைவில் வந்துகொண்டேயிருக்கிறான். அதைவிட மோசமாக அவன் இறந்த பிறகு அவனது அங்கங்களை அறுத்தது என்னை இன்னும் வருத்திக் கொண்டேயிருக்கிறது. இறைவன் எம்மைப் பாதுகாக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லறத்தில் நுழையும் நம்மவர்கள் எல்லோரும் அதுற்றிய எல்லா வகையான அறிவுகளுடனும் இருப்பதில்லை. இதனால் சிற்சில இடறல்கள் தலைகாட்டவே செய்யும். அவ்வாறானவற்றைக் களைந்து நல்லறமாக மாற்றுவதற்கும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து இணையிரியாத் தம்பதிகளாகத் திகழ்வதற்கும் ஆலோசனைகளை பன்னூல் ஆசிரியர் 'கைபேடு கலைஞர்' டாக்டர் அப்துல் பாரி 'புதுமணத் தம்பதிகள் கைபேடு' என்ற தலைப்பிலான நூலில் முன்வைத்துள்ளார். அவற்றிலிருந்து சில பகுதிகள் இங்கு இடம்பெறுகின்றது. நமது மக்களும் இவ்வாறான இடறல்களை சந்திக்கும் போது அவற்றிலிருந்து விடுதலை பெறுவதற்கு இத்தொடர் வழிகாட்டும் என்று நம்புகின்றோம்.

புதிய சூழ்நிலை 1

திருமணம் செய்து கொண்ட எல்லா ஆண்களும், பெண்களும் இன்பமாக - மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது.

எத்தனையோ ஏமாற்றங்கள்! எத்தனையோ துயரங்கள்! ஊருக்குத் தெரியாமல், யாருக்கும் தெரியாமல் கண்ணீர் வடிக்கும் தம்பதிகளுக்கு கணக்கே இல்லை!

பெண்கள் மட்டுமல்ல; ஆண்கள் கூடக் கண்ணீர் வடிக்கிறார்கள். "தெரியாத் தனமா ஒரு பேயிடம் மாட்டிக்கொண்டேன்". "அவளது அழகிலே மயங்கினேன்! அவள் ஒரு நாகப்பாம்பு என்பது இப்போதுதான் தெரிகிறது!" என்று நண்பர்களிடம் சொல்லி அழும் ஆண்களும் இருக்கிறார்கள்! வேதனைப் பெருமூச்சுவிடுகிறார்கள்.

இதற்கு என்ன காரணம் - ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாதது தான்!

உம்மா - வாப்பா பார்த்துத் திருமணம் செய்து வைக்கிறார்கள். இவர்களும் ஆயிரம் இன்பக் கனவுகளுடன் கல்யாணம் செய்து கொள்கிறார்கள்! தாங்கள் கையில் பிடித்தது, முல்லை அல்ல, ரோஜா; முள் குத்துகிறது என்பதை மிக விரைவிலேயே உணர்ந்து கொள்கிறார்கள்!

இதனால் இல்லறத்தின் தொடக்கமே இவர்களுக்குக் கசப்பாக அமைந்து விடுகிறது. கணவன் - மனைவிக்குள் உரசல்கள்! முறைப்பு, மோதல்கள்!

இது போன்ற புதிய சூழ்நிலைகளைப் புதுமணத் தம்பதிகள் அனைவருமே சற்று கூடுதலாகவோ குறைவாகவோ ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

விழித்தெழு பெண்ணே!

என் சக தோழிக்கு,

உன்னிடம் நான் மனம் விட்டுப் பேசும் தருணம் வந்துவிட்டது. உன் நடைமுறைகளை இனியும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எங்கோர் மூலையில் உன் கற்பனைகளைக் கொட்டி காலத்தையோட்டிக் கொண்டிருக்கிறாய். நாகரிக ஆடைகளுக்காய் நாகரிகப்பார்வைகளுக்காய் உன்னைத் திருப்திப்படுத்துகிறாய். நீ பெருமைப்படும் நாகரிக உலகத்தைவிட உனக்கான தனித்துவ உலகம்பற்றி நீ கண்டு கொள்ளவில்லையே என்ற ஆதங்க மேலீட்டால் என் வாத்தைகளை உனக்காகப் பிரசங்கப்படுத்துகிறேன்.

கவனமாகக்கேள் தோழி!

உயிரின் கடைசி வேரில் இருப்பாகி விட்டோம். எமதிருப்புக்களின் கீழ் எப்போதோ திட்டமிட்ட விலங்குகள் மாட்டப்பட்டிருந்தன என்பதை புரியாமலேயே இருக்கிறாய். பெருமைக்காய் மட்டும் முஸ்லிம் எனும் நாமத்தை சூட்டினால் போதுமா? உன்னால் இப்போது உச்சரிக்கப்படும் வார்த்தைகள் சினிமாப் பாடல்களாய் மாறிப்போனதை நினைத்துப் பார்க்கிறாயா? உன் சமையல் வேளையில் கூட சினிமாப்பாடல்களையே முணு முணுத்துக் கொண்டிருக்கிறாய். முற்று முழுக்க உன் சிந்தனைகள் உன் தனித்துவத்தில் இல்லை எண்பதை எப்போதாவது உணர்ந்தாயா...?

எங்கேயோ நீ தொலைத்து விட்ட நிம்மதியான வாழ்வை மீட்டெடுப்பது பற்றி உன் சிந்தனையில் உதிக்கத்தா மதித்தமையால்தான் மொடல் அழகிகளையும் ஹொலிவுட் நடிகைகளையும் கிசு கிசு போலிகளையும் பேசுவதில் அரட்டை அடித்துக் கொண்டிருக்கிறாய். ஆனால் உனக்கான சுதந்திரம் இன்னும் சற்றே நிமிடங்களில் பறிக்கப்படுமென்பதை உன்னால் அறியவே முடியாது. ஏனெனில் அந்நிய உலகமும் மாற்றுக்கலாசார மோகமும், நாகரிகப் போலிகளும் உன்னுள் வலு இருப்பாகி விட்டது. கலிமா மொழிவதற்கோ தொழுகையை முடிப்பதற்கோ அல்லாமல் T.V மெகா தொடர்களை நேரம் தவறாமல் இரசித்துக் கொண்டிருக்கிறாய். அடைய முடியா இலட்சியக் கோட்டைக்குள் உன் எண்ணங்கள் கட்டப்பட்டிருக்கும். ஆனால், உன்னைச் சூழவும் உன் வாழ்வை அழித்து நாளைய சமுதாயத்தில் உன் பாதங்கள் புகமுடியாதளவு கட்டப்பட்டிருப்பது பற்றி பாராமுகமாயிருக்கிறாய் என் தோழியே!

உன் நம்பிக்கைப் பிரயோகங்களை யாரிடம் ஒப்படைத்தாயோ அவர்கள் வெறும் தலையாட்டலுக்கும் எம் நம்பிக்கைகளை எம் பலவீனங்களால் என்றோ தொலைத்து விட்டார்கள். ஆனால், அதற்காக எமது எச்சரிக்கைகள் எம் திட்டப்படுத்தல்கள் ஒழிக்கப்பட வேண்டுமா என்ன?

சென்றவைகள் இருக்க எமது முரண்பாடுகளுக்குள் எமது ஏக்கங்கள். விழித்தெழுவது பற்றி இஸ்லாமியப் பெண் எனும் அடிப்படையில் தொழுகையில் நீ கேட்கும் துஆவிலாவது இனியேனும் மீட்சி பெறட்டும். நான் - நீ - எம் சந்ததி இழந்தவைகளும் மீட்க வேண்டியவைகளும் இப்போது பாளு ஜனாகவே ஆகிவிட்டது. நீ சில சுன்னத்துக்களை மட்டும் உன்னுள் கடமையாக்கி விட்டாய். ஆதலால்தான் பாளு ஜனை விட்ட தண்டனைகளை மேலும் சுமக்க வேண்டியாயிற்று.

கவலையற்ற உனதுலகம் எங்கேயோ தொலைக்கும் உன் உறவுகள் நீ மட்டும் மீதமாகும் உன் தரிசிப்புக்கள் நாளை பறிக்கப்படும் முன்னர் விழித்தெழு பெண்ணே.

இனியேனும் சிந்திப்பாய்! நேரம் வந்துவிட்டது. அவகாசம் உனக்கில்லை. இஸ்லாமிய நாமத்தின் புனிதம் மட்டுமே போதும். எஞ்சிய இடைவெளிகளோடு மீள்தல் நோக்கி பாதங்களை நகர்த்திட வா பெண்ணே. உணர்வுகள் உனக்குள் முளைத்தால் போதும். உன்னையும் என்னையும் பெண்தான் என்று அமிழ்த்தும் காலில் குத்தும் ஆணிகளும் முட்களும் சிந்திக்கும் வரைதான்.

எமதுணர்வுகளின் மையங்கள் புலப்படவே போகிறது. எம் சந்ததி உலகம் தனை நம்கையில் மீட்போம். நாளைய நிம்மதி உலகிற்காய். விழிப்புடன் வா பெண்ணே.... என்றும் அன்புடன்.

உன் சகோதரி.
ஹஸனதா

முஸ்லிம் குரல் புதிர்ப் போட்டி இல - 01

அகழ்வு : நிஷாத் கரீம்

✔ இந்தப் பகுதியின் மாதிரி விடைத்தாளில் புதிர் எண்களும் அதற்கான விடை எழுதும் பகுதியும் தரப்பட்டுள்ளன. (காண்க விடைத்தாள் - 01)

மாதிரி விடைத்தாள் 1

முஸ்லிம் குரல்
புதிர்ப் போட்டி இல- 01

புதிர் இல	விடை எழுதும் பகுதி
1	
2	
3	
4	
5	
6	
7	
8	
9	
10	

கையொப்பம் :.....

பெயர் :.....

முகவரி :.....

✔ அனுப்ப வேண்டிய முகவரி

முஸ்லிம் குரல்,
புதிர்ப் போட்டி இல - 01
181/1 மாளிகாகந்த வீதி, (வைட் பார்க்) கொழும்பு - 10

புதிர்கள் :-

01. 'உம் இறைவன் எத்தகைய மாபெரும் அருட் கொடையாளன் எனில், அவனே எழுது கோலின் மூலம் கற்றுக் கொடுத்தான். மனிதனுக்கு அவன் அறியாதவற்றையெல்லாம் கற்றுக் கொடுத்தான்' இந்தக் குர்ஆன் வசனம் இடம் பெறும் அத்தியாயம் எது?

02. அராபியர்கள் இலங்கைக்கு இட்ட பெயர் என்ன?

03. இந்தியாவில் உள்ள நிலத் தொடர்பற்ற பாண்டிச்சேரி மாநிலம் எந்த நாட்டின் ஆளுகையின் கீழ் இருந்தது.

04. அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்கள் தமிழ் மொழிக்கும் முஸ்லிம் சமூகத்திற்கும் ஆற்றிய பங்களிப்பு அளப்பெரியது. அறிஞர் அவர்கள் எந்த ஊரில் பிறந்தார்?

05. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த ஊரில் இயக்கமாக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது?

06. அல் அக்ஸா பள்ளிவாயலை இறுதியாக மீட்ட கலீபா யார்?

07. முஸ்லிம் தேசப் பிரகடனம் எத்தனையாம் திகதி இடம் பெற்றது? எங்கு இடம் பெற்றது?

08. முஸ்லிம்களின் அடிமைச் சாசனம் என மர்ஹூம் அஷ்ரஃப் அவர்களால் அழைக்கப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தம் இடம் பெற்ற போது இலங்கைக்கான இந்திய தூதுவர் யார்?

09. 'திருக்குர்ஆனின் இதயம்' என அண்ணல் நபி (ஸல்) அவர்களால் அறிவிக்கப்பட்ட குர்ஆனின் அத்தியாயம் எது?

10. விமான உற்பத்திக்குப் பயன்படும் தைத்தானியம் அகழ்தெடுக்கப்படும் முஸ்லிம் தேச பிரதேசம் எது?

போட்டி நிபந்தனைகள்

✔ உங்கள் விடைகள் தெளிவான எழுத்துக்களில் எழுதி அனுப்பப்படல் வேண்டும். (விடைத்தாளை நீங்கள் தயாரித்துக் கொள்ளவும்)

✔ சகல வினாக்களுக்கும் சரியான விடையை எழுதி அனுப்பிய அதிஷ்ட சாலிக்கு பெறுமதியானதும், அறிவு ரீதியானதுமான நூல்கள் பரிசாக வழங்கப்படும்.

✔ ஒன்றுக்கு மேலானவர்கள் சரியான விடையை எழுதி அனுப்பும் பட்சத்தில் குலுக்கல் முறையில் அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார்.

✔ ஏனைய 10 முதல் தர விடைதாரர்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டு பாராட்டுப் பெறுவர்.

✔ நிரப்பப்பட்ட விடைத்தாள் 18.10.2003 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடிய தாய் அனுப்பி வைக்கப்பட வேண்டும்

வாசகர் கவனத்திற்கு

முஸ்லிம் குரலின்
1-15 இதழ்கள் தேவைப்படுவோர்,
ரூபா. 200/- க்கான காசுக்கட்டளை/காசோலை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

சிறுவர் ஒழுக்கம் வீட்டில் தொடங்கப்பட வேண்டும்

இப்போதைய சமூக அமைப்பின்படி தமது பிள்ளைகளை அவர்களது சிறு வயதில் சரிவர நடாத்துவதில் வெற்றிகாணும் பெற்றோர்கள், அவர்கள் 13-19 வயதடையும்போது தடுமாற்றம் அடைகின்றனர். இவ்வயதுக் கட்டத்தினில் அவர்கள் தமது சுய உணர்வின்படி நடக்க முயலுவதுடன், பெற்றோரின் தலையீட்டைத் தவிர்க்க முயலுகின்றமையே இதற்கான காரணம். சரியான ஒழுக்க விழுமியங்கள் புகட்டப்படாத சிறார்களிடையே இப்போக்கைக் காணலாம். ஒழுக்கம் வீட்டில் தொடங்கப்பட வேண்டியதுடன், அனுபவம் பெற்றவர்கள் என்ற அடிப்படையில் பெற்றோர்களும் முதியோர்களும், பிள்ளைகள் செய்ய வேண்டிய பாதையினையிட்டுச் சரியான புரிந்துணர்வைப் பெற்றிருத்தல் வேண்டும். பெற்றோர்களின் அறிவுரைகளுக்குச் செவிசாய்க்காத பிள்ளைகள் தமது சுய விருப்பத்துடன் நடக்க முற்படுவர். தகாத நண்பர்களுடன் ஒன்றுசேரும்போது தீயொழுக்கம் கலந்துவிடும் அபாயம் உள்ளது.

அதிகமான பெற்றோர்கள் தம்மிடையே சுமுகமான உறவை வளர்த்துக்கொள்ளத் தவறியுள்ளமையினால் அன்பின் அடையாளம் அவர்களிடம் மிளிருவதில்லை. இவை பிள்ளைகளின் மனதில் வித்தியாசமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. கணவன் மனைவியிடத்தில் சரியான, கூட்டமைப்பான செயற்பாடு இல்லாமை காரணமாகக் குடும்பத்தில் கசப்புணர்வு ஏற்பட்டுப் பிள்ளைகளையும் பாதிக்கின்றது.

இள மனதுகள். விஷேடமாய் பெண் பிள்ளைகள் உலகைப் புரிந்து கொள்வதற்காகத் தாயன்புக்கு ஏங்குகின்றனர். தாய்மார்கள் உணர்வுகளின் அடையாளத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்.

சமுதாயத்தில் மலிந்துள்ள பல்வேறு காரணிகளின் விளைவாகப் பெண் பிள்ளைகள் எளிதில் பாதிக்கப்படக்கூடிய நிலை உண்டு. இன்று வீடுகளில் சீர்திருத்த அல்லது தண்டிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, வயதுவந்த பிள்ளைகள், பெற்றோர்மீது தம் கோபத்தைக் காட்டுகின்றனர். இது பின்னர் சமூகத்தில் தவறான நடவடிக்கைகளுக்கு இடடுச் செல்லும். பெற்றோர்களின் அன்பு இல்லாமையும், அளவு மீறிய தண்டனையும் இதற்குக் காரணம். திருத்துதல் என்பது கவனமாகச் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

இப்போதைய கல்விக் கொள்கையின்படி அதிபர் மட்டுமே பிள்ளையினைத் தண்டிக்க முடியும். காலுக்கு மேல் உயர்த்தித் தண்டிப்பது தடையென்பதால் முன்பிருந்த அச்ச உணர்வு இப்போது இல்லை.

எத்தகைய விதமான உறவாயினும் சரி வெற்றிபெற அடிப்படை அம்சம் அன்பும், கவனிப்பும் ஆகும். மார்க்கம் என்பது ஒழுக்கத்துக்கான சரியான அடிப்படையாகும். பிள்ளைகள் ஒழுக்கமாக வளர்க்கப்படின், உறுதியான குடும்ப உறவு திகழுமாயின் சரியான மனநிலை ஏற்படும்.

ஆரியதாச ரட்ணசிங்க

கொழும்பு ஹமீத் அல் ஹுசைனியா பாடசாலை குறைபாட்டின் கூடமாக மாறிவருகின்றதா?

கொழும்பு ஹமீத் அல் ஹுசைனியா தேசியப் பாடசாலை இன்று பெயரளவில் மட்டுமே தேசியப் பாடசாலையாக இருக்கின்றது. கல்வித் தகமையில் சாதாரண அந்தஸ்த்திலேயே இருக்கின்றது. கடந்த வருடம் 68 மாணவர்கள் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றியபோதும், இம்மாணவர்களுக்கு வாரத்திற்கு மூன்று தினங்கள் விஷேட வகுப்புகள் ரூபா 100/- அறவிட்டு இப்பாடசாலை ஆசிரியர்களே கல்வி போதித்தபோதும். ஒரே ஒரு மாணவர் மட்டுமே இப்பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இப்பாடசாலையின் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் ஆக்கபூர்வமான எம்முயற்சிகளும் செய்வர்களாக காணப்படவில்லை. கடந்த இரண்டு வருடங்களாக நிரந்தர அதிபரின்றியே இப்பாடசாலை இயங்குகிறது.

சிங்கள மொழிமூலம் இஸ்லாம் கற்பிப்பதற்கு ஒரு ஆசிரியர் இல்லாதது பெரும் குறைபாடாகவுள்ளது. புதிய மாணவர்கள் ஆண்டுதோறும் சேர்க்கப்படும்போது கணிசமான தொகை பெறப்படுகிறது. அப்பணத்தைக் கொண்டேனும் தற்காலிக ஆசிரியர்களை நியமித்து இப்பாடங்களை போதிக்க வழி செய்திருக்க முடியும். ஏன் அவ்வாறு செய்யவில்லை என்பது புதிராகவே இருக்கிறது. அண்மையில் இப்பாடசாலை ஆசிரியர் மத்தியில் இனவாத பேச்சில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக குறிப்பிட்ட ஒரு ஆசிரியரை இடமாற்றம் செய்யாதவரை பாடங்கள் நடத்தப்போவதில்லை என மாணவர்களின் கல்வியை பாழ்படுத்தியது மிக வேதனைக்குரியது.

ஆசிரியர் குழாம் கூட்டங்களில் மாணவ சமுதாய நலன் பேணி, பாடசாலை முன்னேற்ற செயல் திட்டங்களை ஆராயாது, தமது சொந்த விவகாரங்களை மட்டும் பேசுவதால் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு எந்தப் பலனும் ஏற்படப்போவதில்லை.

இப்பாடசாலையின் குறைபாடுகளை ஆராய கல்வித் தரம் ஓங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளோ, மக்கள் பிரதிநிதிகளோ பழைய மாணவர்களோ, பெற்றோர்களோ கவனம் செலுத்தமாட்டார்களா?

பாடசாலை நலன்விரும்பி
கொழும்பு.

முஸ்லிம் குரலுக்கு

நாட்டின் நாலா திசையிலிருந்தும் செய்தியாளர்கள் விற்பனை முகவர்கள் வேண்டப் படுகின்றனர்

25 ஒக்டோபர் 2003ந் திகதி இறுதித் திகதியாகும் அதற்கு முன் பூரண விபரத்துடன் தொடர்பு கொள்ளவும்

காத்தான் குடி....

கிரமமாக கிடைக்கும் என்ற புலிகளின் களமுனை அனுபவம் அவர்களுக்கு துணை நிற்பதாக அறிய முடிந்தது.

இன்னுமொரு விடயமும் இத்துண்டிப்புக்கான முக்கிய காரணமாகிறது. புலிகளின் மட்டக்களப்பு அலுவலகங்களின் தொலைபேசிக்கட்டணம் பல இலட்சங்களை தாண்டியுள்ளது. இந்த நிலையில் புலிகளின் அலுவலக தொலைபேசிகள் தற்காலிகமாக துண்டிக்கப்பட்டுள்ளன. கட்டணத்தை செலுத்த பழக்கமில்லாத புலிகள் அக்கட்டணத்தை கழித்து விடுமாறு டெலிகொம் நிறுவனத்தை அன்பாக கேட்டும் அது கை கூடாததால், வருமானத்தை கொட்டும் முஸ்லிம் பிரதேச தொலைத் தொடர்பு வழக்கமான பாணியில் புலிகளால் துண்டிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் தேச மக்களின் தொடர்புகொள்ளும் உரிமை புலிகளால் மறுக்கப்பட்ட இத்துண்டிப்பு விடயம் உண்மையில் ஓர் யுத்த நிறுத்த மீறுதலாகும். இது பற்றி யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவில் முஸ்லிம் தேச மக்கள் முறையிட வேண்டும். அத்துடன் முஸ்லிம் தேசத்திற்கென தனியான தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட வேண்டும் என முஸ்லிம் தேச தொலைபேசி பாவனையாளர்கள் தொலைபேசி நிறுவனங்களைக் கோர வேண்டும்.

டெலிகொம் நிறுவனம் தொடர்ந்து கப்பம் செலுத்திக் கொண்டு அக்கப்பப் பணத்தை மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்த தொலைபேசி பாவனையிலுள்ள முஸ்லிம் தேசத்திடம் மறைமுகமாக அறவிட்டுக் கொண்டு முஸ்லிம் தேச மக்களின் அடிப்படை உரிமைகளைப் புலிகள் பறிப்பதற்கு துணை போவதை நீண்ட காலம் பொறுத்துக் கொள்ள முடியாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

- அலி உதுமான் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்குரல் பத்திரிகை நமது மக்களின் இழப்புகளை ஆவணப்படுத்தி, இழப்புகளுக்கு நீதி வேண்டிப் போராடும் பணியை, முஸ்லிம் தேச ஆவணக் காப்பகத்தினூடாக முன்னெடுத்து வருவதை அறிந்திருப்பீர்கள். எமது இந்த முயற்சிக்கு நமது மக்கள் மத்தியிலிருந்து பெருமளவு ஆதரவும், ஆவணங்களும் வந்து சேர்ந்து கொண்டிருக்கின்றன.

இத்தகவல்களை நமது மக்களுக்கு பகிரங்கப்படுத்தும் நோக்கில் மக்கள் பத்திரிகை என்ற வகையில் இத்தொடர் எழுதப்படுகிறது. எமக்கு கிடைத்த விபரங்களின் எண்வரிசைப்படி பட்டியல்படுத்தப்பட்டுள்ளது.

01 முகைதீன் பிச்சை முகம்மது முஸ்தபா, அஷ்ஷுஹதா வீதி, மஞ்சந்தொடுவாய், மட்டக்களப்பு. பிறந்த திகதி 1933.04.17. சம்பவம் இடம் பெற்ற இடம் : கிரான்குளம், மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் 822.

02 முகையதீன் பாவா முகம்மது காசீம், 143ஏ, மத்திய மகாவித்தியாலய வீதி, 2 ஆம் ஒழுங்கை, புதிய காத்தான்குடி 06.

பிறந்த திகதி : 1955.11.25, சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : காத்தான்குடி பிரதான வீதி, 1992.01.30 ஆம் திகதி, மரணம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. மரண அத்தாட்சிப் பத்திர இலக்கம் 5927.

03. முகம்மது சுல்தான் முகம்மது நசீர், சந்தை வீதி, மூதூர். பிறந்த திகதி 18.07.1969, சம்பவம் இடம்பெற்ற இடமும் திகதியும் : மூதூர், 1987, மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. மரண அத்தாட்சிப்பத்திரம் இல்லை.

04. அகமது முகையதீன் சுபைர், ஜாயா வீதி, மூதூர் 04, பிறந்த திகதி : 1937.06.01, சம்பவம் இடம் பெற்ற இடமும் திகதியும் : அறபா நகர், மூதூர் 1988.04.12, மரணம் பயங்கரவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. மரண அத்தாட்சிப் பத்திர இல. 798.

05. சாகுல்ஹமீட் முகம்மட் ஹனீபா, 21, நவசேனபுர பொலன் நறுவ, பிறந்த திகதி: 1951.01.27, யானைக்கல் எனும் இடத்தில் 1999.08.04 இல், சம்பவம் புலிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. அங்கவீனமடைந்துள்ளார்.

இப்படியும் சில மனித ஜென்மங்களா.....?

நடந்த கதையின் நகல்

அந்த வீடு பழைய பாரம்பரியத்தின் இருப்பிடம். பெரிய குடும்பம் காலா காலமாக வாழ்ந்து வந்த வீடு அது.

ஒரு தம்பதியர். பத்து பிள்ளைகளை பெற்று - அவர்களில் இருவர் ஆண்கள். எண்மர் பெண்கள் - பெரு வாழ்வு வாழ்ந்த குடும்பம் அது! எல்லாப் பிள்ளைகளையும் நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்து கரைசேர்த்த பெருமை. அந்தப் பெற்றோருக்கு உண்டு. அப்துர் ரஹ்மான் -ஆயிஷா உம்மா என்பது அத்தம்பதியரின் பெயர்கள்!

எல்லாப் பிள்ளைகளுமே ஓரளவு நல்ல நிலைமையில் தான் வாழ்கின்றார்கள். ஆஹா... ஓஹோ என்று கூறுமளவுக்கு கார் - பங்களா என்று வாழா விட்டாலும். நடுத்தரத்தை விட. சற்றே கூடிய வளத்துடன் தான் வாழ்கின்றனர்.

பத்து தம்பதியருக்கு மூன்று - நான்கு என்று குழந்தைகளும் பிறந்து அவர்களும் ஓரளவு வளர்ந்து விட்டனர். பத்துப் பேரில் மூத்தவள் ஜெய்புன் மாமி. இந்த ஜய்புன் மாமிக்கு மட்டும் ஏழு பிள்ளைகள். இந்த ஏழு பிள்ளைகளில் அன்வர்தான் தாய்க்கு தலைப்பிள்ளை.

அன்வர் வாலிபனான புதிதில் - அதாவது 23 வயதான போது. தோஹா சுட்டாருக்கு தொழில் வேலை வாய்ப்பு பெற்று சென்றவன். தொடர்ந்து ஒரே கம்பெனியில் பத்து வருடங்கள் விடாப்பிடியாக இருந்து விட்டான். திருப்தியான வேலை: கைநிறைய சம்பளம்.

இடையில் இரண்டு முறை கொழும்பு வந்த போது. முழுச் செலவும் தானே செலவழித்து இரு தங்கையரையும் கரைசேர்த்தான். வாப்பா புறக்கோட்டை பஸாரில 'பாய்' பள்ளிவாசலுக்கு பக்கத்திலுள்ள 'பாய்' சகோதரர் ஒருவரின் புடவைக்கடையில் நீண்டகால மாக சேல்ஸ்மேனாக இருந்தும். பிள்ளைகளை கரை சேர்க்கும் அளவிற்கு சேமிப்பு எதுவுமில்லை. காலமெல்லாம் சம்பாதித்தோம் - சாப்பிட்டோம் - உடுத்தோம் - உறங்கினோம் என்ற நிலையில்தான் வாப்பா வாழ்ந்தார்.

- அபூ ருஷைக் -

அன்வர் வெளிநாடு போய்த்தான். அவ்வீட்டின் நல்ல காரியங்கள் ஒவ்வொன்றாக நடைபெறலாயின. அன்வருக்கு ஒரு இலட்சியம் இருக்கிறது. அதாவது அன்வரின் தாயை - ஜெய்பு மாமியை - பெற்ற தந்தையான அப்துர் ரஹ்மான் அப்பா. அடிக்கடி சொல்லும் ஆசைதான் அது!

"மூகேன்.... அன்வர்... நாம பரம்பரையா இருக்கும் இந்த வீடு.... நமக்குச் சொந்தமில்லே... இப்போதும் கூலி கட்டிக்கிட்டுத்தான் இருக்கோம்னு உனக்கும் தெரியும். காணிக்காரன் நமக்கே விற்கத்தான் ஆசைப்படுகிறான்... ஐஞ்சு லட்சம் கேட்கிறான்.... பெரிய வீடு... ஐஞ்சு லட்சத்திற்கு நல்ல லாபம்.... நீயே வாங்கி..... உன் பெயருக்கு உறுதிய எழுதிக்கோ... என்ட மையித்து இந்த வீட்டிலிருந்துதான் போகணும்.... இது என்ட ஹாஜத்து...."

அப்பா அடிக்கடி சொல்லும்.... இந்த வார்த்தைகளை தன் வாழ்வின் இலட்சியமாகவே அன்வர் வரித்துக் கொண்டான் "இந்த வீட்டை ஐஞ்சு லட்சம் கொடுத்து வாங்கிய பிறகுதான் கல்யாணமே செய்வேன்" என்று அன்வர் தனக்குள் கூறிக் கொண்டான்.

அன்வர் மீண்டும் அதே கம்பெனிக்கு - தோஹா கட்டாருக்கு 'வெகெஸனுக்கு' வந்து விட்டு போனவன். அதே இலட்சிய தாகத்துடன் உழைத்தான். இறைவனின் கருணையினால் எப்படியோ வீட்டை தன் பெயருக்கு - அப்பா சொன்ன பிரகாரம் - எழுதி வாங்கிக் கொண்டான். வீட்டை வாங்க முன் குடும்பத்தில் எல்லோரிடமும். குறிப்பாக. தன் இரு மாமாமார்களிடமும், தனது ஏழு சாச்சிமார்களிடமும் கேட்டான். எல்லோருமே அனுமதி வழங்கினர். ஏனெனில் - அவர்களில் எவரும் ஐந்து லட்சம் கொடுத்து வாங்கும் நிலையில் இல்லை என்பது தான் காரணம்!

அன்வர் மீது அல்லாஹ் கருணை மழையை பொழிகிறானோ? பரம்பரை வீட்டை வாங்கியதையடுத்து. தனக்கு விருப்பமான அழகான மங்கையொருத்தியை மணஞ் செய்து கொண்டான். குடும்பத்தில் எல்லோருக்கும் அன்வர் நல்லபிள்ளை. மூத்தவளின் மூத்த மகன் என்பதால் அனைவருக்கும் செல்லப்பிள்ளையும் கூட. கட்டார் வாழ்க்கைக்கு டாட்டா காட்டி விட்டு. கொழும்பிலேயே ஒரு தொழிலை தேடிக் கொண்டான்.

அன்வர் திருமணஞ் செய்து ஆறேழு வருடங்கள் ஆகிவிட்டன. மூன்று குழந்தைகளுக்கும் தந்தையாகி விட்டான். இந்த இடைப்பட்ட காலத்தில் அப்பா அப்துர் ரஹ்மானும் வபாத்தாகி விட்டார். இப்போது அந்தப் பரம்பரை வீட்டில் அன்வர் - அவன் மனைவி - மூன்று குழந்தைகளுடன் உம்மா ஜெய்புனை பெற்ற தாய் - அன்வரின் உம்மம்மாவும் மட்டுமே இருக்கின்றனர்.

மற்றவர்கள் அதாவது சாச்சிமார் எழுவரும். இரு தாய்மாமன்களும் அன்வரின் பெற்றோரும் தத்தம் பிள்ளைகளுடன் பக்கத்தில்தான் ஒவ்வொரு வீட்டில் இருக்கின்றனர். பிரச்சினைகள் இன்றி வாழ்ந்தும் வருகின்றனர்.

அன்வரின் உம்மம்மா, தன் பிள்ளைகள் ஒவ்வொருவருடைய வீடுகளுக்கும் ஒவ்வொரு நாளும் சென்று வருவார். ஆனால். எங்கேயும் இராத் தங்க மாட்டார். அப்படிப்பட்ட ஆயிஷாம்மாவுக்கு இப்போது சுகவீனமாகி விட்டது. சீனி வியாதி - ப்ரஷர் இரண்டும் இருக்கிறது.

இந்தக் கிழத்தாயை யார் பராமரிப்பது?

உம்மாவை டாக்டரிடம் கூட்டிச் சென்று, மருந்து எல்லாம் எடுத்துக் கொடுப்பர். "தன் வீட்டில் சில காலம் இருக்கட்டுமே" என்று. எந்தப் பிள்ளையும் அழைப்பதில்லை: அணைப்பதுமில்லை.

பாரம்பரிய பரம்பரை வீட்டில் எல்லோரும் பிறந்து வளர்ந்தனர் என்பதால் அனைவருக்கும் இது தாய் வீடு அதற்காக தங்களின் தாயும் அவ்வீட்டிலே இருக்கட்டும்: அல்லாஹ்வின் அழைப்பு வரும் வரை அவ் வீட்டிலேயே இருக்கட்டும் என எண்ணும் - விரும்பும் பிள்ளைகளில் எவரும் "தங்களின் தாய்: முடியாத முதிய காலத்தில் நாம்தான் பராமரிக்க வேண்டும்" என விரும்புகிறார்கள் இல்லை.

வீடோ.... அன்வருக்கு இப்போது சொந்தமாகி விட்டது. அன்வர் அந்த கிழத்தாய்க்கு பேரன்தானே தவிர. பெற்ற மகனல்ல. அன்வரின் மனையாள் மனிதாபிமான ரீதியில் உதவிட தயார் ஆனால். தன் கணவனாகிய அன்வர் தொழிலுக்கு காலையில் போனால். இரவில்தான் வீடு திரும்புவான். பிள்ளைகளை பாடசாலைகளுக்கு கூட்டிச் செல்வது - மார்க்கட்டுக்குப் போய் காய்கறி வாங்கி வருவது - பிற்பகலில் பாடசாலை சென்று பிள்ளைகளை அழைத்து வருவது - தன் தாய் வீடு செல்வது என்று. பல காரியங்களுக்கு வெளியே செல்லும் போது. நோயாளியான - முதிய - ஆயிஷாம்மாவை வீட்டினுள் போட்டு பூட்டிச் செல்லலாமா? ஏதேனும் விபரீதம் நடந்து விட்டால். ஊருலகம் என்ன சொல்லும்?

இப்படியெல்லாம் யோசித்து. தன் மாமிமார்களிடம் "என் வீட்டுச் சூழல் இப்படி. அதனால் "உங்கள் உம்மாவை உங்களில் ஒருவர் பொறுப்பெடுங்கள்" என நியாயத்தை சொன்னால். பிறந்த பிள்ளைகள் எவரும் நியாயத்தைப் புரிந்து கொள்வதாயில்லை: எவரும் பொறுப்பேக்க முன் வருவதாயுமில்லை! 'தாய் வீட்டில் தாய் இருக்கட்டும்' என்ற சென்டிமன்ட்டிலேயே தம் கடமையை மறக்கின்றனர்.

ஆயிஷாம்மா பெற்ற பத்து பிள்ளைகளும் மார்க்க விஷயம், சமுதாய நெறிமுறை, நீதி நியாயம் தெரிந்தவர்கள் தாம்! இருந்தும் பொறுப்பேற்க தயாராயில்லை.

புகை பிடித்தலற்ற உலகை நோக்கி.....! 9

1988 ஆம் ஆண்டில் எகிப்து அல் - அஸ்ஹர் சாவகலாசாலை அறிஞர்கள் புகைத்தலை ஹராம் என ஏகோபித்து தீர்ப்பு வழங்கினர். இவ்வாறே பெரும்பாலான சமகால இஸ்லாமிய அறிஞர்களும் புகைத்தலை ஹராம் என்றே கருதுகின்றனர். மட்டுமல்லாமல் அது சம்பந்தமாக பல நூற்களையும் எழுதி உள்ளனர்.

பொதுவாக தடைசெய்யப்பட்ட ஒன்றை நேரடியாகவோ அல்லது வேறு வழிகளிலோ கையாள்வதை இஸ்லாம் தடை செய்துள்ளது. வட்டி எடுப்பதையும். கொடுப்பதையும் தடை செய்த இஸ்லாம் அதனோடு சம்பந்தப்பட்ட எழுதுல். சாட்சி நிற்றல் ஆகியவற்றையும் ஹராமாக்கியது. மது அருந்துவதை தடை செய்த இஸ்லாம் அதனுடன் சம்பந்தப்பட்ட உற்பத்தி செய்தல். வாங்கல் விற்றல். அதனை சுமந்து செல்லல். அதன் கிரயத்தை உண்ணல போன்றவற்றையும் ஹராமாக்கியது. ஹராம் எனும் தீர்ப்புடன் புகைத்தலை பார்க்கும் போது புகையிலை உற்பத்திகளான சிகரெட். சுருட்டு. பீடி ஆகியவற்றை வாங்கல். விற்றல், இனாமாகக் கொடுத்தல். அன்பளிப்பாக வழங்கல். பிறருக்கு உதவியாக வாங்கிக் கொடுத்தல். வைபவங்களில் பரிமாறல். அவற்றுக்காக விளம்பரம் செய்தல் விளம்பரங்களுக்கு துணை போதல் போன்றவற்றை ஹராமாகவே கருத வேண்டும். அல்லாஹ் தஆலா ஒரு பொருளை ஹராமாக்கும் வேளை அதன் கிரயத்தையும் ஹராமாக்குகின்றான்.

எஸ்.அப்துல் நாசர் (ரஹ்மானி)
பொதுச் செயலாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை.

நிச்சயமாக அல்லாஹ்வும், அவனது தூதரும் மது பானம், இறந்தவை, பன்றி, விக்கிரகங்கள் ஆகியவற்றை விற்பதனை தடைசெய்துள்ளனர் என நபியவர்கள் கூறிய போது, இறந்தவற்றின் கொழுப்புக்கள் கப்பல்களுக்கு பூசப் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் தோல்களுக்கு அவை எண்ணெய்யாகவும் பாவிக்கப்படுகின்றன. அத்துடன் மக்கள் அவற்றின் கொழுப்புக்களை விளக்குகளை எரியத்தும் பயன்படுத்துகின்றர். எனவே, இது பற்றி உங்கள் கருத்து யாது என கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் அது ஹராம். அல்லாஹ் தஆலா யூதர்களை சபித்தான். ஏனெனில் அல்லாஹ் அவர்கள் மீது அவற்றின் கொழுப்புக்களை ஹராமாக்கிய போது அவர்கள் அதனை உருச்சி விற்று அதன் கிரயத்தை சாப்பிட்டனர் என்றார்கள். (ஸஹீஹுல் புகாரீ, ஸஹீஹ் முஸ்லிம்)

மேற்படி ஹதீஸின் மூலம் ஒரு பொருள் ஹராமாகும் போது அதனுடன் இணைந்து அதன் கிரயமும் ஹராமாகின்றதென்பது புலப்படுகின்றதல்லவா! பேரறிஞர் அப்துர் ரஹ்மான். அந் - நாஸிர் அஸ் - ஸஃதீ புகையிலை உற்பத்திகளின் வியாபாரத்தை ஹராம் என்று கூறியுள்ளார். இக்கருத்தை வேறு பல அறிஞர்களும் முன் வைத்துள்ளனர்.

பாவத்திற்குத் துணை போவதும் பாவமே. இவ்வடிப்படையிலும் கூட புகைத்தலுக்கு உறுதுணையாக அமையும் சகல நடவடிக்கைகளும் பாவமாகவே அமைகின்றன. பேரறிஞர் அப்துர் ரஹ்மான் அந் - நாஸிர் அஸ் - ஸஃதீ அவர்கள் புகைத்தலுக்குத் துணையாக அமையும் சகல நடவடிக்கைகளையும் ஹராம் என்றே கூறியுள்ளார்.

அப்படியாயின் இதுகால வரை பல்லாண்டு காலமாக புகைத்துப் பழக்கப்பட்ட பலர் உடனடியாக இத்தீய பழக்கத்திலிருந்து விடுபடுவது கடினமேயென்று வாதம் புரியலாம். உண்மை தான் புகையிலை மது, வெதிரொய்ன் ஆகியவற்றை விட பாவனையாளர்களை அடிமைப்படுத்தக் கூடியது. இவ்வாறானோர் சில வழிமுறைகளைக் கையாண்டு படிப்படியாக இத்தீய பழக்கத்திலிருந்து விடுபட வேண்டும். அதேவேளை புகைத்தல் ஒரு பாவம் எனும் உணர்வு உள்ளத்தில் பிறக்க வேண்டும். இப்பாவத்திலிருந்து மரணத்திற்கு முன் பாவமன்னிப்புக் (தவ்பஹ்) கோரி அல்லாஹ்வின் பக்கம் திரும்ப வேண்டும்.

புகைத்தலிலிருந்து விடுபடுவதற்கான சில வழிகள் :

1. புகைத்தலை அல்லாஹ்வுக்காக வேண்டி முழுமையாக நிறுத்தல்.

2. இக்கொடிய பழக்கத்திலிருந்து விடுபட முடியும் என்ற சுய நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். உமது வாழ்வில் நீர் மேற்கொண்ட மிகக் கடுமையான விடயம் ஒன்றை நினைத்துப் பார்த்து இத்தூப்பு பழக்கத்திலிருந்து விடுபடலாம் என்ற முடிவுக்கு வருக.

3. புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புகளையும். அதனை விடுவதால் ஏற்படும் நன்மைகளையும் பட்டியலிட்டு அவற்றை அன்றாடம் வாசிக்க.

4. உமது உறவினர், நண்பர்களுக்கு உடனடியாகவோ அல்லது படிப்படியாகவோ புகைத்தலை விட நீர் எடுத்திருக்கும் நடவடிக்கைகளை தெரிவித்து. அவர்களையும் உமது முடிவுக்கு உறுதுணையாக இருக்கும் படி கேட்டுக் கொள்க.

5. முடிவாக குறிப்பிட தினமொன்றில் புகைத்தலை விட்டுவிடுவேன் என்று ஒரு தினத்தை முடிவு செய்து உமது மனோநிலையை அத்தினத்திற்கு முழுக்க முழுக்க தயார்படுத்துக.

6. உமது புகைப்பழக்கத்தை விட்டு விடல் சம்பந்தமாக நம்பிக்கைக்குரிய வைத்தியர் ஒருவரின் ஆலோசனைகளைப் பெறுக.

7. உடற் பயிற்சி ஒன்றை ஆரம்பிக்க. உமது புகைப் பழக்கத்தை விட இதுவும் உதவியாக அமையும். பல்லாண்டு காலம் பாதிக்கப்பட்டிருந்த உமது உடலுக்கு இது ஆரோக்கியமாக அமையும்.

8. தினமும் 3-5 நிமிடங்கள் வரை ஆழமாக மூச்சை இழுத்து விடும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்க. காற்றை மெதுவாக மூக்கினால் உட்சுவாசித்து. சிறிது நேரம் உள்ளடக்கி வைத்து பிறகு மெதுவாக வாயினால் மூச்சை விடுக.

9. இலக்கம் 8 இல் கூறியவாறு பயிற்சி பெறும் போது கண்களை மூடிக் கொண்டு புகைப் பழக்கமற்றவராக நீர் மாறுவதை கற்பனை செய்க. உமக்கு ஒருவர் சிகரெட்டை நல்கும் போது அதனை மறுப்பவராகவும் ச்கல சிகரெட்களையும் தூக்கி எறிவர் போன்று. புகைப்பழக்கத்தை துறப்பதற்காக உமக்கு ஒரு தங்கப்பதக்கம் கிடைப்பது போன்று கற்பனை செய்க.

10. படிப்படியாக சிகரெட்டின் எண்ணிக்கையை குறைக்க. புகைப்பதை துறப்பதற்கு நீர் முடிவு செய்திருக்கும் இறுதி தினத்திற்கு இடைப்பட்ட நாட்களில் அன்றாடம் நீர் புகைக்கப் போகும் சிகரெட்களின் எண்ணிக்கையை படிப்படியாக குறைக்கத் திட்டமிடுக.

11. உம்மைப் போன்றே புகைப்பழக்கத்தை விடத் தீர்மானித்திருக்கும் பிற சகோதரர்களுடன் இது சம்பந்தமாக ஆக்கபூர்வமான கருத்துக்களை பரிமாறிக் கொள்க.

12. புகைப் பிரியர்களுடனான சகவாசத்தை முழுமையாக தவிர்க்க.

13. புகைப்பழக்கத்தை முற்றாக விடும் தினமன்று உமது எஞ்சிய வாழ்க்கையின் முதல் தினம் ஆரம்பிக்கின்றதென உறுதி கொள்க.

14. புகைத்தலை முற்றாக கைவிட்டதன் பின் அதிகம் நீர் அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்துக. அதிகம் தண்ணீர் பருகுவது உமது உடலின் எஞ்சியிருக்கும் புகையிலையின் பதார்த்தங்களை வெளியேற்ற உதவும்.

15. தேனீர். கோப்பி அருந்துவதைக் குறைத்து பழவர்க்கங்கள் உண்பதை அதிகரிக்க.

16. தினமும் காலை உணவு உட்கொண்டதன் பின் ஒரு கோப்பை தோடை அல்லது எலுமிச்சை அல்லது திராட்சை பழச்சாற்றை உட்கொண்டு வருக. புகைப்பதன் மீதான பிரியத்தை தணிக்க இது உதவும்.

17. கையிலும், சட்டை, காற்சட்டை பைகளிலும் இடம்பிடித்திருந்த சிகரட்டின் இடத்திற்கு வேறொரு பொருளை மாற்றீடாக வைத்து மன நிறைவடைக. இதற்கு பல் துலக்கும் குச்சி (மிஸ்வாக்) சிறந்ததாகும். புகைக்க வேண்டும் என்ற ஆசை ஏற்படும்போது அக்குச்சியை எடுத்து பற்களை சுத்தம் செய்க. எவர் தடுக்கப்பட்ட ஒன்றை அல்லாஹ்வுக்காக வேண்டி விட்டுவிடுகின்றானோ அதைவிட சிறந்த ஒன்றை அல்லாஹ் அவருக்கு மாற்றீடாக வழங்குவான்.

18. புகைப்பழக்கத்தை துறந்ததன் நிமித்தம் நீர் அடையும் ஆத்ம சந்தோசத்தை வடிக்கும் வகையில் முடியுமாயின் ஒரு பாடலை அல்லது கவிதையை இயற்றி அதனை தினமும் படிக்க.

(இன்னும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதம் மீதான போர் போலியானது

சர்வதேச ரீதியில் தனது மேலாதிக்கத்தை நிலை நாட்டுவதற்குத் தாக்குதல் நடாத்த, 09.11 தாக்குதல்கள் அமெரிக்காவுக்குச் சிறந்ததொரு நொண்டிச் சாட்டை கொடுத்தன.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே ஈராக் மீது போர் தொடுக்கப்பட்டது எனப்படினும் அதற்குரிய யதார்த்த ரீதியான காரணங்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன.

அமெரிக்க உயரதிகாரிகள் பலர் சேர்ந்து வரைந்த 'அமெரிக்காவின் பாதுகாப்பினை மீளக் கட்டியெழுப்புதல்' எனும் வரைபுத் திட்டம் 2000ம் ஆண்டு செப்டம்பர் மாதம் உருவாக்கப்பட்டது

வளைகுடாப் பகுதியில் தனது இராணுவக் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்த விரும்பிய அமெரிக்கா சதாம் ஹுஸைன் பதவியில் இருப்பதைத் தனது செயலை நியாயப் படுத்துவதற்கு நல்ல காரணியாகப் பயன்படுத்தியது.

தொழிற்துறையில் பிறநாடுகள் தனது செயற்பாட்டைச் சவாலுக்கு உட்படுத்துவதையோ, உலகளாவிய ரீதியில் முதலிடம் பெற முனைவதையோ அமெரிக்கா விரும்பவில்லை. உலகளாவிய தலைமைத்துவத்தை அமெரிக்கா பெறுவதற்கு ஐக்கிய இராச்சியத்தை ஆக்க கூடிய அளவில் பயன்படுத்த அது விரும்பியது. சதாம் ஹுஸைன் பதவிய கற்றப்படினும். சவுதி அரேபியா, குவைத் போன்ற நாடுகளில் தனது படைகளைத் தொடர்ந்தும் நிலை கொள்ளச் செய்யவே அமெரிக்கா விரும்பியது:

ஈரான் தனக்கு ஈராக்கைப் போன்று சவாலாக அமையும் என அமெரிக்கா கருதுகிறது. சீனாவில் கூட அரசு மாற்றத்தை ஏற்படுத்த விழையும் அமெரிக்கா. தென்கிழக்கில் ஆசியாவில் தன் படைகளை அதிகரிக்க விரும்புகிறது.

விண்வெளியிற் கூட ஆதிக்கம் செலுத்த விரும்பும் அமெரிக்கா உலக அளவில் இணையத்தளம் தனக்கெதிராகப் பயன்படுத்துவதைத் தடுத்து தனது ஆதிக்கத்தை மேலோங்கச் செய்ய விழைகிறது.

வடகொரியா, சிரியா, ஈரான் ஆகிய நாடுகளை அபாயகரமான அரசுகளாக கருதும் அமெரிக்கா, தனது கட்டுப்பாட்டையும் தலைமைத் துவத்தையும் நியாயப்படுத்த இந்நாடு களைச் சாட்டாகக் கூறுகிறது. இது உலகைத் தன் கட்டுப்பாட்டிற் கொண்டு வருவதற்கான அடிப்படை

திட்டமாகும்.

11 நாடுகள் முன்னெச்சரிக்கை விடுத்திருந்தும் செப்டம்பர் 11 தாக்குதலை முன்னிறுத்த அமெரிக்கா எந்நடவடிக்கையும் மேற்கொள்ள வில்லை. நடக்கவிருக்கும் தாக்குதல் பற்றி இஸ்ரேலிய மொஸாட் அமைப்பும். வேறு அமைப்புகளும் விடுத்த தகவல்கள் புறக்கணிக்கப்பட்டன. அல்காயிதா அமைப்பின் உத்தேசத் தாக்குதல் பற்றி 1999ம் ஆண்டிலேயே எச்சரிக்கப்பட்டது.

பயங்கரவாதிகள் பலரைப் பயிற்றுவித்து ஆப்கானிஸ்தானில் குழப்ப நிலை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அல்காயிதா இயக்கச் சதிகாரர் சிலர் பற்றி அடையாளம் காணப்பட்டு உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் பதில் நடவடிக்கை எடுப்பதற்கான அனுமதி உடனடியாக வழங்கப்பட வில்லை என 13.05.2002 தின டைம் சஞ்சிகை கூறுகிறது.

செப்டம்பர் 11 தேசிய தாக்குதல் நடக்கவில்லையெனின் ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்த எமக்கும் சர்வதேச சம்மதத்தை பெற்றிருக்க முடியாது என 17.07. 2002 டைம் சஞ்சிகையில் பிரித்தானியப் பிரதமர் டோனி பிளேயர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் ஈராக் மீது போர் தொடுத்தலை நியாயப்படுத்துவதற்காக 09.11 சம்பவத்துடன் ஈராக்கைத் தொடர்பு படுத்திய சம்பவங்களைக் கண்டு பிடிக்கும் படி 10 சந்தர்ப்பங்களில் றம்ஸ்பீல்ட் C.I.A ஐக் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக C.I.A இனால் எந்த தகவலையும் பெற முடியவில்லையென 13.05.2002 டைம் சஞ்சிகை கூறியுள்ளது.

09.11 சம்பவங்கள் அமெரிக்காவின் திட்டங்களைப் செயற்படுத்துவதற்கான காரணமாகப் பயன்படுத்தப்பட்டன.

09.11 சம்பவங்களை முன்னரே தடுப்பதற்கான வாய்ப்புக்கள் பல இருந்தும் அமெரிக்கா அவற்றை வேண்டுமென்றே கவனியாது இருந்து விட்டதன் பின்னணி உள்நோக்கம் தெளிவாகிறது.

மைக்கல் மெட்ச்சர்
1997 – 2003 பிரித்தானியா சுற்றாடல் அமைச்சர்

அஷ்ரஃபைக் கொன்றவர்கள் புலிகள்தான்!

ஹரீஸ் எம்.பி. தெரிவிப்பு

முஸ்லிம் கல்வி சமூக ஆய்வுகள் மையம் (MESRO) நிறுவனம் கடந்த 05.10.2003 ஞாயிற்றுக்கிழமை ஒலுவில் மகாபொல பயிற்சி நிலையத்தில் இன்றைய அரசியலும் முஸ்லிம்களின் நிலையும் பற்றிய கருத்துப்பாசறை ஒன்றை முழுநாள் நிகழ்ச்சியாக நடாத்தியது. பிரதம அதிதியாக மெஸ்ரோவின் ஸ்தாபகத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமாகிய எச். எம். எம். ஹரீஸ் அவர்கள் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் பலரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினரான எச்.எம்.எம். ஹரீஸ் அவர்கள் உரையாற்றும் போது, தலைவர் அஷ்ரஃபை கொலை செய்தவர்கள் புலிகளே. இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளோடு யுத்தம் செய்யும் போது அஷ்ரஃப் அவர்கள் கொமய்னி போன்றவர்களிடமிருந்து அரசாங்கத்துக்கு ஆயுதங்களைப் பெற்றுக் கொடுத்தமையினால் அஷ்ரஃப் மீது ஆத்திரம் கொண்ட புலிகள் அவரைக் கொலை செய்தார்கள் என்றும் கூறினார். மேலும் அவர் உரையாற்றும் போது. இப்போது இருக்கின்ற பாராளுமன்றம்தான் முஸ்லிம் காங்கிரஸ் அதிகாரத்தோடு இருக்கின்ற பாராளுமன்றம். இது முஸ்லிம் காங்கிரஸின் கடைசிப் பாராளுமன்றம். இந்த நிலைமையில் பாராளுமன்றம் கலைக் கப்படுமேயானால் நடை பெறுகின்ற தேர்தலில் முஸ்லிம்களின் வாக்குகள் சிதறடிக்கப்பட்டு மிகக் குறைவான ஆசனங்களே முஸ்லிம்கள் சார்பாக பாராளுமன்றத்தில் இருக்கும் என்றும். இனி முஸ்லிம்களின் எதிர்காலத்தை தீர்மானிப்பவர்களாக அன்டன் பாலசிங்கமும் J.V.P யும் தான் இருக்கப் போகிறார்கள் என்றும் மிகவும் உணர்ச்சி பூர்வமாக உரையாற்றினார்.

சுமார் 350க்கும் அதிகமான இளைஞர்கள் இக்கலந்துரையாடலில் பங்கெடுத்தனர். இந்தக் கருத்துப் பாசறையில் இளைஞர்கள் சுதந்திரமாகக் கேள்விகள் கேட்கக் கூடிய சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டு அவற்றுக்கு பாராளுமன்ற உறுப்பினர் அவர்கள் பதிலளித்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

சானா – அம்ஜத் கான்
அட்டாளைச்சேனை.

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை

மாவட்ட வைத்திய அதிகாரி மீது மக்கள் புகார்!

அக்கரைப்பற்று ஆதாரவைத்தியசாலையில் தற்போது மாவட்ட அதிகாரியாகப் பணியாற்றும் வைத்தியர் தொடர்பாக மக்கள் இப்போது அதிக புகார்களைத் தெரிவிக்கத் தொடங்கி உள்ளனர். இவ்வைத்தியரின் நடவடிக்கைகளால் சேவை மனப்பான்மையும் தகமையும் பெற்ற வைத்தியர்கள் பலரும் தாதி உத்தி-யோகத்தர்களும் ஊழியர்களும் இவ்வைத்தியசாலையை விட்டு படிப்படியாக அகன்று வருகின்றனராம்.

இம்மாவட்ட வைத்தியர்மீது மக்கள் கீழ் கண்ட குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். உரிய நேரத்திற்கு கடமைக்கு வராமை. அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்தல். நோயாளிகள், உத்தியோகத்தர்களிடம் கடுகடுப்பாக நடந்து கொள்தல். அரசியல் செல்வாக்கை பாவித்தல் என்பன மக்களின் குற்றச்சாட்டுகளாகும். ஆதார வைத்தியசாலையான இவ்வைத்தியசாலைக்கு

நோயாளிகள் வருவதை பெருமளவு தவிர்த்து, அண்டிய வைத்தியசாலைகளுக்கு செல்ல தலைப்பட்டுள்ளனர். இதனால் அப்பிரதேச வைத்தியசாலைகளில் சனநெருக்கடி. மருந்துத்தட்டுப்பாடுகள் ஏற்படுகின்றன. இதனால் அக்கரைப்பற்று பிரதேசத்திலிருந்து செல்லும் நோயாளிகள் அப்பிரதேச வைத்தியசாலைகளில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடாத்தப்படுகின்றனர். இதனால் நோயாளிகள் அதிக மன உளைச்சலுக்கு ஆளாகியும் வருகின்றனர்.

நமது வைத்தியசாலை ஒழுங்காக நடைபெற்றால். நாம் ஏன் வேறு பிரதேச வைத்தியசாலைகளுக்கு செல்ல வேண்டுமென மக்கள் எழும்பும் கேள்வி நியாயமானதாகவே உள்ளது. இது தொடர்பாக இப்பிரதேச மக்கள் ஒப்பமிட்டு சம்பந்தப்பட்ட அரசியல் வாதிகளுக்கும் சுகாதார சேவைகள் மாகாண பணிப்பாளருக்கும் தமது நிலையை எடுத்து விளக்கியுள்ளனர்.

(அக்கரைப்பற்று செய்தியாளர்)

இலங்கையில் சமாதானத்தை நிலைக்க வைக்க

ஈராக்கில் அமெரிக்க யுத்தத்தினை ஆதரிக்கிறார் பிரதமர்

பிரதமர் ரணில் விக்ரமசிங்ஹ அரசியற் சூறாவளியில் சிக்குண்டுள்ளார். ஐ.நா. சபைப் பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர், ஈராக்கின் மீது அமெரிக்கா நடாத்திய தாக்குதலைப் புதினமான முறையில் ஆதரித்ததுடன், உலகின் பொலிஸ்காரர் போன்று செயற்பட்டதையும் ஆமோதித்தார். ஈராக்கின்மீது ஆக்கிரமிப்பு நடத்துவதை விட வேறு மாற்றுவழி ஏதும் அமெரிக்காவுக்கு இருக்கவில்லை என்ற உண்மையினை அவர் ஏற்றுக்கொண்டார்.

ஐ.நா. சபையின் ஒழுங்கான ஓர் அமைப்பு இல்லாத நிலையில் ஓர் உலகப் பொலிஸ்காரனைப்போல் அமெரிக்கா நடந்துகொண்டதை ஆதரிப்பதன் மூலம் பிரதமர் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் செயற்பட்டுள்ளார்.

பிரதமரின் சர்ச்சைக்குரிய இச் செயற்பாட்டை இன்று இந்நாடு முன்னோக்கும் பிரதான சவால், அதனைத் தீர்ப்பதற்கு அவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் என்பவற்றின் பின்னணியில் ஆராயப்படவேண்டும்.

பிரதமர் ஐ.நா. சபையில் ஆற்றிய உரை தொடர்பாக அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றை முன்னெடுக்கச் சிலர் திட்டம் இடுகின்றனர். ஈராக் மீது போர் தொடுத்தமைக்காக ஐ.நா. சபையின் அங்கீகாரத்தைப்பெற அமெரிக்கா தவறியமை. ஈராக்கை ஆட்சி செய்வதற்கான சுமையினைப் பகிர்ந்து கொள்ள முடியாது போயுள்ளமை போன்றன. ஈராக்மீதான அமெரிக்காவின் கொள்கைக்குச் சர்வதேச ரீதியில் சில நாடுகளே ஆதரவு தருகின்றன என்பதைத் தெளிவாக்குகிறது.

அமெரிக்காவுக்கு வெளிப்படையாக ஆதரவு தெரிவித்து இலங்கை உரையாற்றியமை அமெரிக்க மக்களை ஆச்சரியத்துக்கு உள்ளாக்கியிருக்கலாம். எனினும் தொடர்ச்சியான சமாதானம் தொடர்பாக அமெரிக்கா பலமான நிலைப்பாட்டில் உள்ளதால் பிரதமரின் இந்த ஆதரவு நிலைப்பாட்டில் மக்களிடமிருந்து எதிர்ப்பு அதிகம் இராது என நம்பப்படுகிறது. சர்வதேச ரீதியில் அமெரிக்கா கொண்டுள்ள செல்வாக்கு நிலை காரணமாக. அந்நாடு வேறு எந்த நாட்டையும்விட அதிகம் எமக்கு உதவமுடியும்.

சமாதான முன்னெடுப்பை விரும்பும் பெரும்பான்மை மக்கள் பிரதமரின் உரையினை ஆதரிப்பர். பிரதமர் பல நாட்டுத் தலைவர்களையும் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. உள்நாட்டு யுத்தம் மீண்டும் ஏற்படாமல் பாதுகாத்துக்கொண்ட அளவுக்குப் பிரதமருக்கு ஆதரவு இருக்கும். தேசிய மீட்சிக்கும். இணக்கத்திற்கும் இதுவே அடிப்படை. இந்நாட்டைப் பொறுத்தவரை அவர் இத்தகைய போக்கைக் கொண்டிருந்த போதிலும் சர்வதேச ரீதியில் அவரது நிலைப்பாடு "தலையீட்டை" ஆதரிப்பதாக உள்ளது. இது முன்பின் முரண்பட்ட போக்கைக் காட்டுகின்றது.

தனது நாட்டுக்குப் பொருத்தம் என அவர்கருதும் நிலைப்பாடு பிற நாடுகளுக்கும் அதேபோன்று ஏற்புடைதாக வேண்டும். ஏன் எனில் புத்திமானுக்கு முழு உலகமும் ஒரு குடும்பமே என்பது சான்றோர் வாக்கு.

ஜெஹான் பெரேரா – டெய்லிமிரர் 7.10.2003

முஸ்லிம் குரல் கவடு 21
10 ஒக்டோபர் 2003 Muslim Kural صوت المسلم முஸ்லிம் குரல் 13 ஷஃபான் - 1424
181/1, Maligakanda Road, (White Park) Colombo - 10. Tel: 0777-389127, Fax: 01-665831, E-mail: mm-s@eol.lk

இணைந்து பங்காற்றினால் இலக்கை அடையலாம்!

ஒரு சிறு இடைவெளியின் பின் நாம் மீண்டும் சந்திக்கிறோம்! எல்லாப்புகழும் இறைவனுக்கே! 20 சுவடுகளை நமது சமூக அரங்கில் நாம் கடந்து விட்டோம்! மக்களாகிய உங்களின் ஆதரவுடனும் அன்புடனும் நமது இலக்கை நோக்கிய பயணம் தொடர்கிறது.

நமது பத்திரிகை பெருமளவு நிதிநெருக்கடியை எதிர்கொள்கிறது. விளம்பரங்கள் இல்லாமல் பாரிய நிறுவனங்களின் ஒத்துழைப்பு இல்லாமலும் பெரும் நிதித்திட்ட பட்ஜெட்டில் பத்திரிகையை தொடர்ச்சியாக கொண்டு வருவதில் ஏற்படும் பின்னடைவுகளே பத்திரிகை தொடராக வெளிவராமைக்கான பிரதான காரணமாக உள்ளது. பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுவதற்கான ஒரு மாதத்திற்கான நிதித்தேவை சுமார் 4இலட்சம் ரூபாய்களை கொண்டிருக்கிறது. மாதத்திற்கான நான்கு இதழ்களும், ஊழியர் வேதனம் காரியாலய வாடகை, தொலைபேசி, மின்சார, காகிதாதிகள் செலவுகள் என பல்வேறு தேவைகள் பத்திரிகை வளர வளர அதிகரித்து வருகின்றன.

முஸ்லிம்களுக்கான தனி ஊடகத்தேவை குறித்து நம்மில் யாருக்கும் கருத்து பேதம் இருக்க முடியாது என்பது எமது நம்பிக்கை. இந்த நிலையில் ஆகக்குறைந்த வகையில் அச்சு ஊடகமொன்றை வாரத்திற்கு ஒரு தடவை கொண்டு வரும் முயற்சியும் – பல்வேறு சவால்களை எதிர்கொண்டு: முகம் கொடுக்க முடியாமல், பின்னடைந்து விடுமா என்கிற நியாயமான சந்தேகம் எம்மை வாட்டுகிறது.

இந்த யதார்த்தத்திற்கு மத்தியில் நம்மில் பலர் முஸ்லிம் ஊடகங்கள் பற்றிய வெறும் கதைகளிலேயே காலத்தை கடத்தி வருகின்றனர். இதை ஏன் இங்கு குறிப்பிடுகிறோம் என்றால்: மிகக் குறைந்தளவிலான ஒரு வேலைத்திட்டத்தைச் செய்வதற்கே நமது சமூக சக்திகள் தயாராக இல்லாத போது மின்னியல் ஊடகங்களை, தினசரிப் பத்திரிகைகளை உருவாக்குவது எப்படி சாத்தியமாகும் என்கிற நியாயமான கேள்விகள் எமக்கு எழுகின்றன.

"நாங்கள் செய்வோம்" என்கிற வாய் வார்த்தைகள் மிக மேலோட்டமானவைதான். எங்களின் இதுவரையான அனுபவப்படி செயல் திட்டத்திற்கு வரும்போதுதான் அதன் தார்ப்பரியங்கள் புரியும். தயவு செய்து நிலைமையை புரிந்து கொள்ளுங்கள்! ஆர்வமுள்ள சமூக சக்திகள் நம்க்கான பத்திரிகைகளைக் கொண்டு வர முயற்சி செய்யுங்கள்; அல்லது எமக்கு ஆதரவு தாருங்கள் –

பத்திரிகைக்கான நிரந்தர சந்தாதாரர்களாகலாம். பத்திரிகைக்கான முடியுமான நிதி உதவிகளை வழங்கலாம், விளம்பரங்களைத் தந்துதவலாம். இப்பங்களிப்பினை பிறரையும் செய்யத் தூண்டலாம். ஒரு கூட்டு உழைப்பின் மூலமே நமது சமூக வேலைத்திட்டங்கள் சாத்தியமாகும் – தனிமனிதர்களால் சமூக மாற்றத்திற்கான மக்கள் போராட்டத்தை முன்கொண்டு செல்ல முடியாது! அது ஆரோக்கியமான சூழலும் அல்ல.

நமது சமூக அரங்கு பற்றிய பலம், பலவீனம் பற்றி நமக்கு மிகச் சரியான சுய மதிப்பீடு அவசியமாகும். இந்த மதிப்பீட்டினையும் நாம் அதிக பிரயாசைப்பட்டே கற்றுக் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம்! நமது சமூக விடுதலை உயிர்த்து எழும் என்ற மாறாத நம்பிக்கை நமக்குள் ஒளி விடுவதனால்தான், அர்ப்பணமிக்க இப்போராட்டப் பாதையில் நாம் இறங்கி உள்ளோம் – இறைவன் துணை புரிவான்!

ஆமீன்.

தோழமையுடன்
பிரதம ஆசிரியர்.

இந்த இதழில் இருந்து முஸ்லிம் குரலின் விலை 20/- ஆதரவு தாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 181/1, மாவத்தை, கொழும்பு 10 'முஸ்லிம் குரல் பதிப்பகத்தால்' இனால் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.